ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

வல்லூர்

தேவராஜபிள்ளையவர்கள்

பாடிய

# குசேலோபாக்கியாநமூலமும்.

வித்வான் - காஞ்சிபுரம்

இராமசாமிநாயுடு அவர்கள் செய்த

அரும்பதவுரையும்

இவை

கடப்பாக்கம்

வேங்கடசுப்புமுதலியார் குமாரர்

முருகேசமுதலியாரால்

சென்னை :

பண்டித மித்திர யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1904.

இதன் விலை -அணா 6.

## விளம்பரம்.

குசேலோபாக்கியானம் மூலமும்உரையும் படங்களுடன் விலை ரூபா. 3—0—0.

ஸ்ரீசிவமஹாபுராணம் வசனம்.படங்களுடன் விலை ரூ. 5-0-0.

ஒருதுறைக்கோவை உரையுடன் அச்சிட்டுக்கொண்டு வருகிறோம்.

26. நெ. வெங்கையர்தெருவு, சென்னை.

க. முருகேசமுதலியார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

# குசேலோபாக்கியானம்.

## பாயிரம்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடலுடைப்புவிவாழுயிரெலாங்களிக்கக்காத்தருள்கண்ணனோடொ-
ருநூ, லடலுறப்பயின்றுபின்னவனருளாலருந்திருப்பெறுகுசேலன்
றன், மிடலுடைக்காதைவிளம்பிடவூறுவிரவிடாதளித்தருள்புரியு, மட
லுடைக்கடுக்கைச்சடைமுடிக்கபோலமதக்கயமழவிளங்கன்றே. (௧)

திரு - ஐசுவரியம், காதை - சரித்திரம், ஊறு - தடை, கடுக்கை - கொன்றை.

குடத்தியர்துகிலைக்கவர்ந்தவன்முனிவர்கோதையர்மூரல் பண்ணி
யங்க, ளிடக்களித்துண்டோனிந்திரனேவவெழிலிகள்பொழிந்தகன்ம
ழையைத், தடப்பெருங்கோவர்த்தனங்கரத்தேந்தித்தடுத்தவன்கமலை
வாழ்மார்பன், வடப்பசுந்தளிரினிதுறைகண்ணன்மலர்தலையுலகெ
லாங் காக்க. (௨)

குடத்தியர் - இடைச்சியர், மூரல் - சோறு, எழிலிகள் - மேகங்கள்.

வேய்ங்குழலிசையாம்வலியமந்திரத்தின்மேன்மைசொல்யாதவர்கு
லத்துப், பூங்குழன்மடவார்தம்மைத்தன்வசமாப்புரிந்துவேணூற்படிக்
கலவி, யாங்கவர்பாற்பன்னாளியற்றிடசீராழியங்கரதலக்கொண்டல், வா
ங்குநீர்ப்பரவையுலகுயிர்க்கென்றும்வழங்குகதிருவொடாயுளுமே. (௩)

வேணூல் - கொக்கோகம்.

மலர்விழித்தேவகிக்குநன்மகனாய்மகிதலத்தவதரித்ததன்பின்
பலர்புகழ்ந்தேத்துநந்தகோபாலன்பனிமதியானனயசோதை
யவர்மனங்களிப்பவாடுறாஉட்பாலனாகியவையனேநன்று [றே.
வலர்பராவுறப்பல்வளங்களுமுயிர்க்குவழங்கியாண்டருள்செய்வனன்

ஆனனம் - முகம்.

குடம்புரைசெருத்தற்கோவுமந்தணருங்குறைவறுசுபம்பெறவென்று
மிடங்கொள்பல்லுலகுமிகுசுகமுறுகவென்றுமாரியருமோனியருந்
திடம்படவெண்ணுமெண்புரந்திடுகதிரைக்கடல்கிழியமத்தெறிந்து
மடம்படுமவுணர்ச்சவட்டியொள்ளமுதம்வானவர்க்கூட்டியமுதலே.

செருத்தல் - மடி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரும்புமியாம்வணங்கும்பதக்கடவுளேவிளங்குமாவினைமிக்க
பெரும்புகழ்ச்சிசான்மறையவர்குழாத்தினைப்பேணுகவெனவேத
மரும்பும்வாக்கியமுந்தொழிலாறினோரறையுமாசிகளோங்கிப்
பரம்பவெண்ணுறாஉம் பெரியவரெண்ணமும்பாலிக்கநெடுமாலே.

பாலித்தல் - காப்பாற்றுதல்.

மேற்படி - வேறு.

இளமழக்கன்றையூட்டியெஞ்சியதீம்பால்வெள்ளம்
வளமலிகானவைப்புமருதவைப்பாகப்பெய்யுந்
தளர்வறுசெருத்தலாக்கடங்குரச்செந்தூள்குஞ்சி
யளவறவடைந்துசேப்பவவற்றினைப்புரந்தோன்வாழ்க. (௭)

வைப்பு - நிலம், குரம் - குளம்பு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இமைத்தலில்விண்ணோர்மடந்தையர்சமழ்ப்பவிலங்குறுமிளநலவெழி[லா
ரமைத்தடமென்றோளாய்ச்சியர்விழியாமம்புயத்தேமலர்மலரச்
சமைத்தபூண்மார்பன்றேவகியீன்றதநயன்பேரேற்றவன்மல்லைக்
குமைத்தருள்கண்ணன்பேசருஞ்சீர்க்குணாகடலுலகில்வாழியவே.

சமழ்த்தல் - நாணல், அமை - மூங்கில், குமைத்தல் - கொல்லல்.

கலிவிருத்தம்.

தாவகிச்சிரத்தினிற்சரண்வைத்தாடினோன்
பூவகிற்கரும்புகைபோர்த்தபொற்குழன்
பாவகிர்க்கருங்கண்வேய்வாட்டுந்தோட்டுணைத்
தேவகிதநயனைச்சிந்தைசெய்குவாம். (௮)

அகி - பாம்பு, வேய் - மூங்கில்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏழிரண்டென்னும்புவனங்காத்தளிப்போனெழில்வசுதேவன்றன்
மைந்தன், விழியங்கனிவாய்க்கொடியழன்மகட்குமென்றுகிலளித்தவை

ங்கொண்ட, ருழிருங்கூந்தற்பூவனையுயிரைச்சவட்டினேன்றவாநலமுண்டோன், பாழியம்புயத்துச்சேதிபற்றுணித்தபண்ணவன்மலரடி பணிவாம். (௧௦)

அழல்மகள் - திரௌபதி, தவானலம் - காட்டுத்தீ.

கலிவிருத்தம்.

மாதவர்பன்னியர்மனமென்றுமனைப்
போதகத்தனமெனப்பொலிந்தமாண்பினா
னாதவர்கோடியரழுங்குகாந்தியான்
பாததாமரைமலர்பணிந்துபோற்றுவாம். (௧௧)

ஆதவர் - சூரியர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

ஆர்ந்தகழலிறைக்குமதிற்புரத்தரசுகரக்கொடிகட்கரிவாளாகிக்
கூர்ந்தமதியிலாக்கஞ்சன்றாசுகொடுவருமீரங்கொல்லிவாழ்நா
டீர்ந்திடச்செய்விதியாகிக்கற்றுக்கட்குரிஞ்சுசெறிதறியுமாகி
வார்ந்தகுழலாய்ச்சியர்க்கோர்வேளாகிநின்றானைவழுத்தல்செய்வாம்.

ஈரங்கொல்லி - வண்ணான்.

சீராருந்திரிசிராமலையின்வளர்ந்தெக்காணுஞ்சிறப்பினோங்கு
மேராருங்கலைக்கடன்முற்றுண்டாங்குநின்றெழீஇயென்னிவைக
வாராருந்தடநிரம்பமனப்பறப்பினினியதமிழ்மாரிபெய்த
பேராருமீனாட்சிசுந்தரதேசிகமுகிலைப்பேணிவாழ்வாம். (௧௩)

பறம்பு - மலை.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவபரஞ்சுடரினிணையடிமலரைத்திரிகரணத்தினும்வழாது
யவமறத்தினமும்வழிபடுகுணாளன்பகர்திரிசிரபுரத்தலைவன்
சிவமுறுதென்சொலைந்திலக்கணத்திற்றெளிவுறச்சிறியனேற்கருளு
நவமுறுபுகழ்மீனாட்சிசுந்தரவேளுண்மலரடிமுடிபுனைவாம். (௧௪)

திரிகரணம் - மனம் வாக்கு காயம்.

மறைமுழுதுணர்ந்தவியாதமாமுனிவன்மைந்தனாஞ்சுகப்பெயர்முனிவன், கறைதபுசெங்கோற்பரிட்சித்துமன்னன்களிப்பொடுகேட்டிடப்புகன்ற, நிறைபுகழ்ப்பாகவதத்திலோர்கதையாய்நிலவியகுசேலன்மாக்கதையைத், துறைகெழுசெஞ்சொற்றீந்தமிழ்ப்பாவாற்சொற்றிடலுற்றனென்மன்னோ. (௧௫)

தபுதல் - கெடுதல், கறை - குற்றம்.

கனைகடன்முகிலைப்பார்த்தெனிருவனாக்கழிப்பிமன்னுயிர்க்கெலா மினிதாப், புனையெனக்கேளாதெனினுமப்முகிலேபுரியுமென்செய்யுளி ன்புகரா, நினைவருமுழுநூலுணர்ந்தவராகற்றிநீடுலகினுக்கினிதாக்க, வனையமரையான்கேளாதிருந்திடினுமதுபுரிந்திடலவர்க்கியல்பே. (கசு)

கனைத்தல் - ஒலித்தல், புகர் - குற்றம்.

## சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாமேவுமணிமார்பன்மலரடிகண்மருவுதிருமனத்தினோன்பொற்
கோமேவும்பொழிற்றிருவூரதிபதிசீர்க்கருணீகர்குலவிசேடன்
பாமேவுபெருஞ்சீர்த்திமிகுநாராயணவள்ளல்பயந்தமைந்தர்
தேமேவுமலர்மாலைக்கோவிந்தமுகில்சீநிவாசச்செம்மல். (கஎ)

பயத்தல் - பெறுதல்.

இருவருநற்குசேலமுனிசரித்திரத்தையுலகுள்ளோரின்பமெய்த, வொருவருமின்சுவைத்தமிழிற்பாடியருளுகவெனவுள்ளுவந்துகேட்பப் பொருவருசெஞ்சொற்சுவையும்பொருட்சுவையுமணிநலமும்பொலிய வார்த்தி, மருவருகாப்பியவுறுப்புமயங்கவுறாமீளாந்துவழுவும்வீட்டி.

ஆர்த்தி - விருப்பம், உறுப்பு - அவயவம்.

இனிதமிர்தசுவையினுமிக்கஃதெனின்சுவையதெனவியற்றினுனு ற், றனிதகிரைதவழ்மனைவல்லூர்வீராச்சாமியண்ணறந்தமைந்தன், கனி தருமநல்லொழுக்கங்குணமனைத்துமோருருக்கொள்காட்சிபோல்வான் புனிதமிகுகலையுணர்ச்சித்தேவராசக்குரிசில்புலவரேறே. (கஅ)

தனிதம் - முழக்கம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏராருஞ்சகாத்தமாயிரத்தெழுநூற்றெழு பத்திரண்டினிகழ்சௌ மியநல்லாண்டுதனுத்திங்கள், வாராருமிருபத்துநான்காநாள்பரிதிவார மொன்பான்மிதிசோதிசிங்கவிலக்கினத்திற்,பேராருங்குசேலமுனிதன துசரித்திரத்தைப்பெட்பினினிதருந்தமிழினியல்செறியப்பாடித், தாரா ரும்புயத்தேவராசவள்ளலான்றோர்,தழைழுந்துவகைபூப்பவரங்கேற்றின னுண்மகிழ்ந்தே. (உ0)

தனுத்திங்கள் - மார்கழிமாதம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்வளர்குசேலோபாக்கியானத்தைச்செந்தமிழ்ப்பாவினிற்செய்கென் றார்வளர்திருவூர்ச்சீநிவாசேந்திரனார்வமிக்கூர்தரப்புகலக்

கார்வளர்வல்லூர்த்தேவராசப்பேர்க்கவிச்சக்கரவர்த்திசெய்கவித்தா
னேர்வளரியன்முற்றுணர்ந்தநற்புலவரின்புளங்கொண்டிடாதோ.

ஆர்வம் - ஆசை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தாமநறுமுளரிதுயல்வருதடங்கோளொழில்வீராச்சாமியீன்ற
காமருசீர்த்தேவராசப்பெரியோன்பல்கலைதேர்கவிஞருள்ள
மேம்படுறக்குசேலசரிதம்பகருநற்றிறன்முனைவண்ணியன்றே
வாமனன்றிண்டோள்ககுபந்தாவவுடல்பூரித்தான்வையத்தீரே. (உஉ)

ககுபம் - திசை.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருமறைநான்குமன்புடனேத்தவரவணைதனில்விழிவளர்வோன்,
றிருவருள்பெற்றகுசேலமாமுனிதன்சீர்வளர்சரிதநன்குரைத்தான்,பெ
ருவளமோங்குந் தொண்டைநன் னாட்டிற்பிறங்கும்வல் லூரினில்வாழ்
வோன், பருவளர்மாலைத்தேவராசேந்திரன் வயங்குபல்கலையுணர்ந்த
வனே. (உ௩)

விழிவளர்தல் - நித்திரை செய்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பார்புகழுங்குசேலமுனிசரிதமதைத்தமிழ்ப்பாவிற்பகர்ந்தான்றூய
நீர்தவழுநெடுஞ்சடிலச்சிவபிரான்பதயுகளநிலவுநெஞ்சன்
கார்பொலியுஞ்சோலைபுடையுடுத்தொளிர்வல்லூராளிகவிஞர்போற்றுஞ்
சீர்திகழுங்கருணீகர்குலத்துதித்ததேவராசேந்திரன்மன்னே. (உ௪)

யுகளம் - இரண்டு.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சந்ததமுற்றவிருந்தினையோம்புந்தக்கவேங்கடகிருட்டினப்பேர்க்
கந்தவேள்பின்வந்துதித்தவன்றிருவூர்க்காவலன்முட்டொதியசுந்தாட்
கந்தநற்கமலபாலைசூழ்தோளான்கலையுணர்சீநிவாசப்பே
ரிந்திரன்வேண்டவெழிற்றிருமார்பனிணையடிப்பூசனையியற்றி. (உ௫)

சந்ததம் - சதாகாலம்.

இல்லறத்திருந்தும்புளிப்பழமேய்ப்பவினையைந்தவுட்டுறவடைகுசேல
னல்லதிஞ்சரிதநாவலருள்ளநனிமகிழ்தரத்தமிழ்ப்பாவாற்
பல்லவச்சோலைசூழ்வல்லூராளிபகருந்தேவராசப்பேர்
வல்லவன்புரிந்ததிறத்தையிற்றென்னவகுப்பவருலகினிலெவரே. (உ௬)

ஏய்த்தல் - நிகர்த்தல், உட்டுறவு - மனத்துறவு.

பாயிர முற்றிற்று.

குசேலமுனிவர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

முதலாவது

# குசேலர்மேல்கடலடைந்த

## அத்தியாயம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகெலாம்புகழநாளுமுயர்மதிகுலத்திற்றோன்றி
யலகில்பல்லூழியுமின்பமடையவொண்குடைநிழற்றி
யிலகுசெங்கோல்கைக்கொண்டவெழிற்பரீட்சித்துவேந்தே
நலமுறக்கதைகேளென்றுநற்றவச்சுகன்சொல்வானால். (க)

மதிகுலம் - சந்திரகுலம்.

குத்தரங்குடிகொண்டாங்குக்கொழும்பொன்மாளிகைகளோங்கிச்
சுத்தரங்களவிலார்கடொகுப்புறவின்பநல்கி
யித்தரங்கஞ்சூழ்பூமிக்கெழின்முகமாகியென்று
முத்தரமதுரையென்னுமொருநகர்விளங்காநிற்கும். (உ)

குத்தரம் - மலை, தரங்கம் - கடல்.

அந்நெடுநகரின்பாங்கரந்நலாருடிநீத்த
தந்நெடுமணிக்கலங்கடமறுகுற்றுமுற்றத்
துன்னியவிருளைமேயத்துறக்கமென்றமரர்நாளு
மன்னியவிமைக்குஞ்சீர்த்திமாநகரவந்தியுண்டால். (ங)

பாங்கர் - பக்கம், கலங்கள் - ஆபரணங்கள், மறுகு - தெரு.

செந்தமிழ்ப்பழுத்தநாவிற்றீஞ்சுவைப்புலவராலு
மந்தமில்சேடனாலுமறைதரமுடியாச்சீரச்
சுந்தரநகர்வளப்பஞ்சொலவெனக்கடங்காவேனுஞ்
சிந்தையிற்களிப்புத்தூண்டச்சிறிதணிந்துரைப்பல்கேண்மோ. (ச)

அணிந்துரைத்தல் - அலங்கரித்துச்சொல்லுதல்.

துறைதுறைதோறுஞ்சங்கஞ்சூன்முதிர்ந்துயிர்த்தமுத்த
மறைபுனல்வாரியெக்கராக்கிடவரப்பிலேற்றித்
தறைசமஞ்செய்துவித்தித்தண்புனன்மள்ளர்பாய்ச்சக்
கறையடிமாய்க்குஞ்செந்நெற்கதிர்க்குலைச்செறுக்கள்சூழும். (ரு)

எக்கர் - மேடு, கறையடி - யானை.

கலிநிலைத்துறை.

வாவிமல்கியவனசமாமலர்பொழிதேனுங்
காவின்மல்கியகரிசறுமலர்கொழிமதுவும்
பூவின்மல்கியநதியெனப்புரண்டுமாலென்னத்
தாவிவானளாஞ்சாற்றருநெல்வயல்வளர்க்கும். (௬)

கரிசு - குற்றம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செம்பொனால்வெண்பொனால்விற்செறிபலமணிகளாற்செய்
தம்பொன்மாநகரத்துள்ளாலமைத்தனர்வேண்டாரற்று
ணம்புநாம்புறத்தேநிற்றனன்றெனக்கொண்டாற்போலும்
பம்புவார்கதலிகந்திபைங்கழைபொலியுங்காட்சி. (௭)

வெண்பொன் - வெள்ளி, கந்தி - கமுகு, கழை - கரும்பு.

நெய்க்கருங்கூந்தன்மின்னார்நீர்குடைந்தகற்றுநான
மெய்க்கவின்மறைத்தசாந்தம்விண்ணுலாநதியுநாறச்
செய்க்கருங்குவளைமேய்ந்ததிண்மருப்பெருமையாய
வைக்கழுக்கடையேபோன்மேல்வாளைபாய்வாவிமல்கும். (௮)

நானம் - கஸ்தூரி, கழுக்கடை - ஈட்டி.

கலிநிலைத்துறை.

புள்ளவாமலர்க்கணையினனன்னபொற்பினரு
மெள்ளரும்புகழிரதியையேய்க்குமாதர்களு
முள்ளமிக்குவந்துடங்குகைகோத்தனர்சென்று
வெள்ளநீர்துளைந்தாடுறாஉமெழில்வளமேவும். (௯)

பொற்பு - அழகு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேதினிமுளைத்தவாற்றால்விண்ணவர்க்கெதிருபாக்குற்றுங்
கோதுவிற்பத்திரங்கொண்டுறுதளிராற்சிவந்து
தாதிவர்தண்பூங்கற்பத்தருக்குலம்விதிர்விதிர்ப்பத்
தீதறுசுவர்க்கநாட்டைத்தினமுஞ்சென்றுரிஞ்சுஞ்சோலை (௧௦)

விதிர் விதிர்த்தல் - நடுநடுங்கல்.

பொங்குபல்லவப்பூஞ்சோலைபுதுமதுக்கனிகள்காய்க
டெங்கிளநீர்கண்மற்றுந்தேவருமரம்பையாரு
மங்கிருந்தயிலநாளுமளித்திடுநல்லூழுற்றோ
ரெங்கிருப்பினுந்தாம்வேட்டயாவையுந்துய்ப்பரன்றே. (௧௧)

பல்லவம் - தளிர், அயிலல் - உண்டல்.

### கலிநிலைத்துறை.

வண்டர்பாண்செயமதுமலரசும்புபூம்பொழிலில்
வண்டலாட்டயர்பகளிர்தம்வளம்பொதிகிளவி
வண்டளிர்ச்சினைமாங்குயில்பயிலுறுமயிலவ்
வண்டலர்ந்தகையாருருச்சாயலைவௌவும். (கஉ)

கிளவி - சொல்.

### கலிவிருத்தம்.

மஞ்சினமெனமடவார்தமோதிகண்
டஞ்சிலநடமயில்கள்களிகொண்டாடுவ
விஞ்சிருட்பூம்பொழின்மேவுகோகில
மஞ்சிவாய்திறந்திடாதழுங்கிச்சாம்புமால். (கங)

ஓதி - கூந்தல், கோகிலம் - குயில்.

ஏவுலாமிருவிழியிபத்தின்மென்னடைப்
பூவலர்கருங்குழற்பொன்னனார்பயில்
பாவுளார்வண்டினம்பருகத்தேன்பொழி
காவுசூழ்வனப்பினைக்கணிக்கலாகுமோ. (கச)

இபம் - யானை, வனப்பு - அழகு

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெண்மணிகொழிக்குங்கடனெடுநகர்மேல்வெகுண்டுமுற்றியதென
வொளிருந், தண்மதுப்பிலிற்றுந்தாமரையாதிததைந்ததாழ்கிடங்குமற்
றதனை, யண்மையினகர்கண்டஞ்சியுட்செல்லாதாற்றியபெருந்தடைகடு
க்க, வொண்மயிலாதியவனர்செய்பொறிகளுறுபெருமதிலுஞ்சூழ்ந்தன
வால். (கரு)

வெண்மணி - முத்து, பிலிற்றல் - சிந்துதல்.
ததைதல் - நெருங்குதல், கடுத்தல் - நிகர்த்தல், பொறிகள்-யந்திரங்கள்.

### கலிநிலைத்துறை.

மாதர்பண்பயின்றாடூஉமணியரங்கவண
காதளாவியகுழையினார்கண்வலைகடந்த
மாதவத்தினோர்மன்னுறுமடங்களுமவண
வோதநீருலகோதுறுசாலையுமவண. (கசு)

அரங்கு - நாடகசாலை.

### கலிவிருத்தம்.

வண்டிமிர்குழலினார்வதனப்பேரெழிற்
கெண்டகுமுழுமதியெதிர்ந்தேகுதல்
கண்டுமைதீட்டறிகுறிமையக்காசினி
மண்டியகளங்கெனமடங்கியோதுமால். (கஎ)

ஒழுங்குறுசுடர்களையுற்றுவிக்குற
விழுங்குறுபாப்பினம்விட்டொளித்திடல்
செழுங்கதிர்மாடமேற்சென்றுலாமயி
லழுங்கியசாயலார்க்கஞ்சிப்போலுமால். (கஅ)

கிஞ்சுகமங்கலார்கிளக்குந்தேமொழிக்
கஞ்சிடாதெதிர்த்தலினவற்றைநாடொறும்
வெஞ்சிறையிட்டெனவிளங்குபன்மணிப்
பஞ்சரத்திருவினர்பாவையன்னவர். (கசு)

கிஞ்சுகம் - கிளி.

வெஞ்சிறைப்பட்டவர்தமக்குவேண்டிய
வஞ்சுவையுணவறவரசளித்தல்போல்
வஞ்சியரச்சுவாகதங்கள்வாய்மடுத்
துஞ்சிடக்கனிமுதலுணக்கணல்குவார். (உ0)

சுவாகதம் - கிளி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிறைபடுதம்மைநீத்தல்செய்தனல்லறனுமென்னுக்
கறைதபுமொழியின்வேண்டல்கடுப்பப்பைஞ்சிறையகிள்ளை
நிறைமலர்க்குழலாருள்ளநெகிழ்தரவினியதீஞ்சொ
லறைதருமவருநீக்கியங்கையினேந்துவாரே. (உக)

கலிநிலைத்துறை.

விண்டேவரிமைத்திலர்நோக்கவிளங்குபொற்பிற்
பண்டங்கணிவந்துயர்பற்பலவாவணத்தின்
றண்டாதபெரும்புகழிற்றெனச்சாற்றவல்லோ
ரொண்டாரணியிலிலையென்னினுமைப்பதென்னே. (உஉ)

ஆவணம் - கடைவீதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

துறவறத்தடைந்தோரில்லந்துறந்தமைக்கிரங்கவில்லத்
துறவிருக்கின்றமாந்தருள்ளனவெல்லாமீந்து
பிறர்நகைபொருமலந்தப்பெருந்துறவடையப்போகந்
திறமுறவிற்குமின்னார்செறிதருந்தெருக்கள்பல்ல. (உங)

வருவிருந்தெதிர்கொண்டேற்றுமலர்முகமினிதுகாட்டி
யருமைசான்முகமன்கூறியறுசுவையுணகன்கூட்டித்

திருமலிகவிழுனோர்க்குச்செம்பொன்முன்னுணநல்கிப்
பெருமைசான்றொழுகும்பின்னோர்பெருகிவாழ்தெருக்கள்பல்ல.

பின்னோர் - சூத்திரர்.

அன்னியர்பொருளுந்தத்தமரும்பொருளென்னவுள்ளத்
துன்னியொன்றனந்தமாகவுஞற்றும்வல்லபத்தாற்கண்ட
வென்னருமிறும்பூதெய்துமெழின்மிகும்வணிகரென்று
மன்னிவாழ்வெய்துமிக்கமறுகுகள்பலவயங்கும். (௨௫)

தேசினிற்சிறந்தோர்செல்வத்திறத்தினிலுயர்ந்தோராற்றும்
பூசலில்வென்றிகொள்ளும்போர்ப்புலியன்னார்தூய
வாசமார்மாலைமார்பர்மழையெனவிரவலாளர்க்
காசறுதானமீயுமரசர்வாழ்மறுகுமோர்பால். (௨௬)

மறுவறுமுத்தீயென்றும்வளர்ப்பவரைந்தென்றோதுந்
தெறுபுனைவித்தமேலோர்செய்யமாறனுறுசெங்கேழ்
நறுமலருந்திபூத்தநாதனேயனையதூய
ரறுதொழிலாளர்வீதியவண்பலவயங்குமன்றே. (௨௭)

முத்தீ - ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, காருகபத்தியம்.

தேரொலிபுழைக்கைமாக்கள்சிறிசைபரிமாவோதை
வாரியைகழற்கால்வீரர்மணிப்புயந்தட்டுமார்ப்பு
நாரியர்சிலர்பின்கம்பைநரப்பியாழரவமின்ன
சேரவொன்றாகியேழுதிரைகள்வாயடக்குமன்றே. (௨௮)

புழைக்கை மாக்கள் - யானைகள்.

## கலிநிலைத்துறை.

அளகைவேந்தனையனந்தனைமதனனையரிய
பளகில்செல்வத்தாற்குறைவறுகல்வியாற்பகர
வளவின்மேனியின்வனப்பினால்வென்றமற்றவர்தந்
தளர்வில்சீர்த்தியைச்சாற்றிடவல்லனல்லேனே. (௨௯)

வனப்பு - அழகு.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வெள்ளியகோட்டுவேழவென்றிவன்றிருகுகோட்டுத்
துள்ளியதகரின்வென்றிதுணர்க்கவிர்சூட்டுமுட்காற்
புள்ளியசேவல்வென்றிபுகரிலாக்குறும்பூழ்வென்றி
யுள்ளியபிறவுநாளுமுலப்பறுவீரர்கொள்வார். (௩0)

வேழம்-யானை, தகர்-ஆடு, சூட்டு-உச்சிக்கொண்டை, குறும்பூழ்-காடை.

### கோச்சகக்கலிப்பா.

தோடலர்நந்தனவனங்கடுறைமலர்பன்மலர்வாவி
நீடொளியகோபுரங்கணெடுமதிற்பொன்மாளிகைக
ளூடைவர்கடுதிமுழக்கநாடொறுமின்னியமுழக்க
மாடலொடுபாடலறாவாலயங்கள்பலவாங்கண். (௩௧)

### கலிநிலைத்துறை.

தரங்கவாரிதிதுயில்பரந்தாமனைமாந்த
ரிரங்கும்வெண்டிரைவாவியின்மூழ்கிநந்தனத்திற்
குரங்கவார்சினைமல்கியகொழுமலர்நாளுங்
கரங்கொடன்புடனருச்சிப்பர்காலங்கடோறும். (௩௨)

தாத்திரி - உலசம்.

### கோச்சகக்கலிப்பா.

இன்னவளம்படைத்தெவருமிறும்பூதுகொண்டடையப்
பன்னரியவுத்தமத்திற்பயிலுநால்வகைக்குடியுந்
துன்னுபுறக்குடிமூன்றுந்தொக்குறையவிளங்கிடுமப்
பொன்னகருக்கணித்தாகப்பொலிபெருங்காடொன்றுளதால்.

மந்தாரங்கர்சோலம்வாகைசேவெட்பாலை
சந்தார்பிடாவருளஞ்சண்பகங்கூவிளநாக
நந்தாதவேங்கைஞெமைநமைவருக்கைமுருக்ககில்யா
சிந்தாதவழைபுன்னைசிந்துவாரஞ்செருந்தி. (௩௪)

சிந்துரமாமராவராகசெங்கடம்பேழிலைப்பாலை
குந்தமாதளைஞாழல்குங்குமமுந்திரிகையா
கந்திகளாவிளாதென்னைகடுக்கைதேக்கோமைமுத
லந்தில்பலசெழுந்தருக்களடர்ந்தொளிருமவ்வனமே, (௩௫)

மலரினிழிகொழுந்தேனும்வைக்கனிநற்செழுந்தேனு
மலகில்பலகனித்தேனுமறைகலுழிப்பெரும்புனலு
முலவையிரண்டுடையகளிற்றூறியமும்மதப்புனலுஞ்
சலசலவென்றோட்டெடுத்துத்தடங்கடலேழெனப்பெருகும்.

இறால் - தேன்கூடு, கலுழி - கான்யாறு, உலவை - கொம்பு.

விளங்கனியுமாங்கனியுமிளிர்பாகற்செழுங்கனியுங்
களங்கனியும்விளங்கருணைக்கனியுநரந்தக்கனியும்
வளங்கனியுமிவைமுதலவானோரும்வாயூறி
யுளங்கனியும்வகைபழுத்தவொண்சினையதருக்களெல்லாம்.

அருணைக்கனி - எலுமிச்சம்பழம்.

சந்தநறுமலர்ச்சேக்கைச்சதுமுகனுருகுநாளு
மிந்தவனக்கழிவின்றென்றியாவருநன்கெடுத்துரைப்பக்
கந்தமலர்தளிர்துறுமிக்காய்கனிபிஞ்சுகணீங்க
மந்திகளுமறியாதமரங்கள்பலவோங்கியவால். (௩அ)

## கலிவிருத்தம்.

இறவுபாய்கடலேறுவர்நீங்குற
நறவுபாயுநறுமலர்க்கொம்பர்விண்
ணுறவுகொண்டிடவுற்றவக்கானிடைக்
குறவருமமருள்குன்றமொன்றுண்டரோ. (௩௯)

மஞ்சுலாவுமம்மாமலைச்சாரலில்
விஞ்சுவிற்றொழின்மேவியவேட்டுவர்
தஞ்சிறாருந்தரக்கின்பறழ்களுங்
குஞ்சரக்குழக்கன்றுங்குழுமுமால். (௪0)

தரக்கு - புலி, பறழ் - குட்டி.

உன்னுநற்கனிகந்தவுணவுண்டும்
பண்ணுதோலுடுத்தும்படருங்குழு
றன்னுபாறுதொடர்தரக்கட்டியு
மன்னுவேடருமாதவர்போல்வரால். (௪க)

சிங்கம்யானைவெஞ்சீற்றப்புலியுழை
மங்கருந்திறன்மன்னுகுடாவடி
துங்கயாளிதுறுமியெழுப்புறும்
பொங்குமோதைபுவனம்பொதியுமால். (௪உ)

குடாவடி - கரடி.

வாரணத்தின்மருப்புகுமுத்தமுங்
காருலாவுங்கழையுகுமுத்தமுஞ்
சீரளாவித்திகழ்கதிர்வார்கடற்
பாரெலாமிருளோப்பிப்பரக்குமே. (௪௩)

மருப்பு - கொம்பு, கழை - மூங்கில்.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பருமணிச்சுடிகைப்பஃறலையரவம்படரொளிமேருவைப்பொதிந்தாங்
கிருளறவிமைக்குங்கதிரொளிசமழ்ப்பவெறிகதிர்மணிபலவேந்தி
மருவுவெள்ளருவிபொதிதரவான்றோய்மால்வரைசெறியமிக்குயர்ந்த
பெருவரைமுடியிலுள்ளதோன்றளவாப்பெருந்தவமுனிவர்சஞ்சேரி.

அருமறைமுழக்கும்வினைதபும்யாகவழற்கணன்மந்திரமுழக்கும்
பெருமைசால்சுரரைக்கூயவியளிக்கும்பெருமுழக்கமுமவரேற்குஞ்
செருமலிமுழக்குமுண்டபினுசிசெப்பிடுமுழக்கமுமொன்றிக் [ம்.
கருநிறக்கரைகொன்றிரங்கெறிதரங்கக்கடன்முழக்கெழாவகையடக்கு

தருப்பைகொய்குநருஞ்சமிதைதேடுநருந்தழைந்தமாவிலைபறிக்குநரு
விருப்பொடுநல்லானைந்துகூட்டுநரும்வியன்பவித்திரமுடிகுநரு [ம்
மருப்புமென்மலர்நந்தனவனந்தன்னையடைந்தெடுக்குநருநாலாய்ந்த
திருப்பொலிபெரியோர்க்குபசரிக்குநருஞ்செறிதரவிளங்குமச்சேரி.

**ஆனைந்து-பஞ்சகவ்வியம், அவை கோமயம், கோமூத்திரம், பால், தயிர், நெய் என்பன.**

சரியையரொருபாற்கிரியையரொருபாற்சார்ந்தயோகத்தின ரொருபாற், பெரியஞானத்தினிற்பவரொருபாற்பெட்பொடு போதிப்பாரொருபால், விரிதருமோத்துக்கற்பவரொருபான்மெய்ப்பொருள்பொய்ப்பொருளிரண்டுந், தெரிதரவிசாரஞ்செய்பவரொருபாற்றிகழ்தரப்பொலியுமச்சேரி. (சஎ)

**ஓத்து - வேதம்.**

ஆங்கதிற்குசேலப்பெயரினேன்முனிவரருங்குலத்தினியபாற் கடலிற், பாங்குறு மதிபோற்றோன்றினேன்வண்டர்பாண்செயமணநறுக்கொழிக்கும், பூங்கமலத்தில்வாழ்பொறியிலகும்பொருப்பனதிறத்துமால்பதத்தைத், தாங்குறுமுளத்தன்பொறிகடிச்செயலிற்சார்வுறுதடக்குறுமேலோன். (சஅ)

**பொறி - திருமகள்.**

தன்னுயிர்போலமன்னுயிர்புரத்தல்சான்றவர்க்குறுதியென்றென்று
மன்னியமறைநான்மொழிந்திடுமதுமன்வாய்மையேயென்றுணர்ந்தவ
துன்னியவுலகிலிருதிணையுயிருந்தாங்கியமகிழ்ச்சிமீக்கூர [னுய்த்
நன்மையேபுரிவான்றன்னமுமுளத்தினுடிடான்றீமைசெய்தலையே.

**புரத்தல் - காத்தல், இருதிணையுயிர் - உயர்திணையுயிர், அஃறிணையுயிர். தன்னம் - அற்பம்.**

அடக்கமும்பொறையுங்கருணையுநண்புமழுக்கறுத்திலாமையுமென்றும், விடற்கருந்தவத்தோடொருங்குறவளர்ப்போன்வெகுளியுங்காமமுமயக்குங், கடக்கருந்தீமைநாடொறும்விளைக்குங்கயவர்கடொடர்ச்சியுந்தன்னைத், தொடற்கரிதாகவடியறச்சாய்ந்தோன்றாயர்க்குந்தூயவன்மாதோ. (௫0)

படியிலாமறைநூன்முற்றுணர்ந்தடுத்தோர்பக்குவத்திறன்மதித்தறியா
வொடிவறுசரியையாதியாநான்குமுற்றுறப்பயிற்றுசாந்தீப
னடிமலரடையாவிருக்குமுன்மூன்றுமையமுன்மூன்றும்விட்டோடக்
கடிகெழுகாயாம்பூங்கதிர்மேனிக்கண்ணனோடமர்ந்துகற்றனனே.

இருக்குமுன்மூன்று - இருக்கு வேதம் யசுர்வேதம், சாமவேதம் என்பன, ஐயமுன் மூன்று - ஐயம், திரிபு, அறியாமை என்பன.

கொழுந்துவிட்டெரியும்பசித்தழலவித்துக்கோதில்வைராக்கியமிக்கு
ற், றழுந்துபட்டிடாதசாந்திராயணமுனளப்பருஞ்செயற்கருவிரத, மெ
ழுந்துவிட்டொளிரப்பற்பகலாற்றியென்பொடுநரம்புகடோன்றிச், செ
ழுந்தசைவற்றியிளைத்தயாக்கையனாய்த்திகழ்ந்தனன்சீர்த்தியந்தணனே

சாந்திராயணம் - பௌரணை தொடங்கி அமாவாசை வரைக்கும் ஒவ்வொரு பிடியன்னம் குறைத்தும், அமாவாசை தொடங்கி ஒவ்வொரு பிடியன்னம் அதிகமாகப்புசித்தும் அநுஷ்டிக்கும் ஓர் விசேஷவிரதம்.

கதிரவனுதயகிரிமிசைவருமுன்கன்னலங்கெனத்துயிலொழிந்து
விதிவழிமலநீர்விடுத்தொளிர்கரகமென்புனலாற்சுத்தியமைத்து
மதிசெய்பற்கறைதீர்த்தறலினானம்வயங்குறச்செய்துநற்சந்தி [ன்.
யதிகமாஞ்செபம்வந்தனைமுதனியதியறுதியற்றிடுந்தொழிலைமந்தோ

அறல் - நீர்.

ஒன்றுமெய்வாய்கண்ணாசிகாதென்னவுரைத்திடும்பொறிவழியூறு, து
ன்றியசுவையொள்ளொளிமணஞ்சத்தஞ்சொல்லுமிவ் வைம்புலனென்
று,மொன்றுபட்டுள்ளக்குறிப்பறிந்தொழுகவொருக்கியதவவலியினனா
ய், நின்றுளானிவனைப்புகழ்கராரெவரேநீடியபவத்தொடக்கறுப்பார்.

ஒளியமவித்தபெருந்தவத்தினர்களகம்புறமெனும்பகுப்பிறந்து,மு
வ்வுலகுமுந்தம்மிடமாதாவசிப்பரெனமறைமொழிவதற்கிசையச், செவ்
வியமனத்தம்வீடுகாடென்னத்தெரிந்துநறைபடுதும்பிலான்சினந்த, தெவ்
வுடல்பனிப்பவெள்ளொளிநெடுவேல்செறிதடற்றகற்றுபுவிதிர்ப்போய்.

தடறு - உறை.

மெத்தியபற்பல்கிழிதுணிபிணையத்துமெல்லிழைச்சரட்டினாற்பொ
ல்லம், பொத்தியசிதரோகல்லுடையாகப்புனைதகாரணத்தினாற்கடல்சூ
ழெத்திசையவருங்குசேலனென்றொருபேரிட்டழைப்பார்கண்மதக்கலு
ழி,ததியகரடத்தறுகண்மால்யானைத்தரியலர்கூற்றெனப்பொலிவோய்

குசேலன் - சிதைந்த ஆடையையுடையவன்.

பாறகடல்கடந்தமனத்தனாய்வேதவரம்புகண்டிலங்குமிக்குசேலன்,பா
ற்கடன்மிசையோர்கார்க்கடல்போலப்பையரவணைமிசைத் துயில்வோ

ன், சேற்கருநெடுங்கட்டிருமகள்வருடச்சிவந்துகாட்டிடுமரைமலர்த்தா, ளேற்குமென்றுள்ளத்திருவியெங்நாளுமியற்றரும்பூசனையியற்றும்.

மரைமலர் - தாமரைமலர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திறலினையதவத்திவ்வாறுதிகழ்ந்திடுங்குசேலனென்பா
னறலினையத்தவத்திற்குதவிசெய்பாக்குநாளு
மறலினையகதுப்பினாளோரணங்கினைவதுவைசெய்தான்
மறலியமன்னர்சென்னிமணிமுடியிடறுந்தாளோய். (௫அ)

அறல் - கருமணல், கதுப்பு - கூந்தல்.

மணாகனுடம்புபோற்றவல்லவண்மனைவியேயென்
றுணர்வினர்மொழியுமாற்றமுவள்செயனேக்கிப்போலுந்
தணவறுமன்புஞ்சாந்தத்தன்மையுநன்மையான
குணமுமோருருவங்கொண்டோர்குடிப்பிறந்தனையநீராள். (௫௯)

மாசிலாக்குலத்துவந்தாள்வருவிருந்துவப்பவூட்டு
நேசமிக்குடையாள்கொண்கனினைப்பறிந்தொழுகுநீரா
டேசுறுவாய்மையுள்ளாள்சினந்திடலென்றுமில்லாள்
பேசுதிண்கற்புவாய்த்தாள்பெற்றதேகொண்டுவப்பாள். (௬0)

அருண்மகப்பெறுகிலோருக்கணைகதிநாத்தியென்று
தெருண்மறைசெப்பலாலுஞ்சிறந்தநன்குலநீடித்துப்
பொருண்முயங்கிடுமாறெண்ணும்புந்தியனுதலாலு
மிருண்மருள்குழலன்னோடிருந்தவக்குசேலன்சேர்ந்தான்.

சேர்தலுநரம்புடைத்தச்சேல்விழிகுழிந்துகாட்ட
வார்முகங்கிழிக்குங்கொங்கைமருவுபால்சுரந்துகாட்டச்
சார்தருவயாவுநீடித்தணப்பில்பல்சுவைநாக்காட்ட
நேரிழைகருப்பம்வாய்ந்துநிரம்புநாண்மைந்தனீன்றாள் (௬௨)

வயாவு - கருப்பவேதனை.

பின்புசின்னாள்கள்செல்லப்பெய்வளைமக்கட்பேற்றி
னன்புறுமார்வமீட்டுமடரத்தன்முயற்சியாலே
கொன்பெறுகணவற்கூடிக்கூடிநன்குயிர்த்துயிர்த்திட்
டின்புறப்பெற்றுநின்றாளிருபத்தேழ்மைந்தர்சேர. (௬௩)

மலையிட்டசெல்வத்தார்கண்மகிழவோர்மகவுந்தாரா
னலையிட்டமூட்டாட்செய்யவம்புயத்துறைவோனேரேழ்

தலையிட்டவிருபான்மைந்தர்த்தந்தனன்பெருமையன்றே
சிலையிட்டதழும்புவாய்ந்ததெரியலந்தடந்தோள்வேந்தே. (௬௪)

தனகுலவிருத்திக்காகத்தன்மனையெண்ணம்வாய்ப்ப
நன்குலமறையோன்கூடிநலங்கொளிம்மைந்தர்ப்பெற்றான்
புன்புலத்தவர்கள்காமவிச்சையாற்புணர்ந்துபெற்ற
னென்பரானிற்கவன்றற்கிளையமிடிவெளிக்கொண்டன்றே. (௬௫)

பல்லெலாந்தெரியக்காட்டிப்பருவரன்முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ்சொல்லிநாட்டித்துணைக்கரம்விரித்துநீட்டி
மல்லெலாமகலவோட்டிமானமென்பதனைவீட்டி
யில்லெலாமிரத்தலந்தோவிழிவிழிவெந்துனான்றும். (௬௬)

இருநிலத்தியாவர்கண்ணுமேற்பதையிகழ்ச்சியென்ன
வொருவியவுளத்தான்காட்டிஞானிர்ந்துகொள்வாருமின்றி
யருகியநீவாரப்புற்றனியமாராய்ந்தாராய்ந்
துருவவொண்ணகத்தாற்கிள்ளியெடுத்துடன்சேரக்கொண்டு.

வந்துதன்மனைகைந்நீட்டவாங்கிமற்றவற்றைக்குற்றி
யந்தமெல்லியல்பாகஞ்செய்ததிதிக்கோர்பாகம்வைத்துத்
தந்ததன்பங்கயின்றுதவலருமுவகைபூத்து
மந்திரமறைகட்கெட்டாமாலடிநினைந்திருப்பான். (௬௮)

அயிலல் - உண்ணல்.

இற்றிவன்வாழ்க்கைத்தன்மையிருபத்தேழ்மைந்தருக்கு
மற்றவப்பாகக்கஞ்சிமட்குழிசியைப்பால்வைத்துப்
பற்றுகோரிகையான்மொண்டுவாக்கிப்பற்றாமைகண்டு
வெற்றுடம்பாகிநிற்பண்மெலிவள்பினென்செய்வாளால். (௬௯)

மட்குழிசி - மட்பானை, கோரிகை - அகப்பை.

மேற்படி - வேறு.

ஒருமகவுக்களித்திடும்போதொருமகவுகைநீட்டுமுந்திமேல்வீழ்ந், திருமகவுங்கைநீட்டுமும்மகவுங்கைநீட்டுமென்செய்வாளாற், பொருமி யொருமகவழுங்கண்பிசைந்தழுமற்றொருமகவுபுரண்டுவீழாப், பெருநிலத்திற்கிடந்தழுமற்றொருமகவெங்ஙனஞ்சகிப்பாள்பெரிதுபாவம்.

அந்தோவென்வயிற்றெழுந்தபசியடங்கிற்றில்லையெனவழுமர்லோர் சேய், சிந்தாதகஞ்சிவாக்கிலையெனக்கன்றயெனப்பொய்செப்புமோர் சேய், முந்தார்வத்தொருசேய்மிசையப்புகும்போதினிலொருசேய்முடு கியீர்ப்ப, நந்தாமற்றச்சேயுமெதிரீர்ப்பச்சிந்துதற்குநயக்குமோர்சேய்.

இவ்வண்ணங்கலாம்விளைக்குமைந்தர்களைநனிநோக்கியிரங்கியேங்கிச், செவ்வண்ணக்கரதலத்தாலணைத்துமடித்தலத்திருத்திச் சிறப்புச்செய்து, மைவ்வண்ணக்கண்ணீரைத்துடைத் துமுகம்வெரிந்புறந்தைவந்துமாம்ப, லவ்வண்ணவாய்முத்தங்கொண்டுநயத்தோர்விதத்தி லாற்றல்செய்வாள். (௭௨)

கலாம் - கலகம், வெரிந் - முதுகு, தைவரல் - தடவுதல்.

அடுத்தமனைச்சிறானொருவனின்றுநமதகங்கறியென்னட்டாரென்று, தொடுத்துவினாயினனாலைச்சொற்பொருள்யாததுதானெச்சுவைத்தன்னாய்நீ, யெடுத்துரையென்றிடுமழவுக்குரைக்கிலதுசெய்யெனிலென்செய்வாமென்று, மடுத்தவஃதறிந்திலேனெனமற்றொன்றுரைத்ததனைமறக்கச்செய்வாள். (௭௩)

வேறுமனைச்சிறானயின்றபக்கணங்கண்டோடிவந்துவிழிநீர்வாரச், சீறுதலிலாதவனைமுகம்பார்த்தின்னானின்னதின்றானென்வா, யூறுதலாலிப்பொழுதேசெய்தளித்தியெனவடுத்தவுடைதொட்டீர்க்குந், தேறுதலில்சிறுமகவையெடுத்துமார்பிடையணைத்துச்சிந்தைநோவாள்.

பக்கணம் - பக்ஷணம், ஈர்த்தல் - இழுத்தல்.

குண்டலமோதிரங்கடகஞ்சுட்டியயன்மனையார்தங்குழவிக்கிட்டார், புண்டரீகக்கண்ணன்னாயெனக்குநீயிடாதிருக்கும்பொறுமை யென்னே, கண்டெடுத்திப்போதிடெனக்கரைமதலைக்கில்லாதான்கடன்றந் தானுக், கெண்டபச்சொல்வார்த்தையெனநாளைக்குநாளைக்கென் றியம்பிச்சோர்வாள். (௭௫)

பருப்போடுகுளமளித்தியெனக்கென்றுமெனக்கினியபால்வெண்ணெய்யும், விருப்போடுதருதியென்றுமக்களழும்போதெல்லாம்விள்ளாளொன்று, நெருப்போடுபுகையுயிர்க்குநிரியாணக்கரடமதநெடுங்கையானைப், பொருப்போடுசெறுநர்படைமுழுதுழக்கிச்சவட்டிவரும்புகர்வேல்வேந்தே. (௭௬)

குளம் - வெல்லம், நிரியாணம் - யானைக்கடைக்கண்.

சிறியசிதமணிப்பூணேயன்றிவேறொருபூணச்சேய்கட்கில்லை
வறியமரநாருரியேயுடையன்றிமற்றுடைகண்மருவலில்லை
வெறியபொழிற்றழைத்தவிலையுண்கலமல்லாதுகலம்வேறொன்றில்லை
குறியமனைவயிற்புகுமோரெறும்பினுக்குமாங்குணவுகொடுத்தற்கில்லை.
நண்புகூர்தருமன்னப்பால்சிறிதல்லாமன்மற்றோர்நற்பாலில்லை
பண்புகூர்தருதநயர்க்கெஞ்ஞான்றும்பசிதீர்ந்தபாடுமில்லை

கண்புகாவிவ்வறுமைகண்டுமறையவனுமுளங்கவற்சியில்லை
யெண்புகாப்புகழுவன்றன்செயல்கண்டுமனைவிவிருப்பிகத்தலில்லை.

வருவாய்மிக்குடையராயளவிறந்தசெல்வத்தின்வளமுள்ளார்க்கு, மொருவாவன்பொருமதலையெண்ணியவாறளித்தோம்ப லொல்லாதாகு ம், பொருவாவெங்கடுங்கூற்றுய்க்கொடுவிடமாய்வடவையாய்ப்புகுந்து வாட்டத், திருவாநின்றிடுமிடியிற்பன்மகவுள்ளாள்செய்கையெற்றேயெ ற்றே. (எகூ)

இவ்வாறுமிடியென்னும்பெருங்கடலுளழுந்தியுந்தற்கினிமைசான்ற, செவ்வாய்மையந்தணனைவெறுத்துரையாளலர்மொழிகள்சிறிதுஞ்செப்பா, டுவ்வாமைமைந்தர்கள்பான்மறந்துமியற்றுளவடன்சுகுணமென்னே, யெவ்வாறித்துயர்க்கடனீந்துவமெனுமோரெண்ணமுளத் தென்றுமுண்டால். (அ0)

கற்புடையவருந்ததியேமுதன்மடவார்புகழுவருங்கற்பின்மிக்காள் பொற்பமையாமிடியென்னுஞ்சாகரத்துளழுந்திமனம்புண்ணேயாகிப், பற்பலநாள்செலவொருநாளமையமறிந்துளந்துணிந்து பண்பிற்போற் றிச், சொற்பெறுநற்புகழ்க்கணவன்முகநோக்கியெண்ணியவைசொல் லலுற்றாள். (அக)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காமம்வெங்குரோதமுலோபந்தீமோகங்களைமதமாற்சரியமெனு ந், தீமைசேராறுபகையினைச்செற்றோய்செம்மணிகொழிக்கும்வெண் டரங்கப், பாமமாகடலுங்காமுறுமேனிப்பண்ணவன்மலரடித்துணை யைத், தோமறவுள்ளத்துள்கியேத்தெடுப்போய்துரிசறுமறைமுழுது ணர்ந்தோய். (அஉ)

பாமம் - பரப்பு.

உரைக்கருஞ்சிங்கஞ்சரபம்வெம்புலிகளுலவையோரிரண்டுடைவேழ
நிரைப்படச்சரிக்குங்கானத்திலணுகிநிகழ்சருகறல்வளியருந்தித்
திரைக்கடல்வினைக்கோராகரமாகுந்தேகத்தைவாட்டுமெய்த்தவத்தோ
நரைத்தவோதிமத்தையுயர்த்தருள்கமலநான்முகனனையதூயவனே. [ய்

ஓதிமம் - அன்னப்பறவை.

துணிபடுகங்கைசூழ்ந்தமெய்யினரிற்றுணையிலாநற்றவமுனிவ, வணிபடுமனையாண்மக்களிலருத்தியமைக்கிலாயென்றுமன்னியர்பா, னணியிரந்தேற்றலொழித்தனையடிகேளுனஃ துணர்ந்துளேனெனினும்,

பிணிபடுமுளத்திற்புகலுமென்மொழியைப்பெட்பொடுகேட்டியென்றி யம்பும். (அச)

பெட்பு - அன்பு.

கொழுந்துவிட்டெரியுமுத்தழல்வளர்க்குங்கோதிலாமுனிவநஞ்சி றார்க, ளழுந்துபட்டேங்கவெழும்பசியொழிக்கவனமிலாதுயங்கினரந் தோ, முழங்குமீரொன்பான்புராணநன்கோர்ந்தோர்மூரலாலுயிர்விற்கு மென்று, வழங்குவரச்சொன்மறிதிரைக்கடல்சூழ்மண்ணிடத்துண்மை யேயாமே. (அரு)

உயங்குதல் - வருந்துதல்.

நான்மறையுவரிக்கடல்புடையுடுத்தநானிலத்துயிரெலாமின்பத்
தான்மனமகிழவாழ்கநன்கென்றுச்சாற்றிடுமதற்குமாறின்றிக்
கான்வழிந்தொழுகுங்கற்பகமாலைக்கடவுளர்பராவுநற்புகழோய்
தேன்வழிந்தன்னமழலைவாய்மைந்தர்சிறப்புறவருளுதல்கடனே. (அசு)

கான் - வாசனை.

நித்திலங்கோட்டிற்கொழிக்கும்வெண் டரங்கநெடுங்கடல்புடையு டுத்தகன்ற, தத்தொளிமணிச்சூட்டுச்சியிலரவந்தாங்குமிந்நிலவலயத்தி, லெத்தகையினரும்வெருவருநிரப்பேயிசைந்தவர்பாவியர்செல்வ, மொ த்துறவியைந்தோர்புண்ணியரன்றேவும்பருந்தொழத்தகுமேலோய்.

கோடு - கரை.

தரித்திரமிக்கவனப்பினையொடுக்கிச்சரீரத்தையுலர்தரவாட்டுந், த ரித்திரமளவாச்சோம்பலையெழுப்புஞ்சாற்றருமுலோபத்தைமிகுக்குந், தரித்திரந்தலைவன்றலைவியர்க்கிடையேதடுப்பருங் கலாம்பலவிளைக்குந், தரித்திரமவமானம்பொய்பேராசைதருமிதிற்கொடியதொன்றிலையே.

தரித்திரங்களிப்பாங்கடலுக்கோர்வடவை சாற்றுமெண்ணங்கள் வாழிடமாந், தரித்திரம்பற்பலறுக்கமுந்தோன்றத்தக்கபேராகரமென்ப, தரித்திரநன்மைசாலொழுங்கென்னுந்தழைவனந்தனக்கழறழலாந், தரி த்திரங்கொடியவெவற்றினுங்கொடிதத்தகையதையொழித்தனன்றுமே

ஆகரம் - பிறப்பிடம்.

யாதவர்குலத்திற்றோன்றியவரசர்யாவர்க்குமதிபனுமிணையின்
மாதவனுடனீபலகலைக்கடலைவாய்மடுத்தனையெனவகுப்பா
ராதலினப்பீதாம்பரன்மருங்கிலணைந்தவன்பாற்பெருஞ்செல்வந் [ம்.
தீதறக்கொண்டுகொடுத்துநஞ்சிறுவர்செல்லலைத்தவிர்க்குதல்வேண்டு

பீதாம்பரன் - பொன்னுடையையுடையவன்.

இளமையினின்னோடிருங்கலைகற்ற வெழிலிபோல் வண்ணனிற்க ண்ட, வளவையேயெல்லாப்பேசரும்வளமுமளிக்குவனையமதின்றாற், பளகறுநேசனொருவனைப்படைத்தல்பருந்தனப்பொதிபெற்றாற்போன் மென், றுளமிகத்தெளிந்தோர்புகலுநன்மாற்றமுண்மையாம்பொய்ம் மையாகாதே. (கூக)

பளகு - குற்றம்.

உலகமோர்மூன்றும்வெருவரக்கொடியவுளுற்றியகஞ்சனுதியர்க்கொன்
றலகினன்னெறியோரின்புறவளிப்போனுதலினுங்கவன்பாற்சென்
றிலகுறுஞ்செல்வம்வேண்டிடினனக்குமீகுவன்மற்றவன்மறுக்கிற்
குலவவன்பாதங்காண்டலேயமையுங்கோதறுவீடுமெய்தலினே. (கூஉ)

கண்ணனைத்துளபமாலிகைநிறத்திற்கமலைவாழ்தரவருள்புரிந்த
மண்ணியமணியைத்தினந்தினம்போற்றுமாசறுதவத்தினருள்ளத்
தெண்ணியவெண்ணியாங்களிப்பவனையெய்திநஞ்சிறுசெல்வ
நண்ணிவாவென்றுநங்கைசொற்றிடலுநற்றவக்குசேலனீதுரைக்கும்.

நிறம் - மார்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மக்களுக்கிரங்கிவாடுமடத்தகையணங்குகேட்டி
தக்கமுற்பவத்திலான்றதருமநன்கியற்றினோர்க
ளொக்கவிப்பவத்திலின்பமொருங்கனுபவிப்பரின்றேன்
மிக்கவெந்துயரத்தாழ்வரிதற்குளமெலிதலென்னே. (கூச)

துப்பிதழ்மடந்தைநல்லாய்தோன்றியசீவரெல்லா
மிப்புவியிடத்துச்சாலவெண்ணுவரெண்ணியாங்கே
யெப்படிமுற்றுமுற்றாதெம்பிரானொருவற்கன்றி
யப்படிமுற்றிற்கீழ்மேலாம்பகுப்பிரண்டுண்டாமோ. (கூரு)

தேற்றமுற்பவத்திற்செய்ததீங்குநன்கெனுமிரண்டு
மாற்றல்சால்கருமமென்பரக்கருமத்தைநோக்கிச்
சாற்றுமிப்பிறப்பிற்றக்கதரித்திரஞ்செல்வநல்கிப்
போற்றுவனுயிரையெல்லாம்பொலிசுடர்த்திகிரிவள்ளல். (கூசா)

மைந்தர்கடம்மைப்போற்றவளநிதிவேண்டுமென்றாய்
நந்தியபறவைகானநயந்துறைவிலங்குமுன்னா
வந்தபல்லுயிர்க்குச்சேமவைப்புண்டோவருவாயுண்டோ
வெந்திடத்தேனும்போயொன்றிரப்பதுதானுமுண்டோ. (கூஎ)

சேமம் - காவல், வைப்பு - புதையல்.

அல்லதுநாளைக்கென்செய்வாமெனுங்கவலையுண்டோ
வெல்லையிலொன்றினாலொன்றிடிப்புண்டுவாழ்தலுண்டோ
வொல்லுமவ்வுயிர்கடம்முளுணவிலாதிறந்ததுண்டோ
சொல்லரிபரந்தவுண்கட்டுடியிடைப்பேதைமாதே. (௯௮)

கல்லினுட்சிறுதேரைக்குங்கருப்பையண்டத்துயிர்க்கும்
புல்லுணவளித்துக்காக்கும்புனத்துழாய்க்கண்ணியண்ண
லொல்லுநின்மைந்தர்க்காவாதொழிவனோவொழியானுண்மை
யெல்லியல்கொண்டதுன்பம்விடுவிடுமறந்துமெண்ணல். (௯௯)

அண்டம் - முட்டை.

உரைத்தகன்முதலிடப்பல்லுயிர்க்கெலாமுணவேயின்று
வரைத்தவவ்வுயிரவ்வாறுவழங்குதலியல்பேயென்னிற்
றரைத்தலைவந்தஞான்றேசலமலம்விடுத்தலுண்டே
விரைத்தபூங்குழலாய்துய்க்குமுணவின்றிமேவுமேகொல். (௧௦௦)

அலரவன்றீட்டிவைத்தவாயுளினளவைகாறும்
விலகிலாவினைக்குத்தக்கவிருப்புணாவெறுப்புணாவு
மிலகவுண்டின்றேலின்றாமின்னுயிருடம்பின்வாழ்தன்
மலர்தலையுலகத்தென்றுவகுப்பர்நூலுணர்ந்தவல்லோர். (௧௦௧)

தீட்டிவைத்தல் - எழுதிவைத்தல்.

ஆதலினினதுமைந்தர்க்காயுளுமளவைகாறு
மோதிருவினைக்குத்தக்கவுணவுண்டுபுந்திமாழ்கே
லேதுவந்தாலுமூழாலெனநினைந்திருத்தல்வேண்டு
மாதர்வாண்முத்தமூரன்மயின்மருணடைப்பூங்கொம்பே. (௧௦௨)

மூரல் - பல், மாழ்குதல் - மயங்குதல்.

வளநிதிபடைத்தோமென்றுமவடிவவில்லுடையோமென்று
மளவில்சேயீன்றோமென்றுமனுபவத்தமைந்தோமென்று
மிளமையிற்சிறந்தோமென்றுமெழினலமுடையோமென்று
முளமகிழ்கூர்வர்சற்றுமுண்மைநூலுணர்ச்சியில்லார். (௧௦௩)

உயிர்க்கொலைபுரிதலுண்ணுமுணவுபாருட்டஞ்செய்த
லயிர்ப்பிலாநண்பர்மாட்டுமமைதரக்குய்யஞ்செய்தல்
பயிர்ப்புமிக்குறநல்லோரைப்பழித்தல்பொய்க்கரியுரைத்தல்
செயிர்ப்பிலாலயத்திடத்துஞ்சென்றுபட்டிமையியற்றல். (௧௦௪)

குய்யம் - வஞ்சனை, கரி - சாக்ஷி.

இவைமுதற்பலவுமாந்தரியற்றிநாள்கழியாநிற்ப
ரவையெலாம்பொருணிமித்தமாகுமப்பொருளைப்பெற்றாற்
குவையுறப்புதைத்துவைத்துக்குதுகுதுப்படைந்துகாத்து
நவையுறுபணப்பேயென்னுநாமமும்பெறுவர்மாதோ. (க0ரு)

ஒருசிறுதருமமேனுமுஞற்றிடாரிரப்போர்வந்து
தருகிகர்கரத்தாயென்றுசாற்றினுங்கொள்ளாராகிக்
கருணைசற்றின்றியெல்லைகடந்திடத்துரந்துமீள்வர்
மருவுபல்கிளையுமோம்பார்வளம்படைத்தென்பெற்றாரால். (க0சு)

உஞற்றுதல் - செய்தல், வளம் - செல்வம்.

முறைதவிர்கொடுங்கோன்மன்னர்முனிவிற்குநனியுமச்சங்
கறைகெழுகரவுசெய்வார்கரத்திற்குமழற்குமச்ச
மறைவறுதாயமாக்கள்வௌவுவரென்றுமச்ச
மறைபொருள்பெற்றாரல்லரச்சமேபெற்றார்போலும். (க0எ)

ஒல்லொழுக்கினைத்தீயவொழுக்கரென்றுரைக்கச்செய்யும்
புல்லொழுக்கினைத்தூயபுலத்தரென்றுரைக்கச்செய்யு
நல்கற்புடையமாதர்நலத்தையுஞ்சாயச்செய்யும்
பல்வகைத்துயருஞ்செய்யும்பாழ்ம்பொருள்பற்றுளார்க்கே. (க0அ)

புலத்தர் - அறிவுடையார்.

கோடிபொன்னளிப்பனின்றேகோடிரோர்மாத்திரைக்கு
ஞாடியகிளைக்கோர்வார்த்தையுரைத்தடைகுவனென்றாலுந்
தேடியகாலதூதர்சிமிழ்த்தல்விட்டொழிவரேகொல்
வாடியமருங்குனங்காய்மாண்பொருட்பயன்கண்டாயோ. (க0கூ)

சிமிழ்த்தல் - பற்றுதல்.

பொருவறுபந்தமெல்லாம் புணர்த்திடுந்தெய்வசிந்தை
யொருவமேலிட்டுநிற்குமுறக்கமுமிறக்கச்செய்யுங்
கருவினுட்புகுத்துமின்னகரிசுகண்டதனாலன்றோ
விருநிலத்திடைவெறுக்கையென்மனர்புலமைசான்றோர். (கக0)

சிறியரோமதிக்குமிந்தச்செல்வம்வந்துற்றஞான்றே
வறியபுன்செருக்குமூடிவாயுள்ளார்மூகராவர்
பறியணிசெவியுளாரும்பபிறருசெவிடராவர்
குறிபெறுகண்ணுளாருங்குருடராய்முடிவரன்றே. (ககக)

பல்கதிர்விரித்துத்தோன்றிப்பாடுசெய்கதிரேபோல
மல்லனீருலகிற்றோன்றிமறைந்திடுநம்மைவிட்டுச்
செல்வமென்றுறுவதற்குஞ்செல்வமென்றுணர்க்கும்பேர்நன்
றல்லலைவிளைப்பதாகாதரும்பெறற்செல்வம்பாவாய். (ககஉ)

மதுமடையுடைத்துப்பாயும்வனத்துழாய்க்கண்ணிவேய்ந்து
விதுமுகப்பதுமைசெங்கைமெல்லெனவருடச்சேர்ந்து
கதுமெனக்கருதுமன்பர்கருத்தினுட்புகுந்துவாழு
முதுமறைப்பெருமான்பாதம்பெறுதலேயுரிச்செல்வம். (ககங)

விது - சந்திரன்.

கைப்பொருள்பெற்றஞான்றேகடவுளாலயத்திற்கீந்து
மெய்ப்படுபுராணநூல்கள்விருப்பொடுகேட்டுவந்தும்
வைப்பெனவிரப்போர்க்கீந்தும்வருபவருளரேற்கூற்ற
மொய்ப்புயத்தண்டந்தப்பிமுன்னவனின்பத்தாழ்வார். (ககச)

குடருநெய்த்தோருமென்புங்கொழுவும்வார்வழும்புந்தோலுந்
தொடருநாடிகளும்வைத்துச்சுமத்தியதடியுங்கொண்டு
படர்தரச்செய்தபவ்வீப்பாண்டமாமடந்தைநல்லா
ரிடருடைவடிவமந்தோவிதற்குமுண்மயங்காநிற்பர். (ககரு)

தடி - மாமிசம், பவ்வீ - பீ, (மலம்).

கோதுறவமைத்தபவ்வீக்குழம்புபஃறுவாரந்தோறு
மோதுறவழியுங்கும்பமூத்திரபாத்திரங்கை
யாதுபல்கிருமிக்குப்பையடர்ந்ததீநாற்றக்கூடம்
மாதர்மெய்வடிவங்கண்டுமாழ்குவார்மாழ்கிநிற்க. (ககசு)

முன்னமெத்தனைபேர்மைந்தர்முறைமைபாராட்டினாரோ
வின்னமெத்தனைபேர்மைந்தர்முறைகொளவிருக்கின்றாரோ
வன்னமைந்தனைத்தம்மைந்தரெனலறியாமையாகு
மென்னடைக்கரியவாட்கண்விலைக்கருந்தாழ்குழாலே. (ககஎ)

மதலையைப்பெறுநாட்டுன்பம்வளர்த்திடுநாளுந்துன்பம்
விதலைநோயடையிற்றுன்பம்வியன்பருவத்துந்துன்பங்
கதமுறுகாலர்வந்துகைப்பற்றிற்கணக்கிறுன்ப
மிதமுறலெந்நாள்சேயாலெற்றைக்குந்துன்பமானால். (ககஅ)

விதலை - நடுக்கம், கதம் - கோபம்.

இளமையிலியற்றுந்தண்டமேற்றுமெவ்வெறுப்புய்த்தாலு
முளநடுநடுங்கிப்பின்னியுற்றுறப்பற்றிநிற்பார்

தளர்வறுபருவஞ்சார்ந்தாற்றந்தைதாய்நடுங்கச்சிறி
யுளமருதம்மனஞ்செலவ்வாறேயொழுகிநிற்பர். (கக௯)

தண்டம் - சிக்ஷை.

சாருறுதந்தையாருந்தாயருமனந்தஞ்சன்ம
வூருமோரனந்தம்வாய்த்தவுறவுமோரனந்தம்பெற்ற
பேருமோரனந்தங்கன்மப்பெருக்கமுமனந்தங்கொண்ட
சீருமோரனந்தமின்னுஞ்சேர்வதுமனந்தமாமால். (க௨0)

அத்தகுமைந்தரார்நீயாரிஃதுணைக்குநாணு
ரித்தனாயிடைக்காப்பாற்றற்கியான்றிருநெடுமாலல்லன்
கொத்துறுமைந்தராசைக்கோட்பட்டுவருந்துகின்றாய்
பித்துளார்செய்கையீதுபெரியரிம்மயக்கம்பூணார். (க௨க)

நல்வினையடைந்தகாலைநனிநலந்திளைப்பர்நன்மை
யல்வினையடைந்தகாலையல்லலிற்றுளைவரெல்லாந்
தொல்வினைவழியதாகுந்தோன்றனுபவங்கடந்தம்
புல்வினையாலென்றெண்ணல்புலமையோரிடத்தின்றாமால். (க௨௨)

திளைத்தல் - அநுபவித்தல்.

இம்மையிற்றருமதானமெழில்பெறவியற்றினோர்க
ளம்மையிற்றேவராகியமிர்தமுன்னனபோகஞ்
செம்மையிற்றுய்ப்பர்துய்த்துத்தீர்ந்தபின்புவியின்மீட்டுந்
தம்மையர்தாயரென்றேதிலர்த்தழீஇப்பிறப்பரன்றே. (க௨௩)

ஏதிலர் - அயலார்.

தழைவிரிகற்பநாடுசார்தலும்புவியில்யாரும்
விழைதருபோகந்துய்த்துமேவலுநல்லூழாமாற்
பிழைபடநிரயத்தாழ்ந்துபெருந்துயருறலுமண்மேற்
குழைமிடியாதித்துன்புகூர்தலுந்தீயூழன்றே. (க௨௪)

நிரயம் - நரகம்.

இத்தகுதுன்பமின்பமெய்திடாரறிவுசான்றோர்
பத்தியின்வழாதுநின்றுபகரருச்சனையியற்றிக்
கைத்துமுற்செயலெலாநிட்காமியமாக்கியென்றும்
பைத்தகார்வண்ணத்தெம்மான்பதமடைந்தின்பத்தாழ்வார். (க௨௫)

சளசளவெனவாயூறறையின்றியொழுகப்பற்போய்த்
தளர்வொடுமெலிந்துகூனித்தசையறவற்றிமுற்றிக்

ளிர்நடையொழிந்துபாயல்கிடைகொளுங்கிழவுத்தன்மை
யளவுகண்டிலர்கொலுற்றவிளமையோர்க்ககங்களிப்பார். (கஉசு)
வாயூறல் - எச்சில், பாயல் - பாய், கிழவுத்தன்மை - கிழப்பருவம்.

மேற்படி - வேறு.

பாவமிகையாற்பூதத்துற்பவிப்பர்நரகர்புண்ணியங்கண்
மேவுமிகையாற்பூதசாரத்தின்விண்ணோருதித்திடுவர்
பூவினிடத்தவ்விணையிரண்டாற்பூதபரிணாமத்துயிர்க
ளாவவியன்மானிடம்விருகமனைத்தும்பையுளாவனவே. (கஉஎ)
மிகை - மிகுதி, பூதம் - பூதசாரம், பூதபரிணாமம் இவை சரீரத்ரயம்.

பறவையுரகமுதலாயபலவுமண்டத்துதித்திடுமா
லுறவுற்றுதிக்குங்கசிவினிற்கீடாதியுருவமுளித்திடமண்
ணறல்கால்வெயிலுற்றிடவுதிக்குமறுகாற்பொறியஞ்சிறைவண்டர்
நறவுண்டிசைபாடிடமலருநறியதருக்கண்முதற்பலவும். (கஉஅ)
உரகம் - பாம்பு, கசிவு - வேர்வை, அறல் - நீர்.

அவ்வித்துயிர்ப்பவவற்றரியயவைமுன்செந்நெலீறுன
செவ்விப்பலத்தினசித்திடுமச்சிறந்தபலமானிடர்க்குணவா
யெவ்வத்தகற்றிவளர்க்குமகத்திட்டவுணவுநீரிவற்றை
யொவ்வப்பருவமடுப்பவறல்கீழாவுணவுமேலாக. (கஉகூ)
யவை - ஓர்வகைத்தானியம்.

பருக்கும்பிராணன்பின்வளிபின்பருக்குஞ்சாரந்துராலிரண்டா
வகுக்குமழலிதயஞ்சாரம்வதிந்தசயானறுப்பயிலுந்
தொகுக்குநாடியெலாமற்றைத்துரால்பன்னிரண்டாய்வெளிக்கொள்ளு
மிருக்குஞ்சாரமென்பதுமத்துணைத்தாம்விரைப்பூங்குழன்மாதே.
வளி - காற்று, துரால் - அழுக்கு.

இயக்கமிரண்டாய்மிடற்றுவழுக்காய்மூக்கிளருசளிநீராய்
நயக்கட்பீளையாய்ச்செவிநாநகம்பல்குய்யங்குதமழுக்காய்க்
கயக்குரோமத்துளைதோறுங்கசியுப்வேராய்த்துரால்கழியும்
வியக்குமருங்கற்புடையாரும்விரும்புமேன்மைமெல்லியலே. (கநக)
மிடறு - கழுத்து, இயக்கம் - சஞ்சாரம், குய்யம் - ஆண்குறி.

சாரமதனிற்றுவக்கதனிலுதிரமதனிற்றசைதசைமூன்
சேருந்தசையினரம்புமயிர்செறியுநரம்பினிடைநாடி
யோருமதிலென்பதின்மூளையுகிர்மூளையிற்சுக்கிலமதனிற்
சாருங்கருவிங்ஙனமீராறுகிப்பயிலுந்தன்மைத்தே. (கநஉ)
துவக்கு - தோல், உகிர் - நகம்.

## கலிநிலைத்துறை.

பாயும்வெண்புனல்செம்புனலினுமிகப்பரவி
னேயுமாண்சுரோணிதமிகிற்பெண்ணிகர்த்திரண்டுந்
தோயுமேலலியாம்பிதாநுகர்சுவைபற்றிப்
போயுள்வெண்புனற்பட்டுயிரணைகருப்புகுதும். (கரு௫)

வெண்புனல்-சுக்கிலம், செம்புனல்-உதிரம், சுரோணிதம்-உதிரம், அலி-பேடு.

உயிர்படுங்கருவற்றைநாட்குன்றியையொக்கு
மியலுமைந்திற்புற்புதமொக்குமேழின்மெல்லூனும்
பயிறரும்பதினன்கிற்செந்நீர்பரவூனுஞ்
செயிரிலையைந்திற்பேசமுற்றிடுஞ்சிறிதாக. (கரு௪)

குன்றி - குன்றிமணி, புற்புதம் - நீர்க்குமிழ்.

சிரங்களம்புறமென்புநாண்முப்பதிற்செறியுங்
கரங்கடாளடிமருங்குமுணிருமதிகாணுந்
தரங்கொள்சந்திகள்வடிவின்மும்மதியிடைச்சாரும்
வரங்கொண்மாதராய்விரல்களுன்மதியிடைமருவும். (கரு௫)

களம் - கழுத்து, புறம் - முதுகு.

நாசியானனநகங்கன்னங்குய்யநன்னகையூன்
பேசுமைந்திலாறினிற்கன்னத்துளைபெறுமேழி
லாசிலாதபல்குறிகளும்விளங்கிடவமையு
நேசமாய்க்குதமுந்திமற்றங்கமுநிரம்பி. (கரு௬)

ஆனனம் - முகம், குய்யம் - மர்மஸ்தானம்.

ஓங்கிடும்பிராணன்முதல்வளிகளுமுற்றுத்
தேங்கிடும்மதியெட்டினற்றுய்நுகர்செறியூண்
பாங்குறுஞ்சுவையுந்திவாயகட்டுறும்பற்றி
வாங்குமின்பதுன்பங்களுமணுதியானுகரும். (கரு௭)

அகடு - வயிறு, உந்தி - கொப்பூழ்.

உற்றிடுங்கருப்பாசயப்பையுறத்துதன்மூற்
சொற்றிடுந்துயரழுந்திமுன்னிகழ்ச்சியுந்தோன்றப்
பற்றிடும்புவிப்பிறந்துநன்னெறிநின்றுபவநீர்
வற்றிடச்செய்வாமென்றுள்ளிப்பிறக்கும்பின்மறக்கும். (கரு௮)

கருப்பாசயப்பை - கருப்பை.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இவ்விதமின்பமுத்தியெய்திடுங்காறுமாறு
தெவ்வநோயுறும்பிறக்குமிறக்குமித்துயரமோர்ந்த
செவ்வியமனத்தர்மாயன்றிருவடிப்புணையாற்சென்மப்
பௌவமேழையுங்கடப்பர்பரிந்துசோகாப்பர்மற்றோர். (௧௩௯)

பௌவம் - கடல், புணை - தெப்பம்.

நாடிகளுரோமந்தந்தங்கள்வீரியமேபித்த
நீடியகபமிணந்தோனெய்த்தோருன்மூளையின்ன
கூடியவிரண்டைந்தாறுதொடியெனக்கூறுநூல்க
ளோடியவிரண்டியக்கக்குறுத்தியவளவையின்றே. (௧௪௦)

தொடி - பலம், நெய்த்தோர் - உதிரம்.

புலைத்தொழில்பயின்றவிந்தப்புன்புலாற்சுமையைநாளு
நிலைத்ததென்றெண்ணியெண்ணிநேயம்வைத்தாறுகாப்பாற்றி
மலைத்தலைந்துழல்வதெல்லாமடமையோர்செய்கையாகுஞ்
சிலைத்தொழில்விளக்கியாங்குச்செறிகரும்புருவப்பாவாய். (௧௪௧)

புலால் - மாமிசம், சிலை - வில்.

தரித்திரமென்றுபல்காற்சாற்றினையெதிர்மறுத்தல்
பரித்திடுமச்சொறன்மைப்பன்மைமுற்றுகவல்லோர்
விரித்துரைபொருணீசற்றும்விளங்கிடவுணர்ந்தாயல்லை
யரித்தடங்கருங்கண்மாதேயாதலினிலைத்ததன்றால். (௧௪௨)

பாற்கடலடுத்தமீனப்பால்விரும்பாதுமற்ற
வேற்குமாவிரும்பினற்போலெம்பிரான்றிருமுன்சார்ந்து
நாற்கதிகடக்குமின்பச்செல்வத்தைநண்ணிடாமற்
சேற்கருங்கண்ணாய்துன்பச்செல்வமோநணுறுவேன்யான். (௧௪௩)

நாற்கதி - தேவகதி, மக்கட்கதி, நரககதி, விலங்குக்கதி.

மானமற்றிழிவுபூண்டுவௌமனைக்கடைதோறெய்தி
யீனமுற்றிரந்திரந்திவ்வுடல்பருத்திடச்செய்தாலுந்
தூநகைக்கரியவாட்கட்சுடர்த்தொடீநிலைப்பதன்று
பேனமார்வெள்ளநீரிற்பிறந்திடுங்குமிழிபோலும். (௧௪௪)

மனைக்கடை - வீட்டுவாயில், பேனம் - நுரை.

நன்றியிலுடலைப்போற்றனன்றுளார்செய்கையன்று
வன்றிகண்மலத்தழுந்திமாசுகமென்றற்போல

வொன்றுமிக்குடும்பச்சேற்றி லுழன்றிடேனுழன்றிடேன்யா
னென்றுரைத்திறுத்தான்பற்றிலிருந்தவரேறுபோல்வான். (௧௪௫)

அந்தணனுரைத்தமாற்றமனைத்துமஞ்செவியிலேற்று
நந்தலிலுண்மையீதென்றுணர்ந்துந்தானயந்துபெற்ற
மைந்தர்பால்வைத்தவாசைமயக்குருளாகிப்பின்னும்
புந்தியின்விரும்பிப்பாதம்போற்றிநின்றிதனைக்கூறும். (௧௪௬)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலைமுழுதோர்ந்துகரிசெலாமறுத்தகாந்தனேபருமணியரவத்
தலைகிடந்திமைக்குந்தாத்திரியதனிற்சாற்றருந்தக்கநன்முயற்சி
யுலைவறப்புரியாவொருவனுக்கெங்ஙனுற்றிடுஞ்செல்வநன்னிலத்தை
நிலைபெறவுழுதுவித்திலான்றனக்குநீள்பயனுற்றிடுங்கொல்லோ.

காந்தன் - கணவன், தாத்திரி - பூமி.

மானிடனொருவன்றனக்கருஞ்செல்வம்வாய்க்கவென்றனுதினமுயற்சி
தானுஞற்றுவனேற்கடவுளுமதனைத்தந்தளிக்குறுமதாலன்றே
வானபேரறிஞர்திருவினைமுயற்சியாக்குமம்முயற்சியில்லாமை
யினபாரின்மைபுகுத்திடுமாலென்றியாருநன்குணர்தரநவில்வார்.

மக்களேதேவர்நரகரென்றறிஞர்வகுக்குறுமுயர்திணையாதி
தக்கபல்லுயிர்க்குஞ்சக்கரமுதலாச்சாற்றுமைம்படைகரத்தேந்து
மைக்கடன்மேனிவள்ளல்வேண்டியவீவானெனவாய்மலர்ந்தனையான்
மிக்கபன்முயற்சிபுரிகிலார்தமக்கவ்விண்ணவன்யாங்ஙனமருளும்.

செயத்தகுமுயற்சிசெய்திடிற்செயிர்தீர்செய்பவண்மணாளனுமிரங்கி
வியத்தகவேண்டியியாவையுமளிப்பன்விளம்புறுமுயற்சிசெய்யானே
னயத்தகுபோகமளித்திடானென்றுநானிலத்தறிஞர்நன்குரைப்ப
ருயத்தகுநெறிமாலடியுனலென்றேயோர்ந்துமாதவப்பெருங்கடலே.

செயிர் - குற்றம்.

முன்புநல்வினைசெய்தவர்முயற்றின்றிமுன்னியவெலாமுண்பரென்னி
லின்பவாலரியேமுதலுபகரணமெலாமினிதுடையவரேனும்
வன்புறுமடிதன்முயற்சியில்லாமைவயிற்றெழுபசித்தழலவிய
நன்பதமாமோமறைமுழுதுணர்ந்தநற்றவக்குணப்பெருங்குன்றே.

முயற்று - முயற்சி, அரி - அரிசி, பதம் - சோறு.

கடவுளீகுவனென்றெண்ணிநித்தியமுங்கருதுறுமுயற்சிசெய்யானே, லடனுறுசெல்வமடைகுவனேகொலருங்கலத்திட்டபாலடிசின், மிடனு

டைக்கரத்தாலெடுத்துணூதெங்ஙன்வீங்குமெம் பசிப்பிணி யொழிப்ப,
னுடல்பவந்தனக்கோராகரமாகுமுடனனிவாட்டுமெய்த்தவத்தோய்.

அடிசில் - சோறு, ஆகரம் - பிறப்பிடம்.

முன்பொருகராவான்மொய்வலிசிந்துமும்மதக்கறையடிக்கயமும்,
வன்புடைப்பொன்னன்புரிகொடுமையினுள்மனமெலி பிரகலாதனனு,
மன்பினோடேத்தியழைத்தலானன்றேயலைகடல்வண்ணன்வந்தாண்டா,
னென்பராதலினுன்முயற்சிசெய்பவருக்கெய்தரும் பொருளுமொன்று
ளதே. (கரு௫)

கரா - முதலை, கறையடிக்கயம் - உரல்போன்ற காலையுடைய யானை.

கமலமேலவனைத்தோற்றியவுந்திக்கமலன்வெந்தொடரெனப்பகரு
மும்மலவேரறுத்தமுனிவர்வேண்டாமலெங்ஙனமுயழிருவளிப்பன்
விமலவேதியநீயுளத்தின்வேண்டுவையேல்வேண்டியவேண்டியாங்களி
மமலநால்வேதமாறுசாத்திரநன்காய்ந்தவர்தமிற்சிறந்தவனே. [க்கு

மும்மலம் - ஆணவம், மாயை, காமியம்.

முன்னரும்பற்பன்முனிவரர்பன்னுண்முயலருபருந்தவமுயன்று
பன்னரும்பேறுமாதவனளிப்பப்படைத்தனர்பவளவாய்ச்செங்கா
லன்னவேறுயர்த்தநான்மறைமுனிவனனையநற்பெருந்தவரேறே
யுன்னருஞ்செல்வமன்னமாலீயவுறிற்புகழன்றிவேறிலையே. (கரு௬)

அப்பரந்தாமனிணையடியன்றியாதரவிலையெனவறிந்தாய், செப்ப
ருமாசைபொய்கொடுஞ்சீற்றஞ்செற்றுளாயெனினும்விண்ணூரு, நப்பு
ரந்தரனுதியர்தொழுமன்னனண்ணூறுந்துவாரகையணுகி, யொப்பில்
பல்வளனுந்தருதியென்றிரக்கிலுறுங்கொலோதாழ்வதினுணர்ந்தோய்.

மாசறுகற்பின்மடவரறனக்குவகுக்கருங்கொழுநனேயுலக
மாசறத்துதிக்குங்கடவுளாமென்னுவரியநான்மறைசொலுமதனாற்
பாசமுற்றிரியப்பலகலையொருங்குபளகறத்தோர்ந்தநீயெனக்குப்
பேசருங்கடவுளாமெனியேனைப்பெட்பொடுபுரத்தனின்கடனே.

இரிதல் - நீங்குதல்.

மடமையேன்றனக்குக்கடவுளுநீயேவருக்கருமிறைவனுநீயே
யடலுறுதானந்தவமுதல்யாவுமாற்றுநின்பணிவிடையன்றே
மடலவிழ்துளபமாலிகைபுனைந்தவாசுதேவன்பதமலனாத் [ய்.
திடமுறநெஞ்சத்துன்னிவல்வினையைச்சிதர்தரச்செகுத்தமாமறையோ

வெண்டிடைாவீசுங்கருங்கடற்புடவிவிண்ணகம்பாதலமிவற்றுண்
மண்டியவுயிர்களெவற்றையுங்கமலைமார்பினன்புரப்பனேயெனினு

மண்டர்கள்புகழுமையனீயுயிர்த்தவரியமக்களையுமென்றனையும் [தாள்.
பண்டைநூற்கியையப்பாதுகாத்தளித்தல் பகருநின் கடனெனப் பகர்ந்

புடவி - பூமி, பாதலம் - பாதாளம்.

## கலிநிலைத்துறை.

இடம்பாடிலாமைமுகன்சாப்பியிரங்கிக்கூறுந்
திடப்பாடுகொண்டபெருங்கற்பினடேமொழிக்கு
மடம்பாடறுத்துக்கலைமுற்றுணர்வாய்மைசான்றோ
னுடம்பாடிலாமையுடையானலனையினனே. (கசு0)

இடம்பாடு - செல்வம்.

கண்ணன்றனைக்கண்ணுறிற்கண்ணுங்கதியுநன்கு
நண்ணுஞ்சிறுமைந்தர்களானுளனையுமின்றை
யெண்ணுநிரம்புமெனச்சில்பொழுதுள்ளத்தெண்ணி
யொண்ணுமனையாண்முகநோக்கியுரைக்கலுற்றான். (கசுக)

தெய்வங்குரவனரசன்றிருமுன்னர்ச்செல்வோர்
பெய்வந்தவன்றாருள்வேண்டிவிருப்பெதேனுங்
கைவந்தபெற்றுச்செலீஇக்காண்குவர்கண்ணன்முன்பு
மைவந்தகண்ணாபினிதென்கொடுவல்லைசெல்வல். (கசுஉ)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெறுநிரப்புளோர்வாழ்ந்திடுசெல்வர்பாற்செல்வரேன்மதியார்கண்
மறுவுறுத்தவமானமுமியற்றுவர்மானமுள்ளவராயிற்
குறுகுமவ்வவமானத்தாலுயிர்விடுகொள்கையிற்றலைநிற்பார்
நறுமலர்க்குழாலாதலாலவரிடைநண்ணனன்றெனவெண்ணல். (கசுந)

நிரப்பு - வறுமை.

இருங்கடற்புவியிடத்தினில்லாரையெல்லாருமெள்ளுவரென்று [ண்ணீ
வொருங்குணர்ந்தமுன்னோருரைத்திட்ட வஃதுண்மையென்றுளங்கொ
ணெருங்குபற்றுறுதாய்தந்தையருநிரப்புறுநரைவெறுப்பாரேற்
சுருங்குமன்பின்மற்றெவர்வெறுத்திடாதவர் தூநகைமலர்க்கொம்பே.

எள்ளுதல் - பழித்தல்.

ஒன்றும்வேண்டலராயினுஞ்செல்வர்பாலுறுமிடியவர்சார்ந்தா
லின்றுவந்தமையாதினைக்கருதிமற்றிவரெனவுளத்தெண்ணிக்
கன்றுமாறுபல்குறிப்புணாநவிற்றுவர்காதலினவர்பாற்போய்
மன்றவந்தநூசிறுமையையிவர்க்கன்றிமற்றிலையறிபாவாய். (கசுரு)

இந்தவாறிவனுரைத்தலென்னெனவுளத்தெண்ணிடேலெக்காலும்
பந்தமானிடர்தன்மையிற்றெனப்பகர்ந்தேன்பரம்பொருளாய
சந்தமாமறைத்தலைவன்பாலுறுவதுதகாதென்றேனலன்கண்டா
யெந்தவாறுகையுறையிலாதையன்முன்யான்படர்குவன்மாதே.(௧௬௬)

படர்தல் - செல்லுதல்.

எழுகடற்கொருபுன்னுனிப்பனித்துளியென்னுவகையைச்செய்யுங்
கொழுமலைத்துணைத் தேவுக்கம்மலைத்துணை கொண்டுபோற்றிடலுண்
செழுமதிக்குச்சின்னூலிழைபறித்திட்டுச்சிந்தித்தலுறல்போல [டோ
முழுமுதற்குமேதாவதுகையுறைகொண்டுமுன்னுறல்வேண்டும்.

கையுறை - காணிக்கை.

மேற்படி - வேறு.

என்றுரைத்தகொழுநனுரை கேட்டுமகிழ்ந் திதற்கென்னோ செய லென்றெண்ணி, யன்றுமுதலுபவாசந்தானிருந்துமாமுனிவனரிதிற் றேடி, நன்றளிக்குநெல்லினிற்றன்னொருபாகம்வேறெடுத்துநலக்கச்சே ர்த்துத், துன்றியவந்நெல்லையொருதினத்தறலினைத்துவறுத்தெடுத் துத்தூய்தா. (௧௬௮)

கொழுநன் - கணவன்.

கறையிட்டுநனிகாணவுலக்கைகொடுமிக்கிடித்துக்கரிசுபோக்கி, நி றையிட்டவவலாக்கிக்குசேலமுனிகந்தையினினேடியோர்பான், மறை யிட்டவொழுங்குடையாண்முடிந்துகொடுத்தினிதுபோய்வருகவென்றா ள், சிறையிட்டபவநீங்கும்வழிகண்டோன்வழிதேடிச்செல்லலுற்றான்.

கறை - உரல்.

முன்னுநெடுந்தூரவழிநடந்தறியான்றோட்கோப்புமுதலாதாரந், த ன்னமுமிலான்பதிகர்தமைவினவிவழிதேர்ந்துதடையிலாது, பன்னெடு ங்காவதம்போகிக்கவர்வழிகண்டுளமயங்கிப்பரிந்துநின்றங், குன்னிமதி ப்பாலிதுசெல்வழியெனத்தேர்ந்தவணின்றுமுற்றுச்செல்வான்.(௧௭0)

தோட்கோப்பு - கட்டமுது, பதிகர் - வழிப்போக்கர்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாங்குவிற்கருங்கார்மருங்குறமருண்டுமையலம்பிடியெனவணைத்த
தேங்குழும்மதப்பெய்களிற்றினைக்கண்டுசிறுபிடியூடவக்களிறு
பாங்குறப்போகியடிக்கடிவணங்கிப்பரிந்துபைங்கற்பகந்தளிர்த்த
பூங்குழையூட்டிப்புலவிதீர்த்தணைக்கும்பொருப்புகள்பற்பலகடந்தான்.

பிடி - பெண் யானை.

மிக்கசெந்தழலின்சிகைக்கொழுந்தெழுந்துமெய்வெதுப்புறுமென வஞ்சித், தக்கபொன்னுலகத்துறைகுநர்முகிலைத்தடையெனாவின்றுகீழ்த்தாழ்த்தி, யொக்கலோடொளிர்கற்பகநிழன்மருந்துண்டுயிளையோம் புறக்கடுங்கொடுமை, தொக்கநீள்பரப்புநிரப்புறுமுரப்புச்சூழல்கள்பற் பலகடந்தான். (௧௭௨)

ஒக்கல் - சுற்றத்தார், மருந்து - அமிர்தம்.

ஆறலைத்துயிருண்டுடல்கவர்ந்தொளிக்குமவர்க்குமவ்வுடல்கருதாது
கோறலைக்குறித்தகுடாவடிசீயங்கொடுவரிவேங்கையெய்யாமான்
மாறலைத்தெழும்போதக்முதலாம்பன்மாக்கட்குமிடமதாய்க்கொடுமை
கூறலைச்செய்யாதடர்ந்துயர்ந்திருண்டகாடுகள்பற்பல்கடந்தான்.

ஆறலைத்தல் - வழிகட்டிப்பறித்தல், சீயம் - சிங்கம், கொடுவரி - புலி, எய் - முட்பன்றி, ஆமான் - காட்டுப்பசு, போதகம் - யானை, மாக்கள் - மிருகங்கள்.

மாங்கனியுதிரப்புலியடிப்பைங்காய்வாழைக்கூன்குலைபலமுறியத்
தேங்கனிந்தொழுகும்வருக்கைகள்கிழியச்செறிகமுகம்பழஞ்சிதறத்
தாங்குமுப்புடைக்காயுடைதரப்பகட்டுத்தகட்டகட்டிளவரால்பாயும்
வீங்குநீர்ப்பழனமுடுத்ததேயங்கண்மென்மெலப்பற்பலகடந்தான்.

வருக்கை - பலாமரம், முப்புடைக்காய் - தேங்காய்.

காமனும்பெண்மையவாவுறப்பொலிந்தகாளையர்மார்பிடைவயிரத்
தோமறுபூணிற்றங்கிழல்வேற்றுத்தோகையரெனநிணைந்தூடிக்
கோமளமடவார்மறுகிடையெறிந்தகுரூஉமணிப்பூணவட்குறுகு
நாமநீளிருளைநக்கிவாளெறிக்குநகரங்கள்பற்பலகடந்தான். (௧௭௫)

துன்னியவஞ்சமழுக்கறல்வெகுளிதோன்றிடாவகையுளத்தொடுக்கி, நன்னயமுடையார்போல்வெளிக்காட்டிநாட்டியதிறையுநன்குய்த்துச், சென்னிமேலிருகைகுவித்துநன்கொழுகிச்செயிருறுசமயமுற்றறிந்து, மன்னனையலைக்குங்கொலைத்தொழிற்குறும்பர்வாழ்நகர்பற்பலகடந்தான். (௧௭௬)

குறும்பர் - சிற்றரசர்.

கந்தமென்மலரும்வயிரமும்பொன்னுங்கரிப் பெருமருப்பும்வெண்முத்
சந்தனக்குறடுங்காழகிற்றுணியுந்ததைமயிற்பீலியுமெடுத்துச் [துஞ்
சிந்துவெண்டரங்கக்கரங்களாலிருபாற்செறிகுலையுடைத்துவார்பரவை
நந்தலில்வயிறுகிழிதரப்பாயுநன்னதிபற்பலகடந்தான். (௧௭௭)

சந்தனக்குறடு - சந்தனக்கட்டை, காழ் - மரவயிரம், மருப்பு - கொம்பு.

## கோச்சகக்கலிப்பா.

மெய்த்தசையிலா தொடுங்கிமேலாயதவத்தொடுங்கா
னெய்த்தினிநாமற்றைறவழியெவ்வாறுகடப்பதென
வுய்த்துணர்ந்துமென்மெலச்செலுறுபொழுதுமறுகும்வகை
மொய்த்தெழுதீவெப்புடற்றுமுதிர்வேனில்வந்ததுவால். (௧௭௮)

வேனில் - கோடைக்காலம், மறுகுதல் - மயங்குதல்.

மண்கொதிப்பவறல்கொதிப்பவளிகொதிப்பவெண்ணுவா
ரெண்கொதிப்பநறுநீழலிலையமனைவிட்டகலார்க்குங்
கண்கொதிப்பக்கரங்கொதிப்பக்கால்கொதிப்பக்கற்பகஞ்சார்
விண்கொதிப்பவவ்வேனில்வெம்பருவமேவியதால். (௧௭௯)

அறல் - நீர், வளி - காற்று.

குலவுதனைவிழுங்குவகைகொண்டகோட்கினமாகி
யிலகரவநாடனைத்துமிதுசமயமெனப்பரிதி
பலகதிரும்புகுத்தடற்றப்பண்ணியசெவ்வழிபோலு
நிலமகடனுடல்வெடிப்பநேர்தோன்றும்பெருங்கமர்கள். (௧௮௰)

உவகை - களிப்பு, அரவநாடு - நாகலோகம், கோள் - கிரகம், கமர்கள் - வெடிப்புகள்.

நலக்கதிர்செய்நம்பகையைநான்மறையோரிதுகொண்டே
விலக்குவர்நாங்கொண்டிருப்பின்மேவாதெப்பகையுமெனப்
புலத்தமைத்துக்கவர்ந்தான்போற்பொய்கைகுளங்கானதிமுன்
னிலத்தமைத்தநீரெல்லாநெடும்பரிதிகவர்ந்தனனால். (௧௮௧)

புலம் - கருத்து, பரிதி - சூரியன்.

தெள்ளுபுனனசைமிக்குத்திரிமருப்பினிரலையெலா
நள்ளரியபேய்த்தேரின்பின்றொடர்ந்துநலிந்திடுமால்
வள்ளலெனவெளிக்காட்டிவஞ்சிக்குமுலோபர்கள்பி
னெள்ளுவறுமைப்பிணியோர்தொடர்ந்துதொடர்ந்திளைப்பதுபோல்.

நசை - விருப்பம், இரலை - மான், பேய்த்தேர் - கானற்சலம்.

புறங்கொடாத்திறல்வீரர்பூம்போர்வைநெகிழ்த்தகற்றிப்
பிறங்குசாந்தாற்றிவிடுவளிக்களித்துப்பெரிதுவப்பா
ரறங்கொண்மாதருங்கணவரங்கையன்றித்தடவுதலின்
மறங்கொள்குயஞ்சிவிறிவிடுவளிதடவவம்பவிழ்ப்பார். (௧௮௫)

சாந்தாற்றி - விசிறி, குயம் - முலை, வம்பு - கச்சு (ரவிக்கை.)

காலோடைவாவிகுளமுதலாயகணக்கிலவன்
மேலோடும்புனல்வறப்பவவற்றுறைமென்பறவைகணற்

பாலனவொருவனிடம்பற்றியினிதுண்டகிளை
யேலாத்துன்பவனுறுங்காலிரிவதெனவிரிந்தனவால். (கஅச)

அவல் - பள்ளம், கிளை - உறவினர்.

வாவிகாள்குளங்காணீர்வற்றினீர்முன்னளித்த
மேவியவின்சுவைப்புனலால்வீங்கினேமிதுபொழுது
பாவியவப்புனலளிப்பேம்பற்றுமெனக்கால்வதுபோற்
பூவியன்மக்கள்ளுடம்புபொங்குவெயர்நீர்காலும். (கஅரு)

கால்வது - கக்குவது, அளித்தல் - தருதல்.

நண்ணருமிக்கொடும்பருவநகைதருவெள்ளொளிகாட்டி
யெண்ணுமனங்களாந்துருகவிந்தியமுமுடனுருகத்
தண்ணெனும்வெந்தீவெப்பந்தொகுமைந்தர்க்குறுத்துதலால்
வண்ணமணிநகைத்துவர்வாய்மடநலார்தமைப்பொருவும். (கஅசு)

வண்ணம் - அழகு, துவர் - பவளம்.

வாங்குகடல்கெம்புகுந்துவடவைவதிவதையறிந்தா
யோங்குகடல்சுவற்றவெனவெகுளாத்தலதுபொய்யே
தேங்கியவிப்பருவத்தாற்செறிவெப்பிற்காற்றாமை
யாங்குகுளிரிடந்தேடியஞ்சியொளித்ததுபோலும். (கஅஎ)

வதிவது - தங்குவது, சுவற்ற - வறளச்செய்ய.

இத்தகையவேனிலிடையிருப்பசியாலறமெலிந்தும்
மைத்ததருநிழலிருந்தும்பள்ளமெலாமாராய்ந்துந்
தத்துபுனல்கிடையாமைத்தாகத்தால்வாய்புலர்ந்துஞ்
சுத்தவிரதத்தவநற்றுறைநின்றோன்சொல்லுமால். (கஅஅ)

சுடர்மறையூரகத்துத்துயில்வநற்காரிடங்கொடுப்பார்
படர்வழிச்செனமக்கிவ்வூர்ப்பழக்கமுடையாரிலரென்
றிடருடையமனத்தினனுமெதிர்கோயின்முன்னுறங்கி
யடர்கதிரோனெழுமுனெழுந்தாறுணர்ந்துநடந்திடுமால். (கஅகூ)

கானவேன்முட்டைத்துக்காலூன்றமுடியாம
லீனமார்முள்வாங்குங்கருவியுமங்கில்லாமன்
மானமார்பெருந்தவத்தோன்மனமெலிந்துமுகப்புலர்ந்தோர்
தானமேவுறவிருந்துட்டதையிவையெண்ணுவான். (ககூ௦)

செறிதருநன்மனைப்படியேசெய்தவொருவற்கினிதா
மறியுறுக்குங்குருமொழிகேட்டாக்கலஃதினுஞ்சிறப்பா
முறிதருமேதிலர்சொற்கேட்டுஞற்றன்முனிதுயர்மனையாள்
வறியவாகேட்டுஞற்றன்மண்ணிறனோர்கெடுதியுறும். (ககூக)

இதுதெரிந்துமனையாட்டியியம்பியசொற்குடம்பட்டு
முதுவெயிலானுடல்வருந்திமூர்ச்சித்துமெலிகின்றேன்
கதுமெனப்பல்காவதங்கள்கடந்தேன்வன்டுவளாநக
ரெதுவெனக்கேட்டிடிலெவருமின்னுநெடுந்தூரமென்பார். (௧௬௨)

கதுமென் - விரைவாக.

மற்றைவழியுங்கடக்கவலியின்றோர்விதத்திறு
வாற்றிடினுங்கருங்கடல்யாருதவிகொடுகடந்திடுவேன்
பொற்றவதுகடப்பினுமப்புரத்திலெனையார்மதிப்பார்
சற்றுமுணராதுவழித்தலைப்பட்டேனென்செய்தேன். (௧௬௩)

மாமகுடமுடிமன்னர்நனிவந்துகாத்திருக்குங்
கோமகன்றன்றலைவாயிலெவ்வாறுகுறுகுவல்யான்
பூமலியுமவ்வாயில்புகினுமவன்றிருச்சேவை
யேமமுறவேமழையேற்கெளிதாகிடைத்திடுங்கொல்லோ. (௧௬௪)

நனி - மிகுதியாக, குறுகுவல் - அடைவேன்.

கற்பகத்தைச்சார்ந்துமவறுங்காய்கேட்கத்துணிவார்போற்
பொற்புடையவெம்பிரான்றிருமுனரிதிற்புகுந்து
மற்பமுறுதிருவேட்டலறிவேகோலெனவுளத்துப்
பற்பலவுமெண்ணியயர்வுயிர்த்தானப்பணவனே. (௧௬௫)

பொற்பு - அழகு, வேட்டல் - விரும்பல், பணவன் - வேதியன்.

என்னதுயரினியுறினுமிதுகாறும்வந்தமையான்
முன்னமனைக்குரைத்தபடிமுற்றும்போய்வருவனெனத்
தன்னுளத்திலெண்ணியெழீஇத்தனிநடந்துசின்னாளின்
மின்னுமிழ்கார்முகில்படியுமேல்கடலின்கரையிறுத்தான். (௧௬௬)

இதுகாறும் - இதுவரைக்கும், மனை - மனைவி, முகில் - மேகம்.

என்னவெடுத்துரைத்தாசுகமுனிவனிணையடிவணங்கி
மன்னர்மணிமுடியிடறும்வார்கழற்கால்வயவேந்த
னன்னர்கொண்மற்றைக்கதையுநடத்துகெனநனியிரப்ப
வின்னலிலாதுயர்ந்தமுனியின்புறவாய்மலர்கின்றான். (௧௬௭)

வயம் - வெற்றி, இரத்தல் - பிரார்த்தித்தல்.

முதலாவது

## குசேலர்மேல்கடலடைந்தவத்தியாயம் முற்றிற்று.

குசேலமுனிவர் திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

இரண்டாவது

# குசேலர் துவாரகைகண்டு

## தந்நகர்ப்புறமடைந்தவத்தியாயம்.

பஃறொடைவெண்பா.

பூமேவுநான்முகத்தோன்போற்றித்துதிப்பதுவுந்
தேமேவுபைந்துளவஞ்சேரக்கமழ்வதுவு
மாமேவுமாமறைகள்வாழ்த்தப்பொலிவதுவுந்
தாமேவுவஞ்சச்சகடமுதைத்ததுவுந்
தீமேவுமாரணியஞ்சென்றுதிரிந்ததுவும்
தூமேவுமன்பருளந்தோன்றப்பயில்வதுவும்
பாமேகவண்ணன்பதம். (க)

சகடம் - வண்டி, பயிலுதல் - பழகுதல்.

ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த

ஆசிரியத்தாழிசை.

நீரார்பைங்கொண்டனிகர்திருமேனிப்பெருமான்
பாராரநின்றசெழும்பங்கயச்செம்போதடிக
ளோர்வார்வினையிருட்குச்செங்கதிரோனென்பரால்.
காயாம்பூவொத்தகதிர்த்திருமேனிப்பெருமான்
பாயாரணமணக்கும்பங்கயச்செம்போதடிக
ளாய்வார்வினைவாரிக்கார்வடவையென்பரால்.
வற்றாக்கடனேர்வருதிருமேனிப்பெருமான்
பற்றார்கழலொலிக்கும்பங்கயச்செம்போதடிக
ளுற்றார்வினையரவுக்கோருவணமென்பரால். (உ)

கொண்டல் - மேகம், வாரி - கடல், உவணம் - கருடன், ஆரணம் - வேதம்.

வெள்ளொத்தாழிசை.

திண்ணமென்றுதீயதீர
வெண்ணமொன்றியென்றுமுள்வார்.
கண்ணன்கமலக்கழல். (ங)

திண்ணம் - திடம், உள்ளல் - நினைத்தல்.

ஒருபொருண்மேன் மூன்றடுக்கிவந்த

வெள்ளொத்தாழிசை.

பற்றிற்பழுதியற்றும்பந்தத்துழனெஞ்சே
செற்றச்சகடுதைத்தான்றாள்குறியாதெனகொலோ
முற்றவொழிந்துவிடல்.

துன்றுபவம்விளைக்கும்பந்தத்துழனெஞ்சே
கன்றுகுணில்கொண்டான்றாள்குறியாதென்கொலோ
வென்றுமொழிந்துவிடல்.

நந்தும்வினைக்கிடனும்பந்தத்துழனெஞ்சே
யுந்திபருதிடந்தான்றாள்குறியாதென்கொலோ
வந்தோவொழிந்துவிடல். (ச)

குறித்தல் - நினைத்தல், குணில் - குறுந்தடி.

வெளிவிருத்தம்.

வேதந்தெரித்தானும்வேதத்திற்குள்ளானுங்கண்ணன்போலும்
போதந்தருவானும்போந்தொளியாய்நிற்பானுங்கண்ணன்போலு
மேதந்தவிர்ப்பானுமெவ்வுயிருங்காப்பானுங்கண்ணன்போலும். (ரு)

போதம் - ஞானம், ஏதம்-குற்றம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முற்றுவிளமென்றளிர்க்கரத்தான்முனிவிலாதுமெல்லெனச்செம்
பொற்றாமரையிற்குடியிருக்கும்பூவைவருடுந்தொறுஞ்சேக்கும்
விற்றாரணிநற்பதமிரண்டும்வியன்மாநிலந்தீண்டிடநடந்து
கற்றுமேய்த்தசிற்றாயன்காமர்சீர்த்திவாழியவே. (சு)

பூவை - நாகணவாய்ப்புள், இது திருமகளுக்கு உவமையாகுபெயர்.

மேற்படி - வேறு.

பலதலையனந்தனோடெண்பகடுமெய்ப்பாறினிற்ப
மலர்தலையுலகந்தாங்குமாலையந்தடந்தோள்வேந்தே
குலமறையுணர்ச்சிமிக்ககுசேலன்சென்றிறுக்கப்பட்ட
நலமலிநெய்தல்சார்ந்தநவிர்கடல்வளமிக்கன்றே. (எ)

எண்பகடு - அஷ்டதிக்குயானைகள், அனந்தன் - ஆதிசேஷன்.

சிறுறுசங்கம்வாய்ந்துசெழுங்குவலயமுண்டாக்கி
யோருறுகமடமீனவுருவங்கொண்டுயிர்களோம்பி

யேருறுபவளச்செவ்வாயினையந்துபொன்புணர்ந்துதண்ணென்
காருறுநிறமுங்காட்டிக்கண்ணணைத்துணையும்வாரி. (௮)

வாங்குதெண்கடலின்மீனமுதலுயிர்மருவலாலே
வீங்கியபுலவுமாற்றிமிளிர்தராப்பூத்தநெய்த
றேங்கியமணங்கான்றன்றசிறப்பினைச்செய்யுந்தம்மைத்
தாங்குறுகளைகணானோர்தம்பழிமறைப்பார்போல. (௯)

நெய்தல் - கருங்குவளைமலர், களைகண் - ஆதாரம்.

அலையெறிமணியுமுத்துமலகும்பன்மீனுமற்றுந்
தலைமயக்குற்றுமுன்றிற்றார்தருகுப்பையாகக்
குலைமருங்கியற்றும்பெண்ணைமடற்பனைகுரம்பைதோறும்
வலைவளத்தொழின்மேற்கொண்டுவாழ்வனபரதச்சாதி. (௧௦)

அலகு - பலகறை, பெண்ணைமடல் - பனையோலை.

அயில்விழிப்பகையாமென்பதறிந்துயிர்செகுப்பார்போலக்
குயின்மொழிப்பரவமாதர்குரைகடன்மீன்கள்போழ்ந்து
வெயிலிடையுணக்கிப்பின்னும்விற்றுளமகிழ்வாரோரே
செயிருறுசிற்றத்தெவ்வைச்சிதைத்துளத்துவகைசெய்யார். (௧௧)

அயில் - வேல், செகுத்தல் - கொல்லுதல், பரவமாதர் - வலைச்சியர்.

இணங்குகைத்தோணியேறியெறிவலைவீசுமார்ப்பு
மணங்குறப்பட்டபன்மீனருங்கரையுய்க்குமார்ப்பு
முணங்கன்மீன்கவர்புள்ளோப்புமார்ப்புமிக்கோசைபோக்கி
வணங்குநுண்ணிடையாரம்மீன்மாறிடுமார்ப்புமல்கும். (௧௨)

ஒப்புதல் - ஓட்டுதல், உணங்கல் - உலர்தல், ஆர்ப்பு - ஒலி.

மீன்விலைக்கொளவச்சேரிவிருப்பொடுபுகுந்தமைந்தர்
வானவிற்போனுநெற்றிவலைச்சியர்கண்மீன்பாய
மானமால்கொண்டன்னார்சொல்வரம்பினைக்கடவாராகி
மீனமிக்குறப்பொன்னெல்லாமீந்தளித்தவையேகொள்வார். (௧௩)

மால் - ஆசை, அளித்தவையே - தந்தவற்றையே,

கொழுஞ்சுறாக்கொழுமீனோடுகூட்டிநன்கருந்தவாங்காங்
கெழுங்கரும்பெண்ணைதோறுமிறக்குகண்மாறப்புக்கார்
செழுங்கதிர்த்தரளக்குப்பைசேபொளிப்பவளஞ்சால
வழுங்கலில்பரதமாக்களிடைக்கிடையளிப்பக்கொள்வார். (௧௪)

பெண்ணை - பனைமரம், தரளம் - முத்து.

பெருகியசெல்வருள்ளும்பயனிலாருளராற்பேணி
யருகியசெல்வருள்ளும்பயனுளாருளரென்றாய்ந்து
பெரியவர்சொலுஞ்சொற்றேறனும்பெரியநீர்க்கடலுமாங்காங்
குரியவெண்மணற்சிற்றாறுக்கேணியுமுரியநீரால். (௧௫)

சிற்றிடைவலைச்சிபார்கடெருத்தொறுங்கூறிவிற்கும்
வற்றன்மீனாற்றம்போக்குமவர்மனைக்குழற்றுழமபூ
பற்றுபரதர்கோட்டிற்பரப்புமீனாற்றம்போக்கு
பற்றவர்திணிதோள்வேய்ந்தமெய்தலங்கண்ணியாதோ. (௧௬)

மருங்கிலாப்பரத்திமார்கண்மடநடைகற்பான்வேண்டி
யொருங்குவந்தடைந்தாற்போலவுயர்கரும்புன்னைச்சேக்கை
யருங்குலப்பார்ப்பினோடும்பெடையொடுமன்னந்துஞ்சும
கருங்கொடியடம்புசூழ்ந்தகைதையங்கானல்வேலி. (௧௭)

மருங்கு - இடை, பார்ப்பு - குஞ்சு.

தினைமுதல்வரகுமுன்செஞ்சாலிமுன்விளைக்குமன்று
வனைபுகழ்நிலத்தார்நன்றுமழைவளமவேண்டிநிற்பர்
பனைசெறிபின்னிலத்துப்படுமுப்புவிளைபபோமென்றும்
வினைதவாதுளற்றமிக்கவெயில்வளம்வேண்டிநிற்பர். (௧௮)

இவ்வகைவளங்கடெல்லாமினிதுகண்விட்டுநோக்கிச
செவ்வியவிறும்பூதெய்திச்சீகரந்துளிப்பத்தன்மெய்
யொவ்வவெல்வளிசண்ணென்னவருடவோர்புன்னைநீழ
லெவ்வியமலித்தமேலோன்சற்றிருந்தயர்வுயிர்த்தான். (௧௯)

சீகரம் - நீர்த்திவலை, கண்விட்டு - பார்வைசெலுத்தி, இறும்பூது - ஆச்சரியம்.

இக்கலமுகைப்பாற்குப்பொன்னிரம்மியுமீதற்கில்லை
மிக்கவனகேளாதய்யபவிரும்புறுசிறப்புமில்லை
நக்கசெங்கமலக்கண்ணன்சேவைக்குநடக்கிறேமென்
றேக்கமெய்யுரைத்திட்டாலுமுண்மையென்றுள்ளங்கொள்ளான். (௨0)

உகைத்தல - செலுத்தல், இம்மி - ஒரு சிறெண்.

என்செய்வானன்சொற்கூறியிரப்பதேதுணிவென்றெண்ணிப்
பொன்செய்தமலர்ப்பூம்புன்னைநிழலினின்றெழுந்துபோந்து
வன்செயன்மீகாற்சார்ந்துமனமிரங்குமாபல்கூறி
நன்செயலேறிநின்றானடைக்கலமேறினானே. (௨௧)

மீகான் - கப்பலோட்டுகிறவன், நடைக்கலம் - கப்பல்.

கூட்டுடைக்கலமீகானற்குணாகடல்கிழியவோடித்
தேம்பலிறுவாரகைக்குசசெல்றுறையிறுத்தலோடும்

பாம்பணைக்கடவுள்பாதபங்கயமுள்ளத்துள்வோ
னேம்பலுற்றிறங்குவாரோடிறங்கினனுவகையெய்தி. (உஉ)

கூம்பு - பாய்மரம், இறத்தல் - தங்குதல்.

## கலிவிருத்தம்.

பானலந்துவரைப்பன்மினார்கண்வா
யானலந்துவரைப்பற்றுறுதவன்
வானலந்துவரைப்படுப்போன்பின்வாழ்
கானலந்துவரைப்பதிகண்ணுற்றான். (உ௩)

தருமந்தன்னகந்தங்கிப்பொலிவுறத்
தெருமந்தன்னகுபாவஞ்சிதைதர
வருமந்தன்னவன்வைகலினரஞர்க்
கருமந்தன்னறுமின்றக்கடிநகர். (உ௪)

கொடியவிஞ்சிவட்காரைக்குனித்தடுங்
கொடியவிஞ்சிவட்காரைக்குனித்தடுங்
கடியகற்சிக்கிடங்கராக்காலுறுங்
கடியகற்சிக்கிடங்கராக்காலுறும். (உ௫)

குவலயங்கமலங்குலவாம்பன்மல்
குவலயங்கமலங்குகுதிக்குமுன்
குவலயங்கமலங்குறத்தோற்றிநன்
குவலயங்கமலங்குயிற்றநகர். (உ௬)

இன்னமாநகர்காண்டலுமேர்முகி
லன்னமேனியற்காண்டலொப்பாமகிழ்ந்
தின்னறீர்தரவெட்டிவிசைகொளீஇ
நன்னர்நெஞ்சனடக்கத்தொடங்கினான். (உ௭)

ஏர் - அழகு, இன்னல் - துன்பம்.

பரிக்கொதுங்கியும்பாய்தருமும்மதக்
கரிக்குந்தேர்க்குமொதுங்கியுங்கார்க்குழ
லரிக்கண்மாதர்க்கொதுங்கியுமாழ்வினை
பரிக்கலாதான்படருகின்றனரோ. (உ௮)

முன்னும்பார்க்குமுதுமொராவிமேதானறலாற
பின்னும்பார்க்கும்பெருநிலத்தாருயி
ருன்னும்பார்க்குமுறுவர்குழாமெலா
மின்னும்பார்க்கவெழுதிடுஞ்சீர்த்தியான். (உ௯)

உறவர் - முனிவர், சீர்த்தி - கீர்த்தி.

சீதநீழற்செலிற்சிற்றுயிர்த்தொகை
போதச்சாம்புமென்றெண்ணியபுந்தியா
ளுதவந்தவழாறுநடந்திடுங்
காதலங்கைவிரித்துக்கவித்தரோ. (ரு0)

ஆதவம் - வெயில், ஆறு - வழி.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாகுவண்டொலிப்பப்படுங்கடற்செருக்காளுடொறுமின்பிடியூட்டும்
பாகுடல்குமைக்குங்கறையடிக்களிறுபாவியகூடமுங்கடுங்கா
லேகுவாம்பரிமந்திரங்களும்வாட்போரிலகுகல்லூரியும்விண்ணிற்
போகுயரிரதநிலைகளுமிகுந்தபுடைவளப்பெருநகர்கடந்தான். (ருக)

கல்லூரி - கல்விபயிலிடம், நாகு - இளமை.

கூந்தலம்பிடியுங்கோணைமாக்களிறுங்கூடியாட்டயர்ந்தெனமணிப்பூ [ஞ்
ணைந்தெழிலிளமங்கையருமைந்தரும்பொன்னியைதருசிவிறியும்பந்து
சேந்தகைத்தலங்கொண்டொள்ளறலிறைத்துச்செறிகளியின்புவந்தாடு
பூந்தடமலிந்துபலவளநிறைந்துபொலிதருமிடைநகர்கடந்தான். [ம்

பிடி - பெண்யானை, அறல் - நீர்.

செப்பருமருநான்மடந்தபுதேர்ச்சிச்செந்தமிழ்ப்புலவர்தந்தூக்கிற், றிப்பியவணியும்பலபொருள்வாய்ப்புந்தெளிதருநீர்மையுஞ்சீருந், தப்பிலாழமுங்கொண்டலர்மணமுடைத்தாய்ச்சாற்றுதோறகலமுற்றெவரு, மொப்பருங்குணாத்தென்றுணாந்திடப்பொலியுமுண்ணகரகழியைக் கடந்தான். (ருரு)

தூக்கு - பாட்டு, மடம் - அறியாமை.

படங்கிளரரவப்பாயுடைப்பகவன்பாரளந்திட்டநாள்வளர்ந்தாங், கிடங்கொள்விண்ணுலகம்போழ்ந்துமேல்வளராவெதிர்தரியலருயிர் மடங்க, முடங்குளைமடங்கலடங்கருமுழுவைமுதற்கொடும்பொறிபலவுடைத்தாய்த், தடங்கொளீஇஞ்சின்றமதிற்பெருவாயிற்றடையையுந்தடையறக் கடந்தான். (ருச)

தரியலர் - பகைவர், மடங்கல் - சிங்கம், உழுவை - புலி.

உட்புகுமரசைமுன்புகுந்திருந்தவோரரசெதிர்கொளுங்காலை
விட்புலம்புகழுமற்றுமோரரசுவிளைவிளுட்புகுவதுகாணூஉ
நட்புடையிவ்வீரரசுநன்கெதிரநடப்பவிவ்வாறுருதுறலாற் [தான்.
கட்புலம்புகாதாநெருக்கிடையொதுங்கிக்கரங்கண்மேற்றூக்கியுட்புகுந்
விடம்படுவடிவாண்மள்ளருக்கொதுங்கின்விளைவினவ்வொதுங்கிடம்வ
றிடம்படுபரிகடாவிடமதற்குந்திரிந்தொதுங்கிடுமிடஞ்சிறிக் [ளிபோற்

கடப்படுகளிறு பாயிடமுதற்குங்கண்டொறுங்கிடுமிடங்கொடிஞ்சி
யிடப்படுமிரதமுன்பினூரிடமற்றெவ்விடமிவனடந்திடுவான். (௩௬)

போதருமிடங்கடொறுநெருக்குறலாற்பொன்வரையனையதோண்மைந்
மேதருமார்பத்திலங்குமாலைகளும்வினாகெழுகலவையுமிளமை [தர்
மாதர்மெய்ப்பூசுங்குங்குமச்சேறுமான்மதமளாவியைந்நாற்றுக்
காதநாறிடுசெஞ்சந்தமுங்குசேலன்கந்தையுநாறினமாதோ. (௩௭)

வெளிவருவாருமுட்புகுவாரும்வீதியிற்கலாம்விளைப்பாரு
மளிமலர்மாலைசாந்தமுன்கொடுபோயலங்கரிப்பாருமுன்வாயி
லொளிபெறுகதவந்தட்டிநிற்பாருமுழலுகின்றுருபாய்மைந்தர்
களிதரப்பயிலப்போகம்விற்றுண்ணுங்கணிகையர்சேரியைக்கடந்தான்.

கதவம் - கதவு, கடம் - மதம், விளா - வாசனை.

சங்கிரிந்தெடுக்காற்போன்றவாலரியாற்சமைத்திடப்படுபுழுக்கலு
ந்தீம், பொங்குபாற்குழம்புமளையுமாச்சியமும்பொருவில்பல்சுவைக்கறி
களுந்தேன், றங்குமுக்கனியுமமைத்துண்பார்க்குநவத்தகக்கபொன்முத
லைவள்ளனவென், றெங்குமாராய்வுற்றமைத்திடுமபின்னோரிருந்தெரு
நோக்கியுண்மகிழ்ந்தான். (௩௯)

புழுக்கல் - சோறு, அரி - அரிசி, அளை - வெண்ணெய், ஆச்சியம் - நெய்.

குருமலர்வெண்பொற்கட்டிமூன்றமைத்தகுமுதத்திற்பொற்கலஞ்
செறித்துப், பொருவறுபனிநீருலையின்முந்தரிசிபுகட்டியொண்மணித்
துழலிட்டுத், திருகில்விந்துருமவிந்தனமடுக்கித்திருமலிவலைகர்தந்தெரு
வி, னருமைசால்சிறியபிறைக்கள்பண்ணையினுமடுந்தொழில்கற்பதுகண்
டான். (௪௦)

குமுதம் - அடுப்பு, விந்துருமம் - பவளம், இந்தனம் - விறகு.

ஆப்பியான்மெழுகிழுத்தநுண்டுகளானவிர்தருகோலமுமியற்றிப்
பூப்பலீகூந்தற்பார்ப்பனபகளிர்பொலிமற்றைப்பணிதலைநிற்பத்
தூப்பயிலுபகரணங்கொடுமறையோர்துணர்த்தழல்வளர்த்தவியமரர்க்
கூட்டிடுபளிக்கும்பன்மகச்சாலைக்கூட்டமாங்காங்குகண்டுவந்தான். (௪௧)

ஆப்பி - கோமயம், (சாணி.)

கறைகடிகலைந்தோன்முடிந்தபூணூலர்கவின்றருமுஞ்சிநாணரையி
னிறைதருதானைச்சொருக்குமுன்றாங்கநீளவிட்டவர்குழாங்கூடி
மறைபலகற்குங்கிடைகளுநடைதேர்மாண்புடையாசிரியன்சொற் [றுல்.
குறைவறவுணர்த்தும்பெருமையுங்கண்டுங்கேட்டுமுள்ளுவகைகூர்ந்தன
ரீகளப்பளிக்குமாடமேன்மடவார்செறிதருபுலவியில்வெறுத்த
தீந்றுமணிபொன்றரளமாலிகைகள்செல்பவர்காலுறப்பின்னி

பாதர்மேன்மைந்தர்மைந்தர்மேன்மாதர்மாறிவீழ்தரவடிக்கடிசெ
யேதமிலரசவீதியிற்புகுந்தானிருந்தவக்குசேலமாமுனிவன். (௪௩)

புலவி - பிணக்கம், முஞ்சி - ஓர்வகைப்புல் (தருப்பை.) சரளம் - மூக்கு.

மணிகள்கால்யாத்தமாளிகைதோறுமருவியமலிநீர்பாக்கும், பணி
தருமைந்தர்சென்னியிற்புயத்திற்பதமெடுத்தோர்சிடுமாத, ரணிகிளர்சி
லம்பினொலியும்பின்னெழுபொன்னவிர்தருகாஞ்சியினொலியும், குனில்
பொருமுரசமுதலியமடங்கக்குழூஉக்குரல்கேட்டுள்ளுவகைத்தான் (௪௪)

காஞ்சி - எண்கோவைமணி.

வரைமிசைமுளைத்தகழைநுனிக்குழன்றமாசுணவுரியமைக்காற்போ
னிரைபடுமாடச்சிகைநடுநாகநெடுமரத்துகிலசைவுறவும்
புனைதபச்செறித்துக்கட்டியபளியாற்புனைந்ததோரணங்களின்மீது
நிரைநரைமூப்பிலமரரூர்விமானஞ்சிக்குண்டுகிடப்பதுங்கண்டான்.

மாசுணம் - பாம்பு, உரி - தோல்.

பாற்றினஞ்சூழும்வசிநுதிநெடுவேற்பரத்தியர்முன்கடிப்போச்சு
மேற்றுரிமுரசவேற்றிடிமுழக்கமெழுதலும்வெளிறுநீர்நெகிழ்ந்து
கூற்றுமுண்ணடுங்கவெதிர்பரிக்காரர்குழுக்கிடாவகைசெலுங்களிறு
காற்றுவெட்பரிவிளைழிநீர்ச்சேற்றிற்கால்புதைந்தெழாவகைகண்டான்.

பாறு - பருந்து, கடிப்பு - குறுந்தடி, வெளில் - யானைகட்டுந்தூண்.

தம்பிடையேற்றுரவரிடைச்சிறந்தகரணிமன்னவரும்வந்தேற்பச், செம்மையிற்கொடுக்கும்பொருளுடனொழுக்குஞ் செழுங்கரகப்புனல் பெருகி, மும்மைநல்லுலகும்வியப்பநீணதியாய்முடுகிடக்கதிரவனுறுந் தும், வெம்மைநீர்பாக்குச்சிறுவர்கைத்தோணிவிட்டுலாயாடுதல்கண் டான். (௪௭)

கரகம் - கெண்டிகை, கதிரவன் - சூரியன்.

தெள்ளியதாளநிற்றியசண்ணைந்நீற்றியமாடவாய்தோறும்
வெள்ளியாற்பொன்னாற்பதுமராகத்தால்வித்துருமத்தினான்மற்றை
யொள்ளியமணியாலமைத்தகந்திகண்மீயுயர்கதலிகைப்பசுங்கமுகு
ஞள்ளியவானத்தலமரிதுத்தியுறுத்தல்லணிகளுங்கண்டான். (௪௮)

தம்மையூரிறைவனகர்வளங்கண்டாலதாக்குமென்பின்னேன்
செம்மையாரசுபுரிநகர்வளத்தின்சிறப்புநோக்கிடற்குறித்தாங்குத்
துய்முகிற்பொழியவேலிளமைந்தர்துணைவியரோடுமின்பமுறும்
விழ்முவான்செல்வமாடமாளிகையின்மேற்றவழ்ந்திடுவனகண்டான்.

சலதரம் - மேகம், சந்தி - கமுகமரம்.

மன்னர்தம்பவளக்காற்குடைபிச்சம்வரைந்திடுகேதநமொலிய
னன்னர்கொள்சிவிறியாலவட்டங்கணிதுவன்றுவிருள்பரப்பப்
பன்னகமணியும்வயிரமுமுத்தும்பதித்தபொன்மகுடமுங்குழையு
மின்னல்செய்வாகுவலயமும்வாளும்வெயிலுறப்பரப்புதல்கண்டான்.

கேதநம் - கொடி, பன்னகமணி - மாணிக்கம்.

வெண்மையிற்றிகழ்ந்தமேனிலைமாடவியலுபரிகையிடையிருந்து, நுண்மையிற்புனையப்புகுந்தவோர்மைந்தனுவலருங்காமத் தான்மயங்கிப், பண்மையிற்பொலிந்தாள்வழக்கறுத்தமர்க்கும்படாரிக்கண்ணிதனுதலென், றண்மையிற்செறிந்தசிறுபிறையிடைப்பொட்டணிந்துவெள்கிடுவது கண்டான். (௫௧)

பொற்றைநன்மாடத்தும்பரோர்மடந்தைபுரிகுழற்றரள வெண்பிறையு, மற்றொருமாடத்தும்பரிற்றங்குபூங்குலிற்செறிந்தவெண்பிறையுங், கற்றவர்புகழும்பெருந்தவமுனிவன்கண்டிருபிறைகளுள்ளனவோ' வுற்றவித்தன்மையென்னெனமயங்கியுண்மைதேர்ந் துண்ணகைகொண்டான். (௫௨)

நவமணிமாடமீமிசையிட்டநறும்பரியங்கத்தினன்கு
துவளிடைமடவாரொடுநலனுகர்ந்ததோள்வலிமைந்தர்களவர்பூ [ரு
விவர்குழல்சேர்த்துக்கட்டிடக்கதிர்நாணெடுத்தனர்மயங்குபண்மையிற்
ழுவர்குடிகுயினிற்கட்டினரதனையுறுமின்னேயென்னவுட்கொண்டான்.

பரியங்கம் - கட்டில், குயின் - மேகம்.

பாயொளிவிரிக்கும்பொற்றகடிணங்கப்பதித்துநன்கியற்றியமறுகின்
மேயினவரசர்வில்லிடுமகுடமிடைதலின்றொன்றொடொன்றுரிஞ்சச்
சேயபன்மணியும்வயிரமுமற்றுஞ்சிதர்தரவுதிர்ந்துதங்குவதாற் [ன்.
காயும்வெம்பரல்போற்செல்லுகின்றார்தங்காலிடையுறுத்துதல் கண்டா

மாங்குயின்மருட்டுமழலையங்கிளவிமதர்த்தரிபடர்ந்துமைநோக்கட்
பூங்குழன்மடமாதர்களொடுங்கண்ணன்பொன்னுலகோரழுக்கறுப்பப்
பாங்குறப்புரியுமின்பநற்கலவிப்பகுப்பெலாங்கைவலாற்கொண்டு
தேங்குமந்நகரார்தங்கண்மாளிகைமுன்சித்திரித்திருப்பனகண்டான்.

மறுகு - வீதி, வில் - ஒளி, கிளவி - சொல்.

தரைமிசைக்கொடுங்கோனடவியகஞ்சன்சாளவனேசிசுபாலன்
வரைநிகர்தோட்காலயவனனுதிமாற்றலர்ச்செருத்தபோர்க்கண்ணன்
விரைகெழுவென்றிப்பெரும்புகழ்யாப்பின்மேவரவிளையத்திடந்தோறு
திரைசெறிகடல்சூழுலகினர்வியப்பத்தித்திக்கப்பாடுதல்கேட்டான். [ந்

தன்வயிற்றுலகமுழுவதுமடக்கித்தந்துமீட்டளித்திடுபிரானை
மின்வயிற்பொலியவுயர்ந்தமாளிகையென்வியன்வயிற்றடக்கிமீட்டுமிழு
பொன்வயிற்பொலிந்தவிந்நகர்வளப்பம்புகலுதல்சேடற்குமரிதான் [ம்
முன்வயிற்காணலிந்திரன்றனக்குமுடிவரிதாலெனமதித்தான். (௬௭)

மாந்தளிர்மேனியிலக்குமிமணாளன்மலர்தலைப்புவிவருக்குறுங்காற்
றேந்தடமலராற்கணிநகரிம்மாதிரிகைசெய்யெனத்தெரிவிப்பச்
சேர்ந்ததன்னான்குகரங்களாற்சிருட்டிசெயப்படுமாநகர்போலும் [ன்.
வேந்தர்களொருங்குமுரசுகண்படாவிவ்வியனகரெனவுமுட்கொண்டா

சிறந்தவந்நகரவளத்திலிவ்வாறுசிறிதறிந்தற்புதமுறலால்
விறந்தபல்காதவழிநடந்ததனான்மேவியவருத்தமுமிளைப்பும்
பறந்தனபசியுமொழிந்ததுநாவிற்பைம்புனலூறியதுறவு
மறந்தனைமனத்தானுடலமுஞ்சிறிதுதளிர்த்ததாலதிசயம்பயப்ப.

ஐந்துதுந்துபியின்முழக்கமுமன்னரவிர்கழலொலியும்வாய்ப்பரியி
னந்தலிலார்ப்புங்கந்தடுகளிற்றினரலலுந்தேரரவமுஞ்சேர்ந் [யுஞ்
தந்திநின்றெழுந்துவிண்முகடுடைக்கவளவில்பல்வளத்தவாய்ப்பொலி
சந்தமார்கண்ணபிரான்றிருக்கோயிற்றனித்தலைவாயிலைச்சார்ந்தான்.

கந்து - யானைகட்டுந் தூண், சந்தம் - அழகு.

கண்டனன்றலைவாயிற்பெருஞ்சிறப்பைக்கழியவுமுள்ளத்துத்திகைப்பு
கொண்டனனடங்கிலாவிறும்பூதுங்கொண்டனனெண்ணிடுதற்கும் [க்
விண்டசிற்றிடமுமின்றொருகற்பமேவினாங்காத்திருந்திடினுந்
தண்டலின்னெருக்கந்தவிர்ந்திடாதுள்ளாற்சார்வதெவ்வாறெனநினைந்து.

எண் - எள், இறும்பூது - ஆச்சரியம்.

கன்னல்பல்கழிதல்கண்டுபாணித்தல்காரியமன்றினித்துணிந்திம்
மன்னியநெருக்கிற்புகுந்திடினமக்குவருவனவருகவென்றோர்ந்து
துன்னினனங்கோரரசனைச்சூழ்ந்தசுடர்ந்தகஞ்சுகப்படிவுடையார்
மின்னியவாளாற்பற்பலர்துரப்பவெரீஇயினன்சேபிடையகன்றான்.

கஞ்சுகம் - சட்டை, பாணித்தல் - தாமதித்தல்.

மீட்டுமுட்டுணியாவணிகொளாங்கொருசார்மென்மெலமேவினனு
ங்குத், தாட்டுணைபணிந்துகண்ணனுக்களாக்குந்தயங்குசெம்பொற்பொ
திருவித்த, போட்டிடமதனற்காவலர்பலருமுடுக்கினார்வாளுறைகழித்
துத், திட்டருட்புகழோனென்செய்வானடுங்கித்தியங்கியோட்டம்பிடி
த்துய்ந்தான். (௬௮)

பின்னைரெங்ஙனம்யாம்புகுவதென்றுளத்துப்பெரிதுபாராய்ந்துநின்
றிடுபோ, துன்னருங்கடவுட்கண்ணனதருள்போலோவருந்தானைதற்

சூழ, மன்னனுங்கொருவனடைந்தனன்கண்டான்மற்றவன்சேனையுட்
புகுந்தான், மன்னரும்வருத்தமுடங்குறல்யாவும்பரித்தனன்மென்மெ
லநடந்தான். (சுச)

நெருக்கினுட்படலா லுடலலைபட்டுநீளிடைக்காலிலைத்துருமல்,
வெருக்கொளச்சென்றுங்கரங்கண்மேலெடுத்தும் விடாதுகையிடிப்பு
ண்டும்வளைந்தும், பெருக்குறுவெயரின்மூழ்கியுமிரண்டாம்பிறப்பிது
நமக்கெனவுணர்ந்து, திருக்கிளர்துவாரபாலர்நிற்கின்றசெவ்வியவிடத்
தினையடைந்தான். (சுரு)

நீளிடை - நெடுந்தூரம், வெயர் - வேர்வை.

நெடியவனடியாரிவரெனவெவருநிகழ்த்திடத்தகுமடையாளம்
படியறப்புனைந்துபொலிவுறுந்துவாரபாலரைக்கண்டனன்மகிழ்ந்தான்
மடிவில்வைணவசிகாமணிகளாகுமற்றிவர்வைகுந்தத்துறையுங்
கடிநலில்சயவிசயர்களேயிவரைக்கடுப்பவரிலரெனநினைந்தான். (சுசு)

நெடியவன் - திருமால், நிகழ்த்தல் - சொல்லல்.

முகத்திடைநீண்டவுரோமமிக்கவனெண்முடிதற்குமிடமறயாரு
நகத்தகுபற்பறளையுடைக்கந்தைநயந்துகொண்டவன்மதிப்பிலாமை
மிகத்தரும்யாக்கையுடையவன்றுவாரமேவுமப்பாலர்முன்குறுகி [றே.
யிகத்தலில்குணத்தீர்கேட்டருள்வீரென்றியம்புறத்தொடங்கினனன்

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மக்களுண்மிக்கீர்நிலவண்ணனுக்கடியீர்தூய்தாத்
தொக்கபுண்ணியத்தீர்பாவந்தொலைத்தமாதவருஞ்செய்ய
நக்கபூங்காலத்தோனுநண்ணரும்புகழ்பெற்றுள்ளீ
ரெக்கலைகளினும்வல்லீரியம்புமென்னுரைகொண்மின். (சுஅ)

உங்களைநோக்குந்தோறுமுவரியும்வெஃகுமேனிச்
செங்கண்மாறனைக்கண்டாங்குச்செறிந்திடுமுவகையந்தக்
கொங்கவிழ்கமலர்சேக்கைக்கோமளவல்லிமார்பன்
றுங்கநற்சேவையாற்றித்தூயராதலினானன்றே. (சுகூ)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எளியனேன்மறையோர்தங்குலத்துதித்தேனென்பெயர்குசேலன்
மிக்கொலிக்குநளிர்கொள்வெண்டரங்கப்பாற்கடனுப்பணுகணைத்துயி
லொழிந்தடியார்க், களிசெய்தல்லார்க்கிறுத்திடவவதாரஞ்செய்தக
ண்ணபிரானே, டிளமையிற்பற்பல்கலைபயின்றுள்ளேனிசைக்குமுக்கு
ற்றமுமகல். (எ0)

கத்துவெண்டரங்கக்கடலைமீகாமற்கடந்தவண்கணாப்படரொரு
வற், செத்துமண்டியபன்னெருக்குடைவாயிற்செழுங்கடறன்னைநல்ல
ருளே,பொத்துநெஞ்சகநும்மாற்கடந்தடியார்பொருள்பெறுமுதத்தியங்
கணையென், றெத்துமாமறைகள்சொலப்படுங்கண்ணனிடையடைதர
வுளநினைந்தேன். (எக)

வச்சிரத்தடக்கைவாசவனேவமஞ்சினம்பொழிந்தகன்மழையை,நச்
சும்விண்ணுரிஞ்சும்போகுயர்குவட்டோர்நாகமேந்தித்தடுத்தருளு, மச்
சுதன்பாற்சென்றேழையேன்வருகையறிவித்தென்றனையவட் சேர்த்த
ன், மெச்சுறுங்கடனென்றுரைத்தனனெவரும்விரும்புறுகுசேலமாத
வனே. (எஉ)

மஞ்சு - மேகம், நாகம் - மலை.

இன்னணம்வாயில்காப்பவர்தம்மோடியம்பினன்புகன்மொழிகேளா
வன்னவர்பக்கலுறுஞ்சிலர்மடமையாலடரப்படுமனத்தா
ருன்னருமறைநன்கோர்ந்தவிந்குசேலனொளிர்முகத்திணைவிழிபரப்பிப்
பன்னருமிழிசொற்புகலலுற்றாற்பரவைசூழுலகெலாம்புரப்போய்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வருத்தபல்லுலகும்போற்றுமாற்றலர்கூற்றாமேவச்
செகுத்தரசாளுங்கண்ணச்செம்மலெங்கேநீயெங்கே
யிருத்தபஃறுவாரகக்கதவோமைப்பார்ப்பனேசற்றும்
பகுத்தறிந்திடலற்றாய்கொல்பயனின்மைப்படைந்தாய்போலும். (எச)

மின்மைசெய்பகைஞர்போலிமிர்ந்திடுகழற்கார்க்கண்ணன்
றன்மையுமேழைநின்றன்மையுந்தெரிந்துநோக்கில்
வன்மைசெய்புழைக்கைமாவுமசகமும்போலும்வாரிக்
கொன்மைசெய்நிருமாவின்குளப்படிநீரும்போலும். (எரு)

புழைக்கைமா - துவாரத்தோடுகூடிய துதிக்கையையுடைய யானை.

கனகமால்வரையுமண்ணாங்கட்டியும்போலுஞ்செங்கேழ்த்
தினகரவொளியுமோர்கத்தியோதத்தினொளியும்போலு
மனகமார்தருவும்புன்றிழகப்புலும்போலுஞ்சேடப்
பணகமுஞ்சிறுநாங்கூழும்போலும்பாய்மிடிப்பார்ப்பனே. (எசு)

கத்தியோதம் - மின்மினிப்பூச்சி, நாங்கூழ் - நாக்குப்பூச்சி.

பொருணணியுளனென்றியாரும்புகலுமோர்வார்த்தைவேண்டு
மிருகையுங்கடகம்வேண்டுமிலங்குகுண்டலங்கள்வேண்டும்
வருவிரலாழிவேண்டுமார்பிடைமதாணிவேண்டு
முருவமுத்தாரம்வேண்டுமுயர்ந்தபட்டாடைவேண்டும். (எஎ)

சிவிகைமுன்னூர்திவேண்டுஞ்செழும்பொருட்செலவுவேண்டுங்
குவிகையேவலரும்வேண்டுங்கோலமார்ந்திருக்கவேண்டுங்
கவிகைதாங்குநரும்வேண்டுங்கையுறைசிறப்பவேண்டு
மவிகையில்விளக்கம்வேண்டுமரசவைகுறுகுவார்க்கே. (எஅ)

சிறப்புறச்செல்வராகிற்சிறப்புறுமுகமன்செய்வர்
பெறப்படுமிடியராகிற்பிடர்பிடித்துந்துவார்கள்
வறப்பினுன்முன்னுணட்டைமறந்திடாதிருக்கின்றான்கொ
லிறப்பநேற்றுண்டகூற்றையின்றியாமறப்பமாகில். (எகூ)

இலகுமோர்நகரச்செல்வரிடத்தினுஞ்செல்வர்நட்பே
நிலவுறநிற்குமேழைநீர்மையர்நட்பில்லா
தலகில்செல்வத்தனாகியரசர்யாவருந்தற்போற்ற
மலர்தலையுலகங்காக்குமன்னன்மாட்டுன்னட்பெற்றே. (அ௰)

நிலத்திருவேட்டுநாட்டுநெடும்புகழ்த்தும்பைசூடி
யுலப்பெருந்திணிதோண்மாற்றாருயிர்தபவுடற்றுங்காலை
நலப்படுந்தந்தைதமைந்தர்நந்துமுன்னோர்பின்னோர்தன்
குலப்படுமற்றோரேனுங்கொல்பவர்நட்பென்னுமால். (அக)

உலம் - திரள்கல், தப - அழிய.

மாற்றலர்ச்செற்றஞான்றேமற்றவர்நகரமுற்றும்
வேற்றுவண்கழுதையேரின்விளைதரவுழவித்துண்ணப்
போற்றலில்வரகுகொண்முற்பொலிதரவிதைப்பித்துப்பிற்
சீற்றமாற்றிடுவார்நட்போசிறந்ததுமிடிக்கோட்பட்டாய். (அஉ)

ஆவுமானியற்பார்ப்பீருமாடமைத்தோளினீரு
மேவுநோய்க்கோட்பட்டோருமிளிர்பிதிர்க்கருமஞ்செய்யப்
பூவினன்மகப்பேறுள்ளும்புந்தியினீருமம்பு
தாவுமுனரணஞ்சேர்மினென்பர்பின்றோன்றவாயார். (அங)

கோதறுகல்விசாலூர்க்குடியிருந்தறியானேனு
மோதருஞ்செல்வமிக்கோனொருவனேசிறந்தோனவன்
காதலின்வேதமுன்னாங்கலைகள்கற்றுணர்ந்தோனேனுந்
தீதமைமிடியனாயிற்சிறந்திடான்வேத்தவைக்கே. (அச)

காமமேவெகுளியேயுட்கலந்திடுமயக்கமேயென்
றாமவையமையப்பட்டோரவற்றொரோவொன்றுதோன்றின்
மாமறைமுழங்கிக்கூறிவருவிதிவிலக்கயர்ப்பர்
தோமறுமமைச்சிடித்துச்சொல்வதுங்கொள்ளாரம்மா. (அரு)

கலைபயினுணட்பென்றுகரைந்தனையந்தநட்பிச்
சிலைவலாற்கிருக்குமாயிற்சென்றபற்பலவாண்டிற்கு
ளுலைவறுமுடங்கநீட்டியொன்றிரண்டனுப்பலாமே
மலைவறுதூதுய்த்துன்னைவருகவென்றழைக்கலாமே. (௮௬)

அந்தநாட்டகுதிக்கேற்பவாக்கினன்போலுநின்னட்
பிந்தநாட்டகுதிவானத்திறைவனுமணுகொணுதம்
முந்தைநாணட்பையெண்ணிமுடுகிநீசெலக்கூடாதா
லெந்தநாளிலும்பூபாலர்யாவர்க்குநண்பரல்லர். (௮௭)

அல்லதுமிகுநட்பேயென்றற்றநோக்காதுசெல்லி
லொல்லையினினக்குண்டாயிற்றுறுமவமானமெய்யே
நல்லதன்மனையின்வாக்குநறுநெய்யுண்டொளிர்வதேயென்
றெல்லடர்சுடரைமுத்தமிடிற்சுடாதமைவதுண்டோ. (௮௮)

பழியிலுன்குலத்தோர்செய்யப்படுந்தொழினன்கியற்றி
யிழிவறவுண்டுடுத்தலின்றிமிக்கெண்ணங்கொண்டு
வழிநடந்திளைத்தாய்மெய்யும்வாடினையந்தோவானிற்
கழிமதிவருகவென்றுட்கசிந்தழுமழவுபோன்றாய். (௮௯)

மாத்திருந்தளகைவேந்தும்வானரசளிக்கும்வேந்தும்
பாத்திருந்தியசீர்கேட்டுப்பரிவுறப்போகந்துய்க்கு
மேத்திருந்தியவில்வல்லான்சேவைக்குவந்திவ்வாயில்
காத்திருக்கின்றமன்னர்க்கண்டிலைபோலுமாலோ. (௯0)

இந்திரதிருவனென்னவீங்குநிற்கின்றவள்ளல்
பந்தியின்மடநலார்பொற்பந்தெறிந்தாடனோக்கி
நந்தியபொழிலிற்றேமாநறுங்கனிபறித்துக்கொண்டு
மந்தியுமாடல்செய்யுமகதநாடாளுமன்னன். (௯௧)

படுங்கடக்கரிபோன்றுங்கோர்பரிக்கருகாநிற்கின்றோ
னெடுங்கலில்வருக்கைநையாவொழுகுறுசெழுந்தேனோடி
யடுங்கருப்பாலைவீழ்த்தியடர்புலியடிப்பசுங்காய்க்
கொடுங்குலைக்கதலிசாய்க்குங்கொங்கணநாட்டுவேந்தன். (௯௨)

ஒளிர்நுதிவடிவாளேந்தியூங்கெழிறரநிற்கின்றோ
னளிசெறிமலர்நீர்வாவியடர்மருப்பெருமைபாயக்
களிதருசெருக்கினோடுகால்விசைத்தெழுந்துவாளை
குளிர்மதிகிழியப்பாயுங்கூர்ச்சரநாட்டுவேந்தன். (௯௩)

மலையெடுத்தணைய திண்டோள்வலயம்வில்லிடநிற்கின்றோன்
குலையெடுத்திருக்கும்வாழைக்கூன்குலைமுறிந்துசாய
நிலையெடுத்துறையுங்கந்திநெடுங்கழுத்திறப்பண்முத்த
மலையெடுத்தெறியும்வாவியங்கநாடாளும்வேந்தன். (௯௪)

மேவருமதனனென்னவெண்குடைநிழனிற்கின்றோன்
றூவருநகர்களெல்லாந்தயங்குபொன்மணைகடோறு
மாவகிர்க்கண்ணாராக்குமண்டுகுய்ப்புகையெண்ணாற்றுக்
காவதங்கமழுஞ்செல்வக்காம்போசநாட்டுமன்னன். (௯௫)

குய் - தாளித்தல்.

வாகைவேல்வலத்தினேந்திமடங்கலேறெனநிற்கின்றோ
னோகையங்களிப்புமீக்கொண்டொளிவளரரங்குதோறும்
பாகைநேர்மொழியாராடப்பைந்தளிர்ச்சோலைதோறுந்
தோகைமாமயில்களாடுந்துளுவநாடாளுமன்னன். (௯௬)

காளையர்சூழமோலிகதிரெறித்திடநிற்கின்றோன்
வாளைபாய்நீத்தம்வந்தவலம்புரிகமுகிலேறி
வேளைவாய்த்திடப்பன்முத்தம்விருப்பொடுகாண்போர்கந்தி
பாளையீன்றதெனவீனும்பல்லவநாட்டுமன்னன். (௯௭)

வயிரவொண்குழைமதாணிவாளெறித்திடநிற்கின்றோன்
பயிருறுகளைகட்டோம்பும்பான்மொழியுழத்திமார்தஞ்
செயிரறுவதனங்கண்டுதிங்களென்றெண்ணியெல்லுங்
கயிரவமலரும்பண்ணைக்கலிங்கநாடாளுமன்னன். (௯௮)

அளவில்பல்சேனைசூழவமரணிகொடுநிற்கின்றோன்
வளவிநறும்பூமல்கும்வாவியிற்றூண்டில்வாய்நின்
றுளம்வலித்தெழுந்தவாளையொய்யெனக்கற்பகத்தின்
கிளர்கழுத்தொடியப்பாயுங்கேகயநாட்டுவேந்தன். (௯௯)

கொழுநிணந்தின்றுசோரிகுடிக்கும்வேலொடுநிற்கின்றோ
னெழுகதிர்ப்பரிவாய்க்கௌவவெழுந்தசெஞ்சாலிச்செய்யிற்
குழுமுபல்கயன்மெய்கிளக்குதித்தென்றும்பாய்தலாலே
செழுமுகிற்பொழிவருதசிங்களநாட்டுமன்னன். (௧00)

பாயசீர்ப்போர்வைபோர்த்துப்படர்கதிரெனநிற்கின்றோன்
மேயபூம்பொய்கைவெண்டாமரையைமென்சேவலன்ன
நேடபோடணைப்பக்கண்டுநெறிபிழைத்தாயென்றாடித்
தூயபேடொதுங்கிமாழ்குஞ்சோனகநாட்டுமன்னன். (௧0௧)

குஞ்சரக்குழாத்தூநாப்பட்கோளரிபோனிற்கின்றோன்
கஞ்சமட்டொழுகப்பூத்தகழனிகாலோடைக்கண்ணின்
றஞ்சிறையுகுத்தகூர்வாய்ப்பெருங்கிழநாரையாரல்
வஞ்சனைத்துயில்கொண்டுண்ணும்வங்கநாடாளுமன்னன். (க0உ)

பொத்தியகவசமெய்யிற்பொலியநிற்கின்றகாளை
கத்திகைக்குழலாராடுங்காமருமஞ்சணீர்பாய்ந்
தெத்திசையினும்வளர்ந்தகதலியின்குருத்தென்மாவை
மத்திகையெனப்புடைக்குமராடநாடாளும்வேந்தன். (க0௩)

கத்திகை - பூமாலை, மத்திகை - சவுக்கு.

அயலெலாஞ்சேனைசூழவணிந்துநிற்கின்றசிங்கங்
கயலெலாம்வெருவுங்கண்ணார்களையரிக்கழுநீரோடிச்
செயலெலாஞ்செயும்படப்பைச்செழுங்கருப்போங்கப்பாய்ந்து
வயலெலாம்விளைக்குஞ்செல்வமச்சநாடாளுமன்னன். (க0௪)

படப்பை - மருதநிலத்தூர், அரி-அரிசி.

கருகிருண்மோலிமேயக்கடாக்களிறெனநிற்கின்றோன்
வருவிறன்மடங்கன்மன்னன்வருடைதேளதிபன்முன்னும்
பெருவிடைதுலாக்கோன்பின்னும்பிரிவின்றிச்செலச்செல்கானுங்
குருமுகின்முழங்கிப்பெய்யுங்குடகநாடாளும்வேந்தன். (க0௫)

வருடை - மேடம், தேள் - விருச்சிகம், விடை - இடபம்.

கையுறைமொடுநிற்கின்றோன்கவின்முழச்சுலராசிக்க
ணையமாமதிநின்றன்னாற்கைந்தேமொழான்பானிலோர்கட்
செய்புகரேனும்வெய்யோன்சேயேனுநிற்குநாள்போற்
பெய்முகிலென்றுமாறாப்பெருமைக்காந்தாரவேந்தன். (க0௬)

புகர் - சுக்கிரன், வெய்யோன் சேய் - சனி.

இத்தனைமன்னர்தம்முள்யாரைநீயொப்பாய்கந்தை
பொத்தியமேனியோயெண்ணிரட்டியாயிரம்பொனன்னூர்
மெத்தியமனத்தராகிமேவுறப்பொலியுங்கண்ண
வித்தகன்சேவைவாய்த்தலெண்மையின்மேவுங்கொல்லோ. (க0௭)

முடங்குகைகாலோர்பேதைமூரிவானணையுங்கோட்டி
னிடம்படுதேத்திறாலுக்கிச்சைவைத்தனைப்போலுந்
தொடங்கியசிராத்தவில்லந்தோறுஞ்சென்றிரத்தனீத்து
விடங்கொள்வாண்மன்னர்காணவிருப்புவைத்தஃதுமாதோ. (க0௮)

தேத்திறால் - தேன்கூடு.

இத்தலைவாய்நிற்கின்றவிவர்க்கெலாமிரும்பொனுண்டு
மெத்தியவேவலாளர்மிகவுமுண்டாதலாலே
யெத்தனைபற்பனுள்காத்திருக்கினுங்குற்றமில்லை
பொத்துநோய்மிடிக்கோட்பட்டநினக்கிதுபொருந்தாதாகும். (கoக)

ஆதலின்வந்தவாற்றையறிந்துநின்னூர்க்குப்போதன்
மேதகுகருமமென்றம்மடமையோர்விளம்பலோடுந்
தீதறுகுணத்தான்மாண்டசெழுந்தவக்குசேலமேலோ
னேதமிக்குறத்தன்னுள்ளத்திவையிவையெண்ணுவானல். (கக0)

மின்செய்தமதாணியாமுத்தாரமாம்விளங்குபட்டாம்
பொன்செய்தவூர்தியாமிப்போதியாம்பெறுவதெங்கே
நன்செயனம்மூதாதைநாளினுங்கேட்டதின்று
லென்செய்வாமெண்ணுதொன்றையியற்றுதலென்றுந்தீதே. (ககக)

மதாணி - பதக்கம், ஊர்தி - வாகநம்.

கந்தையிற்பொதிந்தநந்தங்கையுறைகண்டாராகி
னந்தலிலிகழ்ச்சிபொங்கநகைப்பரேயெனவுட்சாம்பி
யந்தினின்றுயங்குங்காலவ்வடர்மடமையரைநோக்கிச்
சுந்தரவறிவின்மாண்டதுவாரபாலகர்சொல்வாரால். (ககஉ)

கையுறை - காணிக்கை, சாம்புதல் - சோர்தல், அந்தில் - அவ்விடம்.

யாரெனநினைத்தீரிந்நவிருந்தவத்தலைவன்றனைச்
சேருறுபொய்மையில்லன்செறிந்தநோன்புமூந்தநல்லன்
வாருறுமறைகள்வல்லன்மற்றெறங்குஞ்செல்வானல்ல
னேருறுமினியசொல்லனென்னவேயாமுட்கோடும். (ககங)

இருந்தவத்தலைவன் - பெரிய தவச்சிரேட்டன்.

மேற்படி - வேறு.

உலகினின்மானிடப்பிறப்பேயரியதிழிகுலமொருவியுயர்ந்தபின்னோர்
குலமுறுதலரியததனினும்வசியர்குலமரிதுகொற்றவேந்தர்
நிலவுபெருங்குலமரியததனினுமற்றஃதினுமிக்கரியநீரால்
பலர்புகழந்தணர்குலத்துத்தோன்றிடலென்றருமறைகள்பகருமன்றே.

கொற்றம் - வெற்றி.

அந்தணரேயரசர்முதன்மூவருக்குமாசிரியரருளார்தெய்வ
மந்தணரோமறைக்கிழவன்முதலாயதேவரினுமாற்றல்சான்றோ

ரந்தணரோயாவதற்குமழிவதற்குங்காரணமாயமைந்தநீரா [னே.
ரந்தணரோதெய்வமெனக்கென்றுகண்ணனுவக்கவுமியாமயிர்த்தலென்

மறையவருக்குயர்தெய்வத்தலங்களிடத்தமர்மாடம் வகுத்துளோரு, நிறையுமுபநயனமணமகமாதிபுரிதரப்பொன்னேர்ந்துளோருங், குறைவறுபாற் செருத்தலானிலன் முதற்பல்வகைத்தானங் கொடுத்துளோரு, மறையுமறுசுவையுணவுவிலாப்புடைவீங்கிடவுணுமாறளித்துளோரும். (௧௧௬)

தீயபுலிமுதல்விருகத்தாற்கொடுங்கோன்மன்னவராற்றீயானீரான்
மேயகொடுங்கள்வரான்மற்றெவைகளாலுமிடர்விளைந்தபோதி
லாயவிடர்க்கந்தோவென்றுளமிரங்கிவிரைந்துபொருளாதிநல்கி
நேயமுறப்பேருதவிபுரிந்தின்னுங்காப்பமெனநிகழ்த்துவோரும். ()

விருகம் - மிருகம்.

இம்மையிற்பல்பெருஞ்செல்வமிடையறுதுறப்பெருகவீன்றமைந்தர், செம்மையிற்செய்வினைநல்லோர்தமைச்சூழச்செழும்போகஞ்சிறப்பத்துய்த்திட், டம்மையிற்கற்பகநாடுகளிதூங்கத்தேவராயரம்பைமாதர்கொம்மைவரிமுலைப்போகஞ்சேணாட்டுய்த் ததற்பின்முத்திகூடுவாரால்.

இத்தகையமறையவரையெளியனென நினைப்பதெவனிவணிற்கின்ற, வித்தகமா மறைத்தலைவன்றன்னைமுழுஞானியெனவிளம்பல்வேண்டு, மெத்தகைமையாலெனின்மெய்ஞ்ஞானியர்தங்குணங்குறியுமிகத்திலாசைச், சித்தமொருவாதுழல்பொய்ஞ்ஞானியர்தங்குணங்குறியுஞ்செப்பக் கேண்மின். (௧௧௮)

கம்மாலுஞ்செயற்கரியசெயற்றலைநின்றொருவழிநாற்கரணஞ்செல்ல
வம்மாலுமறைப்பொருளினிலக்குறுத்தியயிற்கணாராசைமுன்னா
வெம்மாலுங்கடந்தார்க்குமணியாலும்பொன்னாலுமெந்தவேந்தர்
தம்மாலுமுழ்மாலுமெம்மாலுமாம்பயனென்சாற்றுவீரே. (௧௨௦)

கம் - பிரமன், மால் - பெருமை, மயக்கம்.

வலங்கொள்செழுமுகிலுரறியுருமேறுபலவுதிரவழங்கினாலும்
விலங்கலைவேரோடுபறித்தொன்றினையொன்றடரவளிவீசினாலுங்
கலங்கலையாரெழுகடலுநிலைபெயரவுலகநிலைகலங்கினாலு
நலங்கிளர்தந்நிலைபெயராருண்ணடுங்காரவைகண்டுநகையாநிற்பார். ()

உருமேறு - இடி, விலங்கல் - மலை, வளி - காற்று.

புகழ்ந்துநறுவிரைக்கலவைபூசிடினும்புல்லியனைப்போலநோக்கி,
யிகழ்ந்துபல பேசிடினும்விருப்புவெறுப்பென்பவவர்க்கென்றுமில்லை,
யகழ்ந்தமலக்கிழங்கினராய்ப்பசிவேளைகிடைத்தவற்றையமுதாத்துய்த்
துத்,திகழ்ந்திடுவர்சிறிதேனுநாளைக்குவேண்டுமெனச்சிந்தைசெய்யார்.

அகழ்ந்த மலக்கிழங்கினர் - மலமாகிய கிழங்கை வேரோடு தோண்டி யெடுத்தவர். (ஞானியர்.)

விண்ணிடையேகுதன்மீளப்பாதலத்திற் புகன்மீட்டுப்புவியின்மே
வ, லெண்ணியபல் பரகாயப்பிரவேசஞ்செயலுறையுமவ்விடத்தே,யெண்
ணியவெலாம்வரச்செய் திடன்முதற்செய்சித்திகளை யென்றும்வேண்
டார், புண்ணியபாதகமிலார் பெருமையிலார்சிறுமையிலார்பொய்மெய்
யில்லார். (௧௨௩)

பரகாயப் பிரவேசம் - வேறோர் உடம்பிற் பிரவேசித்தல்.

ஆடுவாருன்மத்தர்போற்றிரிவார்நகைத்திடுவாரங்கைகொட்டிப்
பாடுவாரின்றிருந்தவிடநாளையிருக்கமனம்பற்றார்சுற்றிக்
கூடுவார்தமிற்கூடார்கந்தையன்றிவேறுடுக்கைகொள்ளாரன்னோர்
நீடுவார்புகழ்ப்பெருமையிற்றென்றுமதிப்பவரார்திகழ்த்துவாரார். ()

உடுக்கை - ஆடை.

உற்றதலைமயிர்பறித்துப்பீலிகரத்திடைக்கொடுபாயுடையுடைபுனைந்து
கற்றதவம்போலவமேபெருக்குவதுஞானமன்றுகந்தமைந்தும்
வற்றநெடுஞ்சீவரம்போர்த்தொளிர்வதுவுஞானமன்றுமற்றோர்போல
நற்றவம்வேண்டிலநாமேபிரமமெனநவில்வதுவுஞானமன்று. (௧௨௫)

பீலி-மயிற்றோகை, அவம் - வீண்காரியங்கள், சீவரம் துவராடை.

ஓங்குபெருஞானியர்போற்பேசுவாரவருண்மைவேடம்போலப்
பாங்குபெறவுடற்புனைவார்சற்கருமஞ்செய்வோர்தம்பக்கமேகி
நீங்குகவென்றொழிப்பாரிங்கிலைமேலாம்பிரமத்தினிலையேயென்பா [ர்.
ரீங்கிவர்கடாங்கெடுவதன்றிமற்றோரையுங்கெடுக்குமெண்ணம்பூண்டோ

பொன்முதற்பல்பொருளிடத்துமிச்சையற்றோர்போற்றுறவுபூண்டு
பின்னர்,வன்மைசெறிமனத்தபக்குவர்க்குபதேசமுநவிற்றிவருவதெல்
லா, நன்மைதருமுன்னோரெண் காற்றுழுகட் பள்ளையெனநயந்தோரா
யன், புன்மையுறப்பற்றியஃதுடனழிந்தானென்றகதைபோலுமாலோ.

எண்கு - கரடி, பள்ளை - ஆடு.

மிக்கவறிவுடையாரைப்போன்றுமுடற் பற்றனைத்தும்விடுத்தார் போன்றுந், தக்கவழக்கிடத்தினுயர் திணைவினையஃறிணைவினையாய்ச்ச மையச்சொற்றுந், தொக்கபடர்க் கைப்பெயர்முன்னிலைப்பெயராகிடவு ரைத்துஞ்சுழல்வதெல்லாம், பக்குவமின்மடவோரைமயக்கியவர்கைப் பொருளைப் பறித்தற்கன்றே. (கஉஅ)

சிறப்புறுமில்லறத்தினிலுண்டுடுத்துமனைமக்களொடுஞ் செறிந்தா ரேனும், பெறப்படுமப்பற்றடையார்மெய்ஞ்ஞானநெறியுணர்ந்தபெரிய நீரா, ரறப்பெரியதுறவறஞ்சார்ந்தவர்க்குமிவரதிகமெனவறைபுநூல் கள், விறப்புறுமஞ்ஞானியரெவ்வறத்திலுமெவ்வகைச் சிறப்புமேவிடா ரால். (கஉகூ)

இம்மறையோன் முழுஞானியாயிருந்துஞ்சற்சருமமிழந்தானல்லன், செம்மைபெறுமக் கருமத்தாலிவர்க்கறிவுண்டாம்புதின்னமீதே, மும் மையுலகிடத்துமொரு ஞானியாமி யவனென்றேமுழங்குநூல்க, ளெம் மையினிதாண்டருளவெழுந்தருளினனென்றேயெண்ணங்கோடும்.

மும்மையுலகு - மூன்றுலகம், அவை, சுவர்க்க மத்திய பாதாளம்.

ஆதியினற்கலையுணருநாட்டபுக்கமென்றுரைத்தநயமெய்யே
நீதியநம்மரசனைக்கண்டிடும்விருப்பமிக்கூரநேடிவந்தா
னோதியவிவ்வன்றியிவனரசரிடைப்பெறுங்கருமமொன்றுமின்றாற்
காதியதீவினையுடையேமாதலினால்யாமின்றுகாணப்பெற்றேம். (கநக)

நேடுதல்-தேடுதல், காதிய தீவினையுடையேம்-தீவினையைப்போக்கினோம்.

ஆவாவிம்மறையோனைக்காண்டொறுமுள்ளத்துவகையரும்பாநின்ற
தோவாதுமெய்யினிடைப்புளகமெழுகின்றனகண்ணுருகாநின்ற
நாவாரத்துதிப்பதற்குத்துடிதுடிக்கின்றதுவிரைந்துநாம்போயின்னே
தேவாதிதேவனுக்கித்தவன்வரவைவிண்ணப்பஞ்செய்யவேண்டும். ()

தவன் - தவத்தையுடையவன். (குசேலன்)

## கலிவிருத்தம்.

என்றறியாமையினிகழ்ந்துகூறிய
வன்றிணிமனத்தினர்வாயடங்கிடக்
கன்றலிலுரைபல்கலார்ந்துமாதவக்
குன்றனன்றிருமுகநோக்கிக்கூறுவார். (கநரு)

மறையெலாமுணர்ந்துமெய்வாய்ந்துவெப்பவச்
சிறையெலாங்கடந்தயாச்செல்வவேதிய

தறையெலாப்புகழுநின்வருகைத்தன்மையாற்
குறையெலாந்தவிர்ந்தனங்கூர்ந்தனங்களி. (௧௫௪)

ஆய்ந்தநின்பெருங்கலையருமைப்பாடுஞ்சீர்
வாய்ந்தமாதவம்வளர்மறுதசெல்வமுந்
தோய்ந்தவுட்டூய்மையுந்துகளிறன்மையும்
பாய்ந்தமாலுலகமோபகுத்தறிந்திடும். (௧௫

தூய்மை - பரிசுத்தம், மால் - அஜ்ஞாந மயக்கம்.

சிறியவர்மடமையிற்செறித்தவார்த்தையைக்
குறிபெறநின்றிருவுளத்துக்கொண்டிடே
லறிதருமுளத்திடைக்கொள்ளிலம்பவோ
மறிவரும்பீழைநோய்க்கடற்கண்மாய்வரே. (௧௫௬)

பீழை - துன்பம்.

கங்கையேமுதனதிகளிப்பிணடியும்
பொங்குமாதானங்கள்புரிந்துமிட்டிக
ளிங்குபற்பலசெய்துமெய்தும்பேறெலாந்
துங்கநின்றரிசனமொன்றிற்றோன்றுமே. (௧௫௭)

இட்டிகள் - யாகங்கள்.

காலமூன்றையுமறிகருத்தபோற்றிநற்
சீலமார்தருமறைச்செல்வபோற்றிமெய்
வாலறிவுடையவவரதபோற்றியெம்
பாலருள்சுரந்தருள்பனவபோற்றியே. (௧௫௮)

வாலறிவு - மெய்யுணர்வு, பனவன் - பார்ப்பான்.

சற்றுநீயிவ்விடமிருக்கிற்சார்ந்தியாங்
கொற்றமார்கண்ணற்குன்வரவுகூறுபு
முற்றுவமென்றவன்முன்வணங்குபு
பொற்றவவ்விடனின்றும்போயினரரோ. (௧௫௯)

பொற்ற - பொன்மயமான.

## கலிநிலைத்துறை.

திரண்டமாமணிகுயிற்றுபுசெம்பொன்செயெழுபத்
திரண்டுவாயிலும்விளாவினிற்கடந்தனரிலங்கி
முரண்டவாமுடிமன்னவர்மொய்த்திடுஞ்செல்வ
வரண்டவாத்திருவோலக்கமடைந்தனர்காணார். (௧௬௦)

திருவோலக்கம் - கொலுமண்டபம்.

அந்திடத்தமர்வாரைநம்மரசமர்கின்ற
தெந்திடத்தெனவினவினரிலங்கெழிறருபொற்
பந்தடுத்தகையாரொடும்பயின்மணிச்சிகரத்
திந்தடுத்தபேருவளகத்தெனவவரிறுத்தார். (௧௪௧)

இந்து - சந்திரன், உவளகம் - அந்தப்புரம், இறுத்தல் - விடைகூறுதல்.

கேட்டகாலையின்ஞேரேலெனக்கிளருவளகப்பா
லோட்டமீதெனப்படர்ந்தனரொளிர்துதிவடிவேற்
கூட்டம்யாவையுங்குமைத்துமைதோய்ந்துபொற்குழைபாய்
நாட்டமாதரார்காவல்செய்வாயினண்ணினரால். (௧௪௨)

நெடியநீர்மையித்துவாரபாலகர்செயனிற்க
படியிலாவளம்பரந்தவவ்வுவளகப்பண்ணை
முடியயாவரேயெடுத்துரைப்பவர்நகைமுளைத்துத்
துடிதுடித்துநாவெழுதலிற்சிறிதுசொற்றிடுவாம். (௧௪௩)

பொன்னினுற்செய்துமணிகள்கால்யாத்தவண்புரிசை
மின்னினுற்பொலியப்படுமுகில்விராய்ந்துயில்வ
வுன்னினுற்கடலுலகுசொல்கண்ணனுண்ணிறத்தை
மன்னினுற்பெறலாமெனமதித்தனபோலும். (௧௪௪)

மண்ணகந்தவப்பதித்தநீலமால்வரைசாய்த்
தெண்ணகந்தபக்கொணர்ந்தகல்லடுக்கிமேலெழுப்பிக்
கண்ணகங்கவர்வேதிசெய்திருபுறங்கதிர்ப்பப்
பண்ணகம்பொலிவயிரயாளிப்படியமைத்து. (௧௪௫)

வேதி - திண்ணை.

இலங்குவெண்பொனிட்டிகைகளாற்சுவர்த்தலமெழுப்பி
நலங்கொள்பன்மணிபதித்தபொன்னிலைகளுநாட்டித்
துலங்குமாமரகதப்பலசாளரந்தொகுத்து
வலங்கொள்வச்சிரவிருநிலைக்கதவமும்வயக்கி. (௧௪௬)

இட்டிகை - செங்கல், சாளரம் - சன்னல்.

நிறையுமேதகத்தாற்பலதூணடிநிலைவைத்
துறையுமேற்பலமணிகடைதூணங்களுறுத்தி
யறையுமப்பலதூணெருத்தத்துறவணிந்த
தறைபுகழ்ந்திடுசெந்துகிர்ப்போதியுஞ்சார்த்தி. (௧௪௭)

தூணம் - தூண், துகிர் - பவளம்.

அன்னபோதிமேல்வெண்பொனுத்தரமியைத்தடுப்ப
மன்னராக்கியவிடங்கமுமுறுத்திமேனயப்பப்

பன்னுபொற்றகடடுக்கிவேய்ந்ததற்குமேற்பரிதி
மன்னுமாமணிக்குடமிரீஇயமைத்தனமாடம். (கசஅ)

வெண்பொன் - வெள்ளி, விடங்கம் - கொடுங்கை.

ஓங்குசந்திரகாந்தமாளிகைகளையுரைக்கோ
வீங்குநாசிசோபானவண்மையைவிரித்திடுகோ
தேங்குருளிகைச்சிறப்பினையிற்றெனத்தெரிக்கோ
பாங்கியற்றியசித்திரத்தொகுதியைப்பணிக்கோ. (கசகூ)

நாசி - மேல்வாசற்படி.

மற்றுநாற்றியபன்மணிமாலையைவகுக்கோ
சுற்றுநாற்றியபொன்மலர்ப்பிணையலைச்சொல்கோ
கற்றையங்கதிர்ச்சாமரைத்தூக்கினைக்கரைகோ
விற்றவென்றுரைத்திடவெளியனவலயார்க்கும். (கரு௦)

தங்குமேனிலைமாடமேல்வெள்ளிடைதணப்ப
வெங்கும்வார்கமஞ்சூன்முகிற்குழாம்பொலியியக்கஞ்
சிங்கலற்றவிண்ணவர்கள்கண்ணூறுசேராமைப்
பொங்குநீளிறக்கஞ்சுகஞ்செறித்ததுபோலும். (கருக)

கமம் - நிறைவு, சிங்கல் - அழிதல், கஞ்சுகம் - உறை.

அன்றியுங்குடஞ்சுட்டினம்புரந்தவந்நாளின்
மன்றவேய்ங்குழற்கோவலர்மகிழ்தரக்கொண்ட
வென்றிவார்குடையாகியவிலங்கலங்குவட்டிற்
றுன்றிடுந்தடித்தொடுசெறிந்தமையையுந்துணையும். (கருஉ)

குடஞ்சுட்டு - பசு, தடித்து - மின்னல்.

நீத்திரட்பொறிகாரணமின்றியுஞ்சிதறக்
காத்துமேனிலைவிழித்துநிற்பவர்கைவாளொளியுந்
தூத்துளிப்படுகுயின்குழாமின்றெருமொளியும்
பாத்தறிந்திடத்தேவர்க்கும்யாவர்க்கும்படாவால். (கருங)

குயின் - மேகம்.

சிறந்ததன்குலத்துதித்தவன்செல்வத்தினுறையு
ளுறந்தபன்மணிமாளிகைதனக்குமிக்குரித்தென்
றறந்தவாதெழுமதிவிசும்பாறுசெல்வருத்தந்
துறந்திடும்படிசற்றுறைந்தகனுநாடோறும். (கருச)

திருவிற்கான்றிடுசோமகாந்தச்செழுஞ்சிகர
முருவச்சந்திரனெழுதலுமுகுத்தநீர்பெருகி

மருவிக்காலெனவழியருவியுமவண்வயங்கும்
பருவக்கோவைமுத்தாரமும்பகுத்திடலரிதே. (கருரு)

சோமகாந்தம் - சந்திரகாந்தக்கல்.

மேயமேனிலைமாடங்கள்வெள்ளொளிவிரித்துப்
பாயதாரகைக்கணத்தொடுபயிலுறுகாட்சி
தூயபாற்கடல்சங்கநாடொறுந்தன்பாற்றுறந்த
நேயமுத்தொடுபொங்கிமேலெழுந்தெனநிலவும். (கருசு)

ஐயநுண்ணிடையயிலலைத்தமர்த்திடுமரிக்கண்
மையன்மாதரார்பர்பலர்தனித்தனிமருவச்
செய்யகாற்பரியங்கமெல்லணையொடுசெறித்த
வெய்யவற்றெறுசிகையளவில்லறைவிளங்கும். (கருஎ)

அயில் - வேல், பரியங்கம் - கட்டில்.

வருக்கைவாழைதேமாக்கமுகருப்பலத்தென்னை
முருக்குநாரமுண்பாதிரிமொய்த்தமுந்திரிகை
பருக்குமின்சுவைக்கனியுடைபற்றைப்பாதவங்கள்
பெருக்கியென்றுநல்வளந்தருசோலைகள்பிறங்கும். (கரு.அ)

கண்ணறுவையின்வருந்தொறுங்களிமயிற்கூட்டம்
விண்ணின்மேற்பயின்மேகமிட்டமண்விரவியதென்
றெண்ணிடக்கடையிலாத்தழைக்கோலியின்பகவும்
பெண்ணணங்கனையாரைத்தம்மினமென்றுபெட்கும். (கருகூ)

எனை - எள.

குழைகிழித்தபிறடற்றுறத்துறந்துநேர்ந்துறு
முழைகிழித்தொளிர்நோக்கினுருசலாட்டுமைப்பும்
பிழைகிழித்தபொற்கந்துகவாடலின்பெருக்கு
மழைகிழித்தவச்சோலையின்மறுதென்றும்மயங்கும். (கசூ0)

தடறு - உறை, உழை - மான், கந்துகம் - பந்து.

கோங்குமாதவிபாடலங்குராவழைபுன்னை
தேங்குசண்பகங்குங்குமஞ்சந்தனஞ்செருந்தி
யோங்குகைதைமந்தாரமாலதியொளிர்கற்பு
வீங்குசாதிமுற்பலவுளவிளைத்தவுய்யானம். (கசூக)

உய்யானம் - பூஞ்சோலை.

சாலமெய்பிற்பெண்குறியினனைப்பழிகளைந்தோன்
பாலமர்ந்திடறகாதென நீங்கியபண்பே

போலமன்றலங்கற்பகமாயிடைப்பொலிந்து
கோலமார்ந்தளவிடற்கருவளங்கொழித்துறையும். (௧௬௨)

மெய்யிற்பெண் குறியினன் - இந்திரன்.

அன்றியும்பலநாள்கண்முன்னோனிடத்தமர்ந்தா
மொன்றுபின்னவனிடத்துமவ்வாறுறவுறைவா
மென்றுவந்துகூறுகின்றகைமையும்பொரூஉமிலங்கித்
துன்றுபைந்தருவைந்துமாவயிற்பொலிதோற்றம். (௧௬௩)

ஈர்ந்தெடுத்தவெண்பளிங்கினிலனுறவிருத்திச்
சார்ந்தநாற்புறப்வெண்பொனாற்படித்தலஞ்சமைத்துக்
கூர்ந்தமுத்தவெண்மணலடிப்பரப்பிமேற்குலவ
வார்ந்ததண்புனனிரப்பியதடங்களும்வயங்கும். (௧௬௪)

நீண்டவாட்கருங்கண்ணிளையாரொடுநீதி
பூண்டமாமணிநிறத்தவனாடல்செய்பொய்கை
வேண்டுமேற்புனல்பெருகவுஞ்சுருங்கவும்விளக்குஞ்
சேண்டுலங்கியதூம்புகள்பற்பலசெறியும். (௧௬௫)

செய்யதாமரைபற்பலவாவயிற்செறிந்த
வையசெம்மணிப்படியொளிகதிர்த்தலாலல்லு
மையில்செஞ்சுடர்கண்டெனமருளுமற்றங்கு
நையலின்றியஞ்சம்பலபயிறருநாளும். (௧௬௬)

குலவுபூந்தடநடுவமர்குடிமியமாட
நிலவுவெள்ளொளிவிரித்தலாற்றன்னைநிரம்பச்
சுலவுபாசடைசுற்றநின்றிடுதலாற்சுடர்விட்
டுலவுவெண்பளிக்குருவநீலுடைப்பிரானுறழும். (௧௬௭)

பாசடை - பச்சையிலை, நீலுடைப்பிரான் - நீலவஸ்திரத்தையுடைய பலராமன்.

மருவிடம்புரிவலம்புரிசலஞ்சலம்வயிற்றுக்
கருவுளைந்துசோபானத்திற்கான்றபன்முத்தந்
திருவனாரடிப்படுந்தொறுமுறுத்துமச்செல்ல
லொருவுமாசிறிதத்தலைப்படிந்தபூவுஞற்றும். (௧௬௮)

சோபானம் - படி.

பெருமைசேர்புகழ்க்கண்ணனேண்கயலெனப்பிறழுங்
கருமைதீட்டியகண்ணினார்பலரொடுங்கவின
வொருமையன்பின்வீற்றிருக்குமத்தன்மையைபுணரி
வருமையுற்றவைகுந்தமுமதற்கிணையாமோ. (௧௬௯)

நன்னயத்தபல்வளம்பெறுமுவளகநடையி
லென்னசொற்றனன்சிறிதும்விண்டேனலனினிமேற்
பன்னகத்துயிற்பகவன்வீற்றிருக்குமப்பண்பிற்
றன்னமவிண்டுவிள்ளாதசீர்க்கதைசொலச்சமைந்தேன். (கஎ0)

தன்னம் - அற்பம்.

துன்றுசந்திரகாந்தத்தினமைத்தவொண்சுவர்க்க
ணொன்றுமாறுசெஞ்சந்தனங்கருப்புரம்பொருவா
தென்றுநாறியமான்மதங்குங்குமமின்னு
நின்றபல்விரைவருக்கமுநிறைதரக்கூட்டி. (கஎக)

மான்மதம் - கஸ்தூரி.

விரைதுவன்றியமென்பனிநீரிடைக்குழைத்துப்
புரையகன்றிடப்பூசியொண்காரகில்புகைத்துத்
தரைசெறிந்திடநறுமயிர்ப்படாந்தவிரித்து
வரைவில்பன்மணிக்கப்பல்மேலுறவயக்கி. (கஎஉ)

மயிற்படாம் - மக்மல்.

அமைத்தசிர்மணிமாளிகைநாப்பண்வாளவிரச்
சமைத்தபன்மணியழுத்தியதடப்பரியங்கத்
திமைத்தமூவகைப்பஞ்சியன்மயிரனத்தூவி
குமைத்தியற்றியவைந்தணையடுக்கிமீக்குலவ. (கஎங)

உரகமெல்லுரிபரலெனக்குழையும்வெள்ளொளிப்பட்
டிரவெழுஞ்சுடர்க்கதிர்தவழ்ந்தெனவிரித்தியக்கி
யரவமேகலையாரமைத்திட்டவப்படுக்கை
விரவுபாற்கடற்படுக்கையிற்சிறப்புறமேவி. (கஎச)

பரல் - பருக்காங்கல், அரவம் - ஒலி.

அரும்புசீதளப்பாற்கடற்றுயிலுநாளவிரும்
விரும்புசெந்துகிரோடலைக்கொழுந்தெழீஇவிழல்போற்
கரும்புபோன்மெனக்கரையுமஞ்சொல்லினார்கவரி
யிரும்பொற்கால்பிடித்தெக்கழுத்தம்பெறவிரட்ட. (கஎரு)

அல்லிரிக்குமுத்தோரம்வைத்தலங்குசாந்தாற்றி
மெல்லியற்கவினொருத்தி கைப்பற்றுபுவீச
வல்லியிற்பொலியொருமகண்மாடகந்திரித்து
நல்லியற்படுவீணையினரப்பொலியெழுப்ப. (கஎசு)

மாடகம் - வீணையின் முறுக்காணி.

குலவுகப்புரமில்வங்கமேலமுற்கூட்டி
நிலவுவெண்ணகையொருத்திமென்பாகடைநீட்டக்
கலவமாமயில்வெருவுறுசாயலங்கருங்க
ணிலவிதழ்க்கொடியொருத்திபொற்படியகமேந்த. (௧௭௭)

வண்டுவார்குழலாருளமயக்குநின்னுருவங்
கண்டுபாரெனவொருத்திநேர்கண்ணடிகாட்ட
விண்டுமென்பனிநீருறைத்திடுபிநின்விரையிக்
குண்டுகொண்டிடென்றொருத்திபூஞ்செண்டுகையுதவ. (௧௭௮)

இழையிடைக்கொடியொருத்திபொற்சிரகநீரேந்தத்
தழையொளிச்செழும்பாதுகையொருத்திகைத்தாங்க
வழைமலர்த்தொடைவண்டரற்றிடநறவாக்கு
மழைமுகிற்குழலொருத்திமெல்லிணைப்புகைவயக்க. (௧௭௯)

பிணியவிழ்ந்துமட்டூற்றிவண்டடர்தரப்பிறங்குங்
கணிவளைந்தவொண்கருங்குழல்வெண்ணகைக்கனிவா
யணிசிறந்தரிபடர்ந்தகண்ணணங்கெனுமுருக்கு
மணிவளங்கெழுகவான்மிசைமுடித்தலைவைத்து. (௧௮௦)

பிணி - கட்டு, மட்டு - தேன், கவான் - தொடை.

ஆதரத்தினன்புஞற்றுவார்க்கருண்மலரடிகள்
காதரங்கொளக்கூற்றொடும்பொருங்கொலைக்கருங்கண்
மாதர்சத்தியபாமைதன்கவான்மிசைவைத்துச்
சீதரப்பிரான்படுத்திருந்தனன்களிசிறந்தே. (௧௮௧)

ஆயவேலையிற்றுவாரபாலகரழகமைந்த
வாயில்காவல்செய்மாதரார்வாண்முகநோக்கிப்
போயுரைத்திடுமெம்வரவிறைக்கெனப்புகன்றார்
நேயமாதரும்விரைந்துசென்றதுநிகழ்த்தினரால். (௧௮௨)

மன்னரேறுகேட்டெழுந்திருந்தவர்வருகென்று
னன்னமாதருஞ்செலவிடநடந்தனரடைந்தார்
மின்னுதாரகைக்குழாத்திடைவிளங்கொளிமதிபோற்
றுன்னுமாதருட்டோன்றிடுந்தோன்றலைக்கண்டார். (௧௮௩)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சிந்தையுண்மகிழ்ச்சிபொங்கச்சிரமிசைக்கரங்கள்கூப்பிச்
சந்தமார்நிலத்தில்வீழ்ந்துதாழ்ந்தெழீஇக்குடந்தம்பட்டு

முந்துதானையுமொடுக்கிமுன்னர்நிற்பாரைநோக்கி
வந்தகாரியமென்னென்றான்வகுத்துரையாடலுற்றார். (௧௮௪)

குடந்தம்பட்டு - நால்விரல்முடக்கி பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைத்து நிற்றல்.

மாமறைத்தலைவபோற்றிமதிக்குலவிளக்கேபோற்றி
காமரிந்திரன்முன்னோர்காண்பதற்கரியாய்போற்றி
தாமரைக்கண்ணபோற்றிதரியலரேறேபோற்றி
தோமறுசெல்வம்வாய்ந்ததுவாரகைக்கிறைவபோற்றி. (௧௮௫)

ஆதிநாளையநின்னோடருங்கலைகற்றுளானும்
போதவுஞ்சிறந்தநட்புப்பூண்டுகொண்டவனுங்கந்தை
மேதகக்கொண்டநீரான்மெய்ம்மறையவர்குலத்தான்
கோதறுகுணத்தின்மிக்கான்குசேலனென்றியம்பினான்பேர். (௧௮௬)

வற்றியென்பெழுந்தயாக்கைமாதவனின்மேல்வைத்த
பற்றினையெம்மனோரோபகுத்தறிந்தளக்கவல்லா
ரிற்றைநாள்வந்துவாயிலிருக்கின்றானெதிர்ந்தபோரில்
வெற்றிகொள்கழற்கால்வேந்தேவிண்ணப்பமிதுவேயென்றார். (௧௮௭)

என்றலுமுவகைவிப்பவெழின்முகமலர்ச்சிகாட்டப்
பொன்றலில்கருணைபொங்கிப்பொழிதரவிரைவினிற்சென்
றின்றுநம்வாயில்வந்தவிருந்தவத்தலைவன்றன்னை
மன்றவிங்கழைப்பீரென்றுவாய்மலர்ந்தருளினானே. (௧௮௮)

கேட்டனர்துவாரபாலர்கிளர்ந்தெழுகளிப்புத்துள்ள
வாட்டமின்மனத்தராகிவாயில்கள்பலவுநீத்து
நாட்டுதங்காவல்வாயினண்ணினராங்கிருக்குங்
கோட்டமின்மனத்துச்செய்யகுசேலமாமுனியைச்சார்ந்தார். (௧௮௯)

ஆதரம்பெருகநெற்றியணிநிலந்தோயத்தாழ்ந்து
மாதவரேறேபோற்றிமறைக்குலச்சுடரேபோற்றி
காதரம்பெருக்குஞ்சன்மக்கடல்கடந்தவனேபோற்றி
நாதனுக்கினிமைமிக்கநண்புடையவனேபோற்றி. (௧௯௦)

என்றுபஃறுதிமுழக்கியாங்கள்பல்வாயினீந்தித்
துன்றியகதுப்பின்மாதர்சொற்படியுவளகப்போ
யொன்றுபல்பிடிகள்சூழவுறுங்கடக்களிறுபோன்று
மின்றிகழ்மடவார்சூழவீற்றிருந்தானைக்கண்டு. (௧௯௧)

நின்னுடை வரவுரைத்தே திருப னுக்கப்போழ் துற்ற
பன்னருங்களிப்பையாமோ பகர்ந் திடவல்லமைய
முன்னமங்கிருந்த வின்ப முழுவது மறந்து நின்றா
னன்னர்நெஞ்சுடையநீரார் நட்பினிற்சிறந்த துண்டோ. (௧௬௨)

தாயது வருகை கேட்ட தனியிளங்குழவி போன்று
நேயமிக்குடையனாகி நெஞ்சினுளுவகை பூப்பப்
போயழைத்திடுமினின்னே போயழைத்திடுமினின்னே
போயழைத்திடுமினின்னே யென விரைபொருளிற் சொற்றான். (௧௬௩)

இலக்கணமின்மை நோக்கி யிகற்கு மேற்சொற்றானல்லன்
மலக்குறும்பறுத் துயர்ந்த மாதவத் தல்லவரேறே
பலப்பல சொல்லி யென்னை பாணித்தல் கருமமன்று
நலக்க நீவிரைவினெய்தா விடினவனண் ணுமிங்ஙன். (௧௬௪)

ஆதலினெம்பிரானுக் ககத்து மிக்குவகையுய்ப்ப
வேதமின் முனிவரேறே யெழுந்தருளுக வென்றங்கைப்
போதகங்கூட்பினார்கள் பொருக்கென வெழுந்து செம்மை
வேதமுற்றுணர்ந்த வையன் விரைதர நடக்கலுற்றான். (௧௬௫)

அன்னது கண்டு முன்னரறிவிலாதுரைத்த நீரா
ரென்னகாரியஞ் செய்தேமிப் பெரியனை யெளியனென்று
சொன்ன தீங்குரைகளெல்லாஞ் சுடுகின்ற நம்முளத்தை
மன்னவனறிவானாகில் வாராத தீங்குமுண்டோ. (௧௬௬)

அருண்மிகப்படைத்த சிந்தையந்தணனுதலாலே
தெருண்மிகப்படைத்த மன்னன் செவியறிவுறுப்பானல்லன்
பொருண்மிகப்படைத்த வேந்தர் போற்றிடுஞ் சிறப்புற்றானென்
றிருண்மிகப்படைத்த நெஞ்சரின்னவாறியம்பி நிற்க. (௧௬௭)

மன்னனைக்காணுமன்பும் வாயில்காவலருமுன்னே
நன்னயத்துடனடப்ப நடப்பவனாங்காங்குள்ள
பன்னரும் வளங்களெல்லாம் பார்த்தனனிறும்பூதுற்றான்
பொன்னகர்சிறந்த தென்பார் புல்லியரெனவுட்கொண்டான். (௧௬௮)

இறும்பூது - ஆச்சரியம்.

பன்மணிவாயிலெல்லாம் பின்னிடும்படி கடந்து
நன்மணிபோலிவேந்தர் நயந்த பேரவையுநீந்தி
யன்மணிவிளர்க்கும் வண்ணனணங்களொடிருக்கும்
பொன்மணிவாயிலந்தப்புரத்தினுக்கணியனானான். (௧௬௯)

மௌலி - முடி.

ஓவியத்தொழில்வல்லாருக்கொண்பொருள்வெறுப்பவீசி
நாவியற்கருமென்கூந்தனங்கைமாரெழுதிவைத்த
பூவியற்படமாங்காங்குப்பொலிவதுகாணுந்தோறுங்
கோவியற்கண்ணனென்றுட்கொண்டுபின்றெளிவனம்மா. (உ00)

ஓவியத்தொழில் - சித்திரத்தொழில்.

ஈங்கிவனிவ்வாறெய்தவின்னம்வந்திலனென்றையன்
பூங்கதிர்வரவுபார்க்கும்பொற்றபுண்டரீகம்போலுந்
தீங்கதிர்வரவுபார்க்குஞ்செவ்வரக்காம்பல்போலு
மோங்குமைவரவுபார்க்குமொண்டழைமஞ்ஞைபோலும். (உ0௧)

புண்டரீகம் - தாமரை, தீங்கதிர் - சந்திரன், அரக்காம்பல்-செவ்வல்லி.

பொருந்துதாய்வரவுபார்க்கும்புனிற்றிளங்கன்றுபோலுந்
திருந்துதன்வரவுபார்க்குஞ்செம்மனத்தொருவன்போலு
மருந்துநீர்வரவுபார்க்குமறனசையுடையான்போலுங்
கருந்துழாய்க்கண்ணியண்ணல்கமழ்நறுஞ்சேக்கைமீதே. (உ0உ)

அறல் - நீர், நசை - விருப்பம்.

வளர்மறையுணர்ச்சிமிக்கான்வரவுபார்த்திருப்பவந்த
வளவிடற்கரியபேலோனுடைமைத்தோளினல்லார்
கிளர்தரநின்றுகாக்குங்கேடில்வாயிலுங்கடந்து
தளர்வில்பன்மாதர்சூழுந்தனியிடத்தணுகுங்காலே. (உ0௩)

அமை - மூங்கில்.

வருந்துமோர்மிடியன்சேமவைப்பெதிர்கண்டாற்போலு
மருந்துணவிழந்தோன்விண்ணோரமுதெதிர்கண்டாற்போலும்
பரிந்துவெப்புழலுவோன்கற்பகமெதிர்கண்டாற்போலுஞ்
சரிந்தபற்றினன்மெய்யாசான்றனையெதிர்கண்டாற்போலும். (உ0௪)

சேமவைப்பு - புதையல், சரிந்த பற்றினன் - பற்றற்றவன்.

எண்ணனைக்கிலங்குமார்பமீத்தருள்பிரானைநீல
வண்ணனைத்திகிரிசங்கம்வலமிடமுறக்கொண்டானை
மண்ணனைத்தும்புரக்கும்வாசுதேவனைமணக்குங்
கண்ணனைத்துளவத்தாமக்கண்ணனைக்கண்ணிற்கண்டான். (உ0௫)

எண்ணனைக்கு-யாவராலும்மதித்தற்குரிய லோகமாதாவாகிய திருமகளுக்கு.

காண்டலுமுவகைபூத்துக்கால்விசைகொடுநடந்தா
ஞண்டகையவனுங்கண்ணுற்றணையுடைத்தெழுநீத்தம்போ
னீண்டபூம்பள்ளிநீத்துநிலவுபேரன்புபொங்கப்
பூண்டமாதவன்முன்சென்றுபொன்னடிவணங்கினானல். (உ0௬)

நீத்தம் - வெள்ளம்.

திலகமண்டோயவையன்றிருவடிவணங்கிப்பின்னர்
நிலவுமெய்ப்புளகம்போர்த்துநிரம்புறத்தழுவிக்கொண்டான்
குலமறைத்தலைவனென்றுங்கூர்ந்தமெய்நட்பனென்று
மலர்தலையுலகங்கூறும்வாய்மைமகாத்தருளினனே. (௨௦௭)

பாக்கியமுற்றதிந்நாள்பாக்கியமுற்றதிந்நா
ளாக்கியவறப்பலித்தவாக்கியவறமபலித்த
யோக்கியமடைந்ததிந்தமனையுமென்றுரைத்துரைத்துத்
தேக்கியபுகழினன்கொண்டாடினன்சிலைவலோயே. (௨௦௮)

தேக்கிய - எங்குஞ்நிறைந்த.

சிலைவலோயே - தனுர்வித்தையில் வல்லவனாகிய பரிட்சித்து மகாராசனே.

அங்கொருமாடத்துள்ளாலரதநபீடத்தும்பர்
மங்கலமறைவலாளன்மகிழ்நதெழுந்தருளப்பண்ணிப்
பொங்குபொற்குடம்பூரித்தபுதியமஞ்சனநீராட்டித்
திங்களங்கதிரேயென்னத்திகழ்ந்தவொற்றுடைசாத்தி. (௨௦௯)

கதிரெனக்கதிர்க்குஞ்செம்பொற்கலின்செய்பட்டாடைசாத்திப்
பிதிர்கருப்பூரநானம்பெய்விரைச்சாந்தஞ்சாத்தி
முதிரொளிவிரிக்குந்தண்ணென்முத்தவக்கதையுஞ்சாத்தி
யதிர்தரவண்டுந்தேனுமலங்குபூந்தொடையல்சாத்தி. (௨௧௦)

அக்கதை - அக்ஷதை.

விரைதருதூமங்காட்டிமேவுநெய்விளக்கங்கோட்டி
யுரைபெறுபளிதநீராசனக்கலமொளிரச்சுற்றித்
திரைசெய்நல்லமுதமன்னதீஞ்சுவையுணவுநல்கிக்
கரையறுதவத்தோன்வாயுங்கையுமொள்ளறலிற்பூசி. (௨௧௧)

அறல் - நீர், பளிதம் - கற்பூரம்.

பாகடைசிறப்பநல்கிப்பயன்பெறுமுகமன்கூறிப்
போகுயர்மாடத்திட்டபொற்றதன்படுக்கையேற்றி
மோகமிக்கருகிருந்துமுதுகுதைவந்துபின்னுங்
கோகனகப்பூங்கையாற்குளிர்செய்பொற்கவரிவீசி. (௨௧௨)

பாகடை - பாக்குவெற்றிலை, தைவந்து - தடவி.

வழிநடந்திளைத்தவேயிம்மலரடியிரண்டுமென்று
கழிமகிழ்சிறப்பமெல்லவருடினன்கமலக்கண்ணன்
பழியில்பல்லுபசாரங்கள்பண்ணவுந்தெரியானாகி
யொழிவறுதவக்குசேலனென்றும்பேசாதிருந்தான். (௨௧௩)

பித்தருன்மத்தர்பாலர்பிசாசர்தங்குணத்தராவர்
நத்தவஞானயோகரெனமறைநவிலுமாற்றாற்
சித்தம்விட்டகலாதையன்றிருவுருத்தியானஞ்செய்து
புத்தமுதூறுமின்பிற்புணர்ந்தசைவற்றிருந்தான். (உகச)

நத்தவம் - நல்லதவம்.

வழுவில்லைங்குளவியோசையன்றிமற்றொன்றுந்தோராப்
புழுவெனவிருக்குந்தன்மைபூண்டமற்றிவனேபொங்கும்
பழுதில்கற்புடையாடன்சொற்படிவறுஞ்செல்வம்வேண்டுங்
கொழுநிணங்குதட்டியாற்றார்க்குழைத்தெழும்வடிவேல்வேந்தே.

உருவினைக்கண்டுங்கண்டத்தொளிர்வனமணங்கவர்ந்து
மருவமைசான்முகமன்கேட்டுமமைந்தமெய்ப்பரிசமுற்றும்
வெருவினற்றிருநாமங்கள்விருப்பினுட்டுதித்துமைந்தும்
பொருவிலானந்தமெய்தப்பொலிகடத்தீபம்போன்றான். (உகசா)

வனம் - துளசி, கடத்தீபம் - குடத்திலிட்டவிளக்கு.

நீருறுமுப்புப்போலுநெருப்புறுபளிதம்போலு
மேருறுவடிவத்தண்ணலிடத்துத்தன்மனங்கலப்பப்
பேருறுபவஞ்சவாழ்க்கைப்பிணிப்பொழிந்தகலக்கஞ்சத்
தாருறுமார்பத்தையன்றன்னையுமறந்திருந்தான். (உகஎ)

பவஞ்சம் - பிரபஞ்சம்.

இன்னணமிவனிருப்பவிவன்வரவனைத்துஞ்சொல்லா
முன்னரேயுணர்ந்துகொண்டமுழுமுதற்கண்ணனென்பான்
மன்னியவுவகைபூத்துவழிதருமனத்தனாகி
யன்னவன்வதநநோக்கியமையவின்னனசொல்வான்.  (உகஅ)

கோச்சகக்கலிப்பா.

மன்னுடையமறையனைத்தும்வகுத்துணர்ந்தமாதவனே
யுன்னுடையதரிசனத்தாலுடம்புபூரித்தனன்யான்
மின்னுடையவிளங்கொளிவேல்வேந்தருநந்தேவருநூ
மென்னுடையபெறலரும்பேறியார்பெற்றார்யார்பெறுவார். (உககூ)

பூன்றதையையென்னிடத்தெப்போதுநீவைத்தருள்க
வான்றவெனதுளத்தினைவிட்டகன்றிலையிந்நாள்காறுஞ்
சான்றகுணத்தாயின்னுஞ்சந்ததமுநினைந்திருப்பேன்
றோன்றவனேகம்பெறினுந்தொன்னட்பிற்சிறந்தனவோ. (உஉ௦)

பூன்ற - பூர்ணமான, சந்ததமும் - சதாகாலமும்.

ஆபின்மறைமுதற்கலைகளனைத்துமுணர்ந்தறமறப்பாத்
தேயினிதுநன்றிதுதீதென்றுணர்ததுமவர்நட்பை
வீயினுந்தான்மறப்பர்களோமேதையோர்மறப்பரே
னாயினுங்கீழ்ப்பட்டவர்களவர்காணிந்நானிலத்தே. (உஉக)

அறமறம்-புண்ணியபாவங்கள், பாத்து-பகுத்து, வீயினும்-இறந்தாலும்.

நல்லார்சொல்விரும்புவதுநல்லாரைக்காண்பதுவு
நல்லார்க்கொன்றுதவுவதுநல்லாரைப்புகழ்வதுவு
நல்லார்நன்றென்றுரைப்பநவிற்றியவிவ்வெலாமடங்க
நல்லார்நட்பென்றுமுற✕ன்றன்றேநான்மறையோய். (உஉஉ)

பொன்னுள்ளான்பூமியுள்ளான்புந்தியுள்ளானாயினு
மென்னுள்ளானவனவனிருந்தவர்நட்பில்லானேற்
பொன்னில்லான்பூமியில்லான்புந்தியில்லானாயினு
மென்னில்லானவனவனிருந்தவர்நட்புள்ளானேல். (உஉங)

பேயோடுபழகுறினுட்பிரிவதரிதரிதென்று
தூயோர்கண்மொழிவராற்றாயோரும்புகழ்தூயோ
ராயோர்கள்பெறுநட்பையருந்தவத்தாற்பெறலன்றி
யேயோவெண்மையிற்கிடைப்பினிகழ்வரோவிகழ்வில்லார். (உஉச)

எண்மையில் - எளிதில்.

சமயம்வரினிடித்துரைப்பார்தக்கவழிச்செலச்செய்வா
ரிமையவர்தமுலகுறவுமிருளுலகம்பகையுமா
யமையவறிவுறுத்துவாரந்தோநூல்கற்றுணர்ந்த
க்ஷமையுடையார்நட்பவர்க்குக்காண்கிடைக்குமரிதரிது. (உஉரு)

இடித்துரைத்தல் - வற்புறுத்திச் சொல்லுதல், க்ஷமை - பொறுமை.

கூடுதற்குக்கூடாதகூட்டத்துப்படுநட்பு
வீடுதற்குத்தக்கதாய்நாடோறுமெலிந்தொழியு
நீடுதற்குத்தக்கதுநன்னெறிநின்றோர்நட்பொன்றே
தேடுதற்குக்கிடையாததிரவியமுமஃதாமால். (உஉசு)

வீடுதல் - அழிதல்.

முத்திக்குவித்தாகுமுழுதுணர்ந்தோர்பெருநட்பே
தித்திக்குநாடோறுந்தேவர்பெறற்கருந்திருவுஞ்
சித்திக்குப்படியருளுஞ்செப்பரிதாலதுநிற்க
வெத்திக்கும்புகழுநினைக்கியன்மணநன்காயிற்றே. (உஉஎ)

நின்னுடையமனைக்கிழத்திநிரம்புபெருநீர்மையளே
டன்னுடையசொற்காத்துச்சோர்விலாமாண்பினளே

தன்னுடையவுயிராகின்றனைப்பேணுந்தன்மையளே
யுன்னுடையவருவாய்க்குத்தக்கசெலவுஞ்செய்குவளே. (உஉஅ)

சொன்னகாரியமனைத்துஞ்சொன்னபடியியற்றுவளே
யென்னமிடிவரினும்வெளியெடுத்தியம்பாவியல்பினளே
தன்னமுநாயகன்பழிதூற்றாதமையத்தக்கவளே
பன்னருபாமறையுணர்ந்தபளகறுநற்குணக்குன்றே. (உஉகூ)

பளகு - குற்றம்.

பைங்குதலைவாய்மைந்தர்பலர்பிறக்கவேண்டுமே
யெங்குமரும்புகழுடையாயெத்தனைமைந்தர்கள்பிறந்தா
ரங்கவரைப்பேரவையோரணிதரச்செய்செயலனைத்துஞ்
சிங்கலறப்புரிந்தனையோசெய்தனையேலவுபநயனம். (உ௩0)

சிங்கலற - குறைவற.

இவர்தந்தையென்னேற்றானென்றறிஞருநாக்ருமவகை
யிவர்கின்றமனத்தினராயிருங்கலைகற்றுணர்வரோ.
யுவர்கொண்டகடலுடைபுடையுடுத்தவுலகமெலா
மூவர்கொண்டகுணமேவக்குண்டெனமொழியவுயர்வரே. (உ௩க)

நிறைகின்றசிறுமைந்தர்நினைத்தவையெலாங்கொடுத்துக்
குறைவின்றிநடத்திவருகின்றனையேகொடும்பகலி
லுறைகின்றபசிவருத்தத்துழுநர்மாலெனச்சுருதி
யறைகின்றதாலவருக்கன்னமிடுகின்றனையே. (உ௩உ)

நானமுதற்சந்திசெபநன்குநடக்கின்றனவே
யானவினைசெயமெய்திடமாகியிருக்கின்றதே
மானமுறுமறைப்பொருளில்வைத்தியானஞ்சிதறு
தீனமறநிற்கின்றதேயெவருஞ்சொலற்கரியாய். (உ௩௩)

நானம் - ஸ்நானம்.

சீரார்நின்னூர்நின்றுசேரவிவண்வருவாரா
னீரார்நின்றன்மையெலாநென்னலவராக்குந்தவறு
தாராய்ந்துகொண்டிருந்தேனகன்றபலநாள்களின்பி
னேராரின்பஞ்சிறப்பவிருவேமுங்கூடினேம். (உ௩௪)

நென்னல் - நேற்று.

நள்ளார்களண்மைக்கணிருந்தாலுநட்புறுத்தார்
விள்ளார்கள்சேய்மைக்கணிருந்தாலும்விருப்பொழியார்
தள்ளாதபல்பொருள்கடனைச்சூழவிருந்தாலு
முள்ளாதவன்கதிரையுறநோக்குநெரிஞ்சியே. (உ௩௫)

அண்மை - சமீபம், சேய்மை - தூரம், நெரிஞ்சி - தாமரை.

மடமையாருறுநட்பேமருவுபெருஞ்சுகங்காணுந்
திடமுறவெவ்வாறென்னிற்செப்பக்கேள்செழுமறையோ
யுடனுறைதலொருவுமிடத்தொருதுன்புமுறலின்று
படர்தலுமின்றொருவேளைபகர்தலுமின்றுகுமால். (௨௩௬)

ஐயரீர்குடியிருக்குமணிநாட்டிலதிகமழை
பெய்யுமழையின்மைகிளிவிட்டின்முதற்பலகேடு
வெய்யகொடுங்கள்வர்வனவிருகமுதற்பலகேடு
நையவினிதுயிரெலாநன்குதழைக்கின்றனவே. (௨௩௭)

இருவேமுமுன்னுளிலங்குசாந்தீபமுனி
வருகாமரடிவணங்கிமாமறைகற்றுணர்ந்திடுநாட்
பெருகார்வத்தொடும்பேசிக்கொண்டிருந்தபேச்செல்லாந்
திருகாராவுளத்துநினைத்திருக்கின்றாயோசிறப்ப. (௨௩௮)

காமர் - அழகு, ஆர்வம் - அன்பு.

கொள்ளைமறையுணர்ச்சிமிகுகுருராயன்பத்தினியாந்
தள்ளைநமைப்பார்த்தமுதுசமைப்பதற்கிந்தனமின்றின்
றெள்ளருநன்மைந்தர்காள்கொடுவாருமெனவேவ
விள்ளருமோர்பெருங்காட்டுள்விறகொடித்துத்திரிந்தனமே. (௨௩௯)

தள்ளை - தாய், இந்தனம் - விறகு.

## கலிவிருத்தம்.

ஆயகாலைவிண்ணுறெழுவெண்முகி
லேயநெய்தனிறைவளநோக்குவான்
பாயவன்னம்பறந்தனபோன்மெனத்
தோயமாக்கடற்றுன்னுபுசென்றவே. (௨௪0)

தோயம் - நீர்.

நீனிறக்கடல்வற்றிடநீரம்வா
யானிரப்பவியப்பருகுற்றெழீஇ
வானிடைப்படர்மஞ்ஞைக்குழாமென
மேனிமைத்துவிரைவினின்மீண்டவே. (௨௪௧)

நீரம் - நீர், நிரப்பு - தாகம், மஞ்ஞை - மயில்.

பெட்டுநீர்மழைபெய்துவளர்த்திடு
மட்டுநீங்குபைங்கூழ்மரமாதிகள்
பட்டுநீங்கவெப்பம்புரிகோடையை
வெட்டும்வாளெனமின்னல்விதிர்த்தவே. (௨௪௨)

பெட்டு - விரும்பி, பைங்கூழ் - பயிர்.

ஏமருணற்கிடமாயவிருங்கட
லமர்தல்கொண்டறலைச்சுவற்றுந்தழற்
சமர்தணிப்பமின்னேயெனச்சாற்றல்போற்
றமரம்விண்ணுஞ்சலிப்பவெழுந்தவே. (உ௪௩)

மேதினிப்பகைமேலம்புதூற்றிடச்
சாதிநன்மலர்க்கற்பதருவினை
காதிவாங்கியகார்முகமென்றுல
கோதிநிற்கவொருவில்விண்டோன்றிற்றே. (உ௪௪)

கார்முகம் - வில்.

நம்மையூறிறைவற்பகைநாகங்க
டம்மையாமென்றுஞ்சாரறகாதிவண்
வெம்மைதீரிடமென்றுவிராயபோற்
கம்மைமேகமக்காட்டைவளைந்தவே. (உ௪௫)

விரைவுமின்னினொளிக்கும்வெருவிடி
யுரவொலிக்குமுளம்பதைத்தஞ்சுபு
பரவுதம்மிறைபாற்சரண்சார்தல்போ
லரவம்யாவுமளைபுக்கொளித்தவே. (உ௪௬)

அளை - புற்று.

இடிமுழக்கமுழவமியைதர
நெடியகானவரங்கதிலுற
வடிவமஞ்ஞையெனுமடமாதரார்
அடிபெயர்த்திடுமாடல்பயின்றதே. (உ௪௭)

பெட்டுநூல்பெருகப்பயிலாதவ
ரொட்டுசெய்யுணினைத்துநினைத்துளங்
கட்டுறத்திக்கைவதுபோன்மென
விட்டுவிட்டுறைமென்மெலவீழ்ந்தவே. (உ௪௮)

உறை - நீர்.

ஆன்றகல்வியறிவினிரப்பிய
சான்றதன்மையர்சற்றுந்தடையின்றித்
தோன்றயாப்படங்கத்தொகச்சொற்றல்போற்
கான்றவேபெருந்தாரைக்கணமழை (உ௪௯)

கான்ற - சொரிந்தன.

பாயமாவும்பரவையுமஞ்சுற
மேயகானும்பனிப்புறவெண்மைய

தாயநீறுடலார்தரவீங்கிய
காய்நிகர்ப்பக்கனோபலம்வீழ்ந்தவே. (௨௫௦)

பனிப்பு - நடுக்கம், கனோபலம் - ஆலாங்கட்டி.

மன்றலங்குருந்தத்தடிவைகியுங்
கொன்றைமூலங்குறுகியுமற்றுள
துன்றுசிற்றிலைப்பாதவத்தூர்தொறுஞ்
சென்றுந்தெய்யதிகைத்துநின்றேமன்றே (௨௫௧)

பாதவம் - மரம்.

கொய்மலர்த்தருத்தோறுங்குறுகியு
பொய்சிலைகத்தலைமுன்னணைந்தானனங்
கைநனைந்திருகானனைந்தம்மவோ
மெய்நனைந்துவிறகுநனைந்ததே (௨௫௨)

மேலுமேலும்விடாமழையாகலாற்
சாலுநீர்புறந்தாளளவாய்க்கணைக்
காலுமாய்முழங்காலளவாய்ப்பினு
மாலுநீத்தமரையளவாயிற்றே. (௨௫௩)

வானிலாவுநதிமுடியண்ணல்போற்
றேனிலாவுகடுக்கைதிகழ்தர
மானிலாவுறவேந்திவயங்கொடு
கானியாறுகலித்துநடந்ததே. (௨௫௪)

ஊற்றுமாரியொழிதலின்றென்னினி
யாற்றலென்றிருவேழுமுள்ளாய்தர
லேற்றகாலையெழுந்தோர்கொடுங்குளிர்க்
காற்றுவந்துகடுகிச்சுழன்றதே. (௨௫௫)

போதுகாற்றின்முளிசினைமாமரத்
தோதுசாகையுலோலித்தொலித்திடன்
மீதுகையமைத்தவ்வனம்விண்மழை
போதுநில்லெனல்போலவிருந்ததே. (௨௫௬)

அன்னகாலையிடியொலியார்முகி
னென்னல்காறுநிரம்பியவெப்பெலா
மின்னநீரவிரிந்தனவோவென
மன்னக்கேட்பதுமானவிருந்ததே. (௨௫௭)

காலுமின்னுவிளக்கமிக்காட்டினுக்
கேலுமாமழையின்னமும்வேண்டுங்கொல்
சாலுமீதிற்றழைந்ததொலென்றுமை
யாலுந்தீபங்கொண்டாய்வதையொத்ததே. (௨௫௭)

மை - மேகம்.

உள்ளயாவுமுதவிப்புகழ்ப்படாங்
கொள்ளுநற்கொடையாரிற்குயின்குழா
மள்ளனீர்முழுதும்மளித்தாம்புகழ்
விள்ளலின்றிக்கொண்டென்னவிளர்த்தவே. (௨௫௯)

குயின் - மேகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாற்றுவிதமில்பறவையெல்லாம்வாய்தாழ்க்கொண்டுமரந்தோறும்
போற்றுகுடம்பைப்புக்கொளிப்பப்பொருமாவனைத்துப்போந்தொளிப்
காற்றுகுளிருக்காற்றன்போற்கரங்கள்யாவுந்தொகமுடக்கிப் [பக்
பாற்றியிருளைப்பகல்செய்யும்பரிதிமேல்பான்மறைந்தனனே. (௨௬0)

மா - மிருகம், பாற்றி - ஒட்டி.

ஒருவாவன்பிற்றணந்தார்களுற்றுநோக்கிவெய்துயிர்த்து
வெருவாநின்றுகண்பனிப்பவிளங்குநெடியோன்றிருமார்பிற்
பொருவாவிரைக்குங்குமங்குழைத்துப்பூசினைத்தாற்போற்றோன்றுங்
கருவாவெழுந்தசெவ்வானங்கடல்சூழுலகுவளைந்ததே. (௨௬௧)

தணந்தார்கள் - பிரிந்தவர்கள்.

நிலைசேர்வானமகள்கூந்தனீளவிரித்துவிட்டாற்போற்
கலையாருணர்ச்சியொடுகேள்விகழித்துநிற்பாருள்ளம்போ
லுலையாதுலகிற்பரக்குமாறாற்றுகருமைக்குழம்பேபோற்
கொலைசூழுநர்தந்தீவினைபோற்குருட்டுக்கங்குல்செறிந்ததே. (௨௬௨)

ஒருவர்கரமற்றொருவர்பிடித்துறுமேடவலென்றுணராமன்
மருவுங்குளிர்காற்றனடுங்கிமயங்கிக்காலால்வழிதடவி
யிருள்போமளவுமிவணுறைவோமென்றோரிடமுற்றிருந்தனமே
குருமாமுல்லைநமைக்கண்டுகொண்டநகைபோன்மலர்ந்தவே. (௨௬௩)

அவல் - பள்ளம்.

மாட்டும்விறகுதேடப்போய்மயங்கியிருந்தநமக்கிரங்கிக்
காட்டுமரங்களல்லாதுகண்ணீருகுப்பாராங்கில்லை
வாட்டுமீரப்பதமன்றிவயிற்றிற்செறிக்கும்பதமில்லைப்
பாட்டுமுழக்குழுமனன்றிப்பார்ப்பார்களுமற்றில்லையே. (௨௬௪)

கண்ணீர் - தேனுகிய நீர், பதம் - அன்னம், வழி.

இந்தவாறுதவமயங்கியிருக்குங்காலைநங்குலத்து
வந்தமைந்தனட்போடும்வருந்தவருத்துமிவ்விருள்போய்ச்
சிந்தச்சிதைப்பலெனச்சினந்துசெழுவான்முகட்டிலெழுவான்போற்
சந்தக்கதிர்களுறப்பரப்பித்தண்ணங்கதிரோனுதித்தனனே. (உகூசு)

தவ - மிகுதியாக, தண்ணங்கதிரோன் - சந்திரன்.

வானிலெழுந்தசெழுமதியம்வயங்கப்பொழிவெண்கதிரால்க்
கானின்மிடைகார்க்களிறெல்லாங்காமரயிராவதமெனவு
மானகளவின்கனியெல்லாமமைவெண்ணுவற்கனியெனவு
மானமுறுபுல்லினமெல்லாமடங்கலெனவும்விளங்கியவே. (உகூஎ)

ஐராவதம் - வெள்ளையானை, புல் - புலி, மடங்கல் - சிங்கம்.

திருவமொருவற்குறறெரியச்சிற்சில்குறிமுன்றோன்றுதல்போன்
மருவுமுலைக்கிருளொதுக்கிவயங்குகதிரோன்வரவெறியப்
பருவச்சிலபுள்ளெழுப்பொலியும்பாயகீழைத்திசைவிளர்ப்புங்
குருவிட்டொழிதாராகணமுங்குறியாய்முன்னர்த்தோன்றினவே.

திருவம் - செல்வம், விளர்ப்பு - வெளுப்பு, குரு - ஒளி.

இருவர்சிறுவர்மழையினனைந்திளைத்திக்காடுகோட்பட்டார்
மருவுமவரென்னுற்றாரென்றெட்டிப்பார்க்கவருவான்போற்
பருவமரைகண்முகமலரப்பற்றற்றிருளும்போயொளிப்ப
வெருவுநாமுங்களிதூங்கவெய்யோன்குணபாலெழுந்தனனே. (உகூஅ)

மரை - தாமரை, வெய்யோன் - சூரியன், குணபால் - கீழ்த்திசையில்.

கல்வியறிவுமேலிடலுங்கரிசில்பல்லோரியற்றியநூற்
சொல்லும்பொருளும்வெளிப்படையாய்த்தோன்றவிளங்குவனபோல
வல்லையனுக்குமிரவியெழுவாங்காங்கமருமரும்பொருள்க
ளொல்லையின்னவின்னவெனவுணருமாறுவிளங்கினவே. (உகூகூ)

கரிசு - குற்றம், அல் - இருட்டு, அனுக்குதல் - கெடுத்தல்-இரவி - சூரியன்.

வெய்யோனெழுந்தவப்பொழுதேவிமலவாசாரியனை
செய்யோன்மறைச்சாந்தீபமுனிதேடிநம்மைமுகம்புலரா
வையோபிரமசாரிகளெங்கடைந்தாரென்னுற்றனர்கொலென
நையோகையின்வந்தக்காட்டுணண்ணநாமுங்கண்டனமே. (உ௦௦)

முகம் புலரா - முகம் வாடி, நையோகை - துக்கம்.

கண்டுவணக்கஞ்செய்துநின்றகாலையளவில்கருணையனுய்த்
தொண்டுபுரிமாணுக்கர்களிற்றூயிர்நும்மைப்போல்பவரார்
மண்டுமறைசொலென்னிமித்தமழையினனைந்தீர்வருத்தமிகக்
கொண்டுநின்றீர்கற்றகடன்கொடுத்தீர்விடுத்தீர்கோதனைத்தும். (உ௦க)

சீரார்நமக்குக்கல்விபோற்செல்வப்பொருளுஞ்செழுந்தொடையற்
காரார்கூந்தன்மனைவியருங்கனிவாய்மழலைமைந்தர்களு
நாரார்தருசுற்றமும்வாழுநாளுமதிகமாகுகவென்
றோரார்தருநல்லாசிபகர்ந்தில்லினமைக்கொண்டேகினனே. (உஎஉ)

நார் - அன்பு, தொடையல் - பூமாலை, ஆசி - ஆசீர்வாதம்.

இன்னவெல்லாமுளத்துநினைந்திருக்கின்றாயோநீயென்னப்
பன்னவரியமறைகதறும்பகவனுண்மைதோற்றாம
லுன்னவரியகைதவனுமொருமானிடவன்றனைப்போல
நன்னர்வினவிப்பின்னுமிதுநயந்துகூறத்தொடங்கினனால். (உஎங)

கைதவன் - வஞ்சகன், நன்னர் - நன்றாக.

மேற்படி - வேறு

பந்தனையகன்றமேலோய்பற்பலநாட்குப்பின்பு
வந்தனையெனக்கென்கொண்டுவந்தனையதனையின்னே
தந்தனையாயினன்றுதருசுவைப்பக்கணத்தென்
சிந்தனைநின்றதென்றான்றெரிவரும்வஞ்சக்கள்வன். (உஎச)

பந்தனை - பிறவிக்கட்டு, இன்னே - இப்பொழுதே, பக்கணம் - பக்ஷணம்.

இனியசிற்றுணவேதேனுமின்றிநீவருவாய்கொல்லோ
வினியநின்னுள்ளமின்றேயெண்ணியானறிதல்வேண்டு
மினியநின்மனைவிவாளாவேகிவாவென்பளோமற்
றினியவெற்கன்றியார்க்குக்கொண்டுவந்திருக்கின்றாயே. (உஎரு)

வாளா - சும்மா.

திருந்தவிங்களித்தியென்றுசெங்கரமலர்த்திநீட்டப்
பொருந்தவின்பாலுண்பான்பாற்புளித்தகாடியைக்கொடுத்திட்
டருந்திடென்றுரைத்தல்போலிவ்வவற்கொடையென்றுவாளா
விருந்தனன்குசேலமேலோனிவனுளமறிந்தகண்ணன். (உஎசு)

நடலைதீர்ந்தவன்மெய்ப்போர்த்தநாள்பலகண்டகந்தைப்
படர்தலைச்சுருக்கிவாங்கிப்பாங்குவைத்தினிதிறுய்ந்து
விடலருங்கற்புவாய்த்தமின்னனார்வணங்குந்தெய்வந்
திடமுறமுடிந்துவைத்தசிறுபொதிகண்டுகொண்டான். (உஎஎ)

நடலை - பொய்யொழுக்கம், வஞ்சனை. பொதி - முடிச்சு.

மசிதருமன்பின்வந்தவன்பொதியவிழ்த்துநோக்கி
வசிதருமவற்றுணன்றுவாய்த்ததுநமக்கிதென்று
வொசிதருகழற்காலயின்றொருபிடியவலைக்காதல்
பொசிதரவெடுத்துவாயிற்போகட்டுக்கொண்டான்மாதோ. (உஎஅ)

செறிதருசுவைத்தீதென்றுந்தேவர்க்குபரியதாகு
மறிதருவிருப்பினில்லினைத்ததேபமைழதுமன்று
குறிதருவிலைப்பாற்சென்றுகோடலிவ்வளத்ததோவென்
றுறியளைவாரியுண்டோனொருபிடியவறின்றுனே. (உஎகூ)

விலைப்பால் - கடை, அளை - தயிர், வெண்ணெய்.

முன்னுமிவ்வவலொன்றேனுமுனைமுறிந்ததுவுமின்று
பன்னுமுட்டையுமின்றுகும்பட்டவங்கையுமணக்குங்
கொன்னும்வாய்செறிப்பினம்மகுளமும்வேண்டுவதின்றென்று
வுன்னுபல்லுலகுமுண்டோனொருபிடியவறின்றுனே. (உஅ0)

முட்டை - பக்குவப்படாத அவல், குளம் - வெல்லம்.

பாங்கிருகொடிற்றெதுக்கிப்பதமுறச்சற்றிருத்தித்
தேங்குறமென்றுமென்றுசிரம்பலதரமசைத்துக்
கோங்கிளமுலைப்பூங்கோதைதருமுதவாய்ப்பைந்தேனூற
லோங்குமின்சுவைகொள்வாயானொருபிடியவறின்றுனே. (உஅக)

கொடிறு - கன்னம்.

நாடுமிவ்வவல்விருப்பநமக்குமிக்குள்ளதென்று
கேட்டுளாய்கொல்லோமுன்னுங்கிளந்திருப்பதுமன்றேயென்
றேட்டுமென்மலர்ப்பூந்தொங்கலிமையவர்க்கமிர்தமுன்னு
ளூட்டியபுகழின்மேலோனொருபிடியவறின்றுனே. (உஅஉ)

கிளத்தல் - சொல்லுதல்.

அரியவன்பினிற்கொடுத்தவிழிந்ததாயினுஞ்சிறந்த
திரியுமன்பினிற்கொடுத்தவிழிந்ததேசிறந்ததேனும்
பெரியவர்புகழப்பட்டபெருந்தவக்குசேலமேலோ
னுரியவன்பினையுங்கூட்டியொருபிடியவறின்றுனே. (உஅங)

மற்றொருபிடியெடுத்துவாயிடப்போகுங்காலை
முற்றிழைத்திருவுருக்குமணியெனுமுத்தமூரற்
பொற்றொடிப்பூங்கொம்பன்னாள்பொருக்கெனவோடிவந்து
கற்றவர்புகழ்தன்கேள்வன்கரத்தினைப்பிடித்துக்கொண்டாள். (உஅச)

மூரல் - பல், கேள்வன் - கணவன்.

நெய்யடைகவளங்கொள்ளுநெடுங்கடக்களிற்றின்கையைத்
தெய்யவார்த்தோடிவந்தோர்சிறுபிடிபிடித்தல்போன்ற
தையநுண்ணிடைக்கலாபமடிச்சிலப்பலம்பவோடிப்
பொய்யிலான்கையைத்தேவிபொருக்கெனப்பிடித்ததோற்றம் (உஅரு)

கடக்களிறு - மதயானை, பிடி - பெண்யானை, கலாபம் - அரைப்பட்டிகை.

## சலிவிருத்தம்.

இருங்கிளிப்பெயரிருடியின்னவா
றொருங்குகூறலுமுவந்துதாழ்ந்தெழீஇப்
பருங்கலைகமால்வரைப்படையுழக்குபு
பொருங்கைவேலினான்புகறன்மேயினான். (௨௮௬)

கிளிப்பெயரிருடி - சுகமுனிவன்.

என்னவற்புதமெடுத்துரைத்தனை
பன்னுநாமகன்பரிவிற்றுய்த்திட
றன்னையூறுறத்தடுக்குமாதரார்
நன்னர்நீரரோநவையில்கேள்வியாய். (௨௮௭)

கடுத்தகார்விடங்களிலைக்கண்ணுத
லெடுத்துங்காலையுமிடத்துமேவிய
தொடுத்தபூங்குழற்றோகையாமயி
றடுத்ததில்லையேசாற்றுமென்மையோய். (௨௮௮)

இடத்துமேவிய தொடுத்தபூங்குழற்றோகைமாமயில் - உமாதேவி.

கணவன்றுய்த்திடக்கருதெவற்றையு
மிணர்மென்கூந்தலாரெடுத்தெடுத்தளித்
தணவநின்றுபசரிப்பதல்லது
குணமிலாரெனத்தடுத்தல்கொள்கையே. (௨௮௯)

துய்த்தல் - உண்ணுதல், இணர் - பூங்கொத்து.

வாயுமுன்பிணிவகுத்தறிந்திடு
மாயுள்வேதியரகற்றுமொன்றனை
நாயகன்கொளநயந்தமிற்பனேற்
றீயதென்பர்பின்சிந்தைநோவரே. (௨௯௦)

கண்டன்வேறொருகருமநெஞ்சகங்
கொண்டுமற்றையகுறைத்திருப்பினு
மண்டுமன்பின்யாதானும்வைத்துக்கொண்
டுண்டுபொனூட்டுநீரரே (௨௯௧)

கண்டன் - கணவன்.

ஆரமைச்சுநேர்மதியமைந்துமிக்
கோரடிச்சியாய்ப்பணியிலூணிடச்
சாரிலன்னையாய்ச்சமைவர்கற்புடை
நாரியாரெனநவில்வர்நல்லவர். (௨௯௨)

அடிச்சி - வேலைக்காரி.

கோற்றொடிக்கருங்கூந்தன்மாதராண்
மாற்றலார்கெடமாட்டும்வைந்துதிக்
கூற்றமன்னவாட்குரிசிலெண்டப
மாற்றிநின்றதென்வழங்குவாயென்றான். (உகூங)

தொடி - வளையல், மாற்றலார் - பகைவர், கூற்றம் - யமன்.

சேரலார்முடிதேய்க்குமொண்கழல்
வீரனிங்ஙனம்வினவிடக்குறு
மூரல்கொண்டருண்முகத்தனாகிய
வீரமாதவனிறைகொடுக்குமே. (உகூச)

சேரலார் - பகைவர், குறுமூரல் - புன்சிரிப்பு.

மேற்படி - வேறு

சொற்பிறங்கியநற்குலத்தோற்றத்தாள்
கற்பினுக்கரசாயகனங்குழை
விற்பிறங்கியவாணுதன்மெல்லியல்
பொற்பினுக்கொருபொற்பெனுந்தன்மையாள். (உகூரு)

நிலவுவெண்டிரைப்பாற்கடனின்றெழு
கலவமாமயிலன்னகருங்குழற்
குலவுமாமகள்கூற்றினிற்றோன்றினா
ளலகினற்குணங்கட்கெல்லையாயினாள். (உகூசு)

கலவம் - தோகை.

இலக்கணங்கணிரம்பியவேற்றத்தாள்
விலக்கரும்புகழ்வாய்ந்தவிளங்கிழை
நலக்குமன்பற்குநன்மையல்லாதொன்று
கலக்கச்செய்குவளோபுவிகாவலோய். (உகூஎ)

மேவுமன்பன்மனக்குவிரோதமா
யாவுஞ்செய்யகிலாளயர்ந்தாவது
நாவினாலுநவிற்றுகிலாளுளம்
பாவுமாறுபடர்தலுஞ்செய்கிலாள். (உகூஅ)

கோச்சகக்கலிப்பா.

பலகலைகண்முற்றுணர்ந்தபளகிலாத்தவமறையோற்
குலகமிறும்பூதடையவொழியாதபெருஞ்செல்வ
நிலமிசையுண்டாகவெணநினைந்தவலோர்பிடியெடுத்து
நலமுறத்தின்றனனென்றுமறிந்தாளந்நன்னுதலே. (உகூகூ)

தகத்தின்றபிடியவற்கேசகங்கொள்ளாப்பெருஞ்செல்வ
மிகத்துன்றுமஃதன்றிமீட்டுமொருபிடியெடுத்து
நகத்தின்றுவிடுவானேனாள்பலவுமன்னவற்குத்
தொத்துத்துன்றுமடிமையாய்ச்சொற்பணிகள்கடவானாம். (௩௦௦)

தானமாவேண்டுமெனுந்தக்ககருத்துளத்தமரக
கானமருங்கருங்கூந்தற்கதிரமருமதிவதனக்
கூனமரும்பிறையுருவக்குயிலமருமென்மொழியா
டேனமருந்தார்மார்பன்செங்கைபிடித்துத்தடுத்தாள். (௩௦௧)

அன்றியுமத்தொழுகுலத்தானணிமனைக்குவேண்டுவது
துன்றியசீர்ச்செல்வமேதுன்னலார்முடியுரிஞ்சும்
வென்றியமர்சருங்கழற்கால்வெள்ளொளியவேல்வேந்த
மின்றிகழுமணிமார்பன்பணிசெயல்வேண்டுவதின்றே. (௩௦௨)

தொழுகுலத்தான் - வேதியன், துன்னலார் - பகைவர்.

ஆதலிற்றன்னாயகனுக்கமைந்தவிதமாகும்விதங்
காதமர்பொற்குழைகிழித்துக்கருங்குவளைக்குலஞ்சவட்டி
மோதடுகூற்றொடும்பொருதமுடங்கல்விடுந்தடங்கருங்கண்
மாதர்புரிந்ததையன்றிமற்றொன்றுபுரிந்திலளே. (௩௦௩)

சவட்டல் - வாட்டல், முடங்கல் - ஓலைச்சுருள்.

வன்புடைமாற்றலர்நெய்த்தோர்வாய்மடுத்துத்தசைகுதட்டி
யின்புடையீருளுஞ்சுவைத்திட்டெழுங்கதிர்வாட்கண்ணபிரா
னன்புடையார்க்கிதுகொடுத்தலாகுமிதாகாதென்று
தன்புடையாயினுமெண்ணத்தக்கவனோதார்வேந்தே. (௩௦௪)

நெய்த்தோர் - உதிரம், குதட்டல் - மெல்லல், ஈருள் - ஈரல்.

வாரிதிசூழுலகினொருமானிடவனறியாது
சீரியலச்செய்தவறஞ்சிறிதேனுமப்பயனாற்
பேரியனாஞ்சுவர்க்கத்திற்பெரிதின்பந்துய்ப்பனெனிற்
கூரியனும்வடிவேலாய்குசேலமுனிக்கிஃதரிதோ. (௩௦௫)

நீடுபுகழ்ப்பகவனடிநீங்காதுவளருளத்தா
னோடுபொறிச்சேட்டையெலாமொடுக்கியமாதவனன்றே
யேடுசெறிமலர்மார்பாவிம்மறையோனெனப்புகன்றிட்
டாடுபுகழ்ப்பெருந்தவத்தோனப்பானுஞ்சொலப்புக்கான். (௩௦௬)

தேவியாற்றடைபட்டுச்செறிதரக்கைக்கொளுமவலைப்
பாவியவன்புகழானப்பழங்கந்தைதனின்முடிந்து

மேவியவேர்பிடியவலின்மிகுமகிழ்ச்சியுடையானைய்
நாவியலுந்துதிமுழக்கிமன்முகமன்பலசொற்றான். (௩௦௭)

முகமன் - உபசாரவார்த்தை.

அன்றிரவோர்மென்படுக்கையணிந்துதவவதின்மேவி
மன்றிகழ்வுவளகத்துவளம்பலவுங்கண்டதனாற்
றுன்றியபேரானந்தமொழியாதுதோன்றியெழக்
கன்றியதீப்பொறியவித்தோன்கண்படைகொண்டருளினான். (௩௦௮)

உவளகம் - அந்தப்புரம், கண்படைகொள்ளல் - நித்திரைசெய்தல்.

கதிருதிக்குங்காலையெழீஇக்கடன்பலவுமுற்றியடர்
முதிர்புலன்செற்றருஞானமுயன்றடைந்தோனுதலினன்
மதிகுலத்துமன்னவன்பால்வாய்திறந்தொன்றுங்கேளா
னிதியமிகப்பெற்றவனாய்கினைந்தூர்க்குவழிக்கொண்டான். (௩௦௯)

அக்காலைக்கண்ணனுந்தன்னணிவாயில்வரைவந்து
மிக்கார்வத்தொடுமடியில்வீழ்ந்துவணங்கிடமகிழ்ந்து
தொக்காசிபலகூறித்துவாரபாலகர்வாயி
லெக்காலுமின்பமருன்கடந்தப்பாலேகிடுங்கால் (௩௧௦)

விண்டார்தம்மணிமௌலிமிதித்துழக்குங்கருங்கழற்கால்
வண்டாடுநறுந்துளபமாலைதுயல்வருதடந்தோட்
கொண்டாடும்புகழ்க்கண்ணன்களிகூர்ந்துகோயில்புகக்
கண்டார்களாங்கிருக்குங்கார்க்குழன்மின்னார்பலரும். (௩௧௧)

மௌலி - கிரீடம், உழக்குதல் - துவைத்தல்.

மலர்வதனஞ்சாய்க்குநருமணியதரம்பிதுக்குநருஞ்
சிலதியரைச்சினக்குநருந்திருமிடப்பவருமாய்க்
குலவுமறையவற்கொன்றுங்கொடுத்திலன்போவென்றனன்
றிலவிதழ்ச்செய்யவாயியன்றனவெலாமுரைப்பார். (௩௧௨)

கலிநிலைத்துறை.

தாயெதிர்வுற்றசேயெனவுள்ளந்தழைவுற்றான்
போயெதிர்கொண்டான்காலில்விழுந்தான்புணைவித்தா
னேயமுளானென்னாரறிவித்தானீங்கென்றான்
சேய்மையனைத்தானன்றிதுவென்றார்சிலமாதர். (௩௧௩)

பார்த்திபர்பல்லோர்காத்தனர்நிற்கப்பாரானைக்
கூர்த்தமதிப்பூசுரனெதிர்கொண்டான்கொண்டாடிப்
பூர்த்திமிகுந்தானந்தோவாளாபோகென்றான்
சீர்த்திமிகுந்தானன்றேயென்றார்சிலமாதர். (௩௧௪)

பார்த்திபர் - அரசர்.

துன்றியவன்பிற்கட்டியணைத்தான்றொழுதிட்டான்
பொன்றிகழ்பள்ளிமீதமர்வித்தான்புகழ்ந்திட்டா
னொன்றுமளித்திட்டானலனுதயத்துன்னூர்க்குச்
சென்றிடுகென்றானன்றிதுவென்றார்சிலமாதர். (௫௧௫)

எளியோன்பாவமித்தனைதூரமேன்வந்தா
னளியார்தேனேபாலேயெனவினிதாப்பேசிக்
களியாநின்றோர்காசும்மீயான்கழிகென்றான்
றெளியார்நல்லோரிவனுமாயென்றார்சிலமாதர். (௫௧௬)

காடுந்நாடுந்நீந்தினனாகிக்கழியன்பி
னீடுதிரப்புநீங்கிடுமென்னுமினையுள்ளஞ்
சூடுபுவந்தானிங்கொருவேளைச்சோற்றுக்கே
தேடுவர்சான்றோரிவன்புகழென்றார்சிலமாதர். (௫௧௭)

குன்றாலன்றுமாரிதடுத்தகோமான்மற்
றொன்றாநண்பனென்றிவண்வந்தானுறவுள்ள
மன்றானையன்னான்கொடுவந்ததையும்வாரித்
தின்றானென்றுமீந்திலனென்றார்சிலமாதர். (௫௧௮)

ஒழுங்குறுமுற்றவமில்லவர்யார்நட்புற்றாலெல்
விழுங்குமிடித்துயர்தீரருநீரினர்மெய்யீதா
லழுங்கலிலாதுல்காள்பவர்தேவியராணுலுஞ்
செழுங்கைதரிப்பதுமண்வளையென்றார்சிலமாதர். (௫௧௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இங்கிவனம்மறையோன்பால்வைத்ததையெலாமறிந்தோ மென்னேயென்னே,கங்கணங்கண்ணுறுவதற்குக்கண்ணடியும்வேண்டுங்கொல்கருங்கண்ணீர்கா, டுங்கமுடனொருவேளைச்சோறுண்ட துயர்ந்தவனாதுளைத்துப்போகி,யங்குவருசிகரியொன்றுபிடித்ததுபோலாயிற்றென்றறைந்தார்சில்லோர். (௫௨௦)

சிகரி - எலி.

நரபதிபால்வேண்டுவனபெற்றுவருந்தலைவனெனநடவைபார்த்துப்
பரவுபுகழ்மனையிருக்குமந்தோநன்மைந்தருமப்பரிசேசிற்பர்
விரவிலிவனென்செய்வான்சிந்துபழங்கந்தையன்றிவேறொன்றில்லான்
புரவுடையானென்பனொருகலையுமளித்திலனென்றுபுகன்றார்சில்லோர்.

நரபதி - அரசன், நடவை - வழி.

எத்துணையசெல்வமிகுத்திருந்தாலு மீத்துவத்தலிவன்பாலில்லை, மெத்துநயமொழிகளான்மயங்கியொன்றுங்கேளானாய்விரைந்துபோனான், பித்தறுபாமறையவனுமிவனுமகிழ்ந்தாறனுப்பிப் பெயர்ந்து வந்தான், கொத்துறுமிந்நட்பிருந்தென்னிராதொழிந்தாலென்னென்றுகுயின்றார்சில்லோர். (௩௨௨)

குயிலல் - சொல்லல்.

அம்மறையோனொருபொருளுங்கேளானாய்ச்சென்றதையா மறிந்தோமன்ற, மம்மர்தபுத்தீத்துவப்பார்க்கணிலன்றேகேட்பவர்க்கு வாயுண்டாகும், விம்மலுறுநசையினருமிவனிடத்துக்கேட்பதற்குமேவாரென்றாற், றம்மையுணர்ந்துயர்ந்தவரோகேட்கத்தக்கவரென்றார்தடங்கட்சில்லோர். (௩௨௩)

மம்மர் - துன்பம், நசை - ஆசை.

என்னினைத்துவந்தானோவவனிவனும்யாதுநினைத்திருக்கின்றானோ
பன்னரியவிவன்செய்யுமாயையெவராலறியப்படும்வாய்வந்த
வின்னனவெலாம்பேசலறிவன்றுநமக்கெனவண்டிரங்குங்கூந்தன்
மின்னனையநுண்ணிடைப்பேரமர்க்கண்மடமாதர்சிலர்விளம்பினாரே.

இரங்குதல் - ஒலித்தல்.

சிற்றிடைப்பேரமர்க்கண்மடமாதர்பலரிவைமுதலாச்செப்பிநிற்கக்
கற்றவரேத்தெடுக்குமுனிதுவரைநெடுந்தெருப்பலவுங்கடந்துபோகி
வற்றுதலில்பெருங்கடலுநீங்குபுதன்னூர்க்கேகும்வழியைக்கூடி
நற்றவமாந்தன்னிலக்கிற்சிந்தையுறமிகமகிழ்ந்துநடக்குங்காலை.

ஏத்தெடுத்தல் - துதித்தல், துவரை - துவாரகை.

அருந்தவர்கள்புகழ்சீர்த்தியமைந்ததிருக்கண்ணபிரானருளினாலே
பொருந்துவிரதாதிகளான்மிக்கிளைத்ததன்னுடம்புபூரிப்புற்ற
திருந்தபழங்கந்தைசெழும்பொன்னுடையாயிற்றாலிலங்குங்கண்டப்
பெருந்துளபமணியாரப்பெருவிலைமுத்தாரமாய்ப்பிறங்கிற்றாலோ.

செவியணிபுல்லியபொருள்களரதகுண்டலமாகித்திகழ்ந்தவான்ற,சவியணிகைவிரற்றருப்பைபைப்பவித்திரம்பொன்னாழியாய்த் தகைந்ததோங்கும், புவியணியுங்கட்டழகுகாமனுங்காமுறுசிறப்பிற்பொலிந்ததம்ம, கவியணியுமதகளிற்றுக்கதிகமாம்வலியுமுடற்கலந்ததன்றே. (௩௨௭)

பாயபெருமிடிமுன்னேதனக்கொழிந்தவவித்தையெனப்பாறிமாய்ந்த
தேயவழிநடையிளைப்புமுதலியவெலாஞ்சற்றுமின்றாய்விட்ட
காயவெயில்குளிர்ந்ததுபாலையுநீருறிற்றிளமென்காலும்வீசிற்
றாயவினைவயனைத்துமுணர்ந்திறும்பூதுமிகக்கொண்டானன்னகாலை.

அவித்தை - அஞ்ஞானம், பாலை - நீரில்லாதநிலம், கால் - காற்று.

### கலிவிருத்தம்.

ஒழுகுங்கடவரையுங்கதிருறழ்செம்பொனிரதமு
மெழுவெங்கதியுளைபொங்கியவியறங்கியபரியுங்
கொழுநின்றவையயில்கொண்டவர்குழுவும்பலசூழப்
பழுதென்பதிலவர்மன்னவர்பலர்வந்தெதிர்கொண்டார். (௫௨௯)

கடவரை - மதமலை (யானை). வெங்கதி - கடுநடை, உளை - புறமயிர்,
வை - கூர்மை, அயில் - வேல், குழுமுதல் - கூடுதல்.

மணிவார்முடிமண்டோப்தரமறைமாமுனிதாளிற்
பணிவார்சிலர்துதிப்பார்சிலர்படரன்பினில்வழிபட்
டணிவார்சிலர்பார்ப்பார்சிலரார்ப்பார்சிலராகிக்
கணிவார்புயவிறல்வேந்தர்கள்கழலாக்களிப்புற்றார். (௫௩௰)

பொன்னார்வடவரைமேற்கதிர்ப்புத்தேளெனப்பொலிய
மின்னார்கதிருமிழும்மொருவியன்மாமணித்தேர்மேன்
முன்னார்மறையோனைப்பலமுகமன்புகன்றேற்றி
நன்னாரொடுபெருவேந்தர்கள்சூழநடந்தனரால். (௫௩௧)

வடவரை - மேருமலை, கதிர்ப்புத்தேள் - சூரியதேவன், நார் - அன்பு.

மண்ணென்பதுதெரியாவகைவானத்திடையமரர்
கண்ணென்பதுநுழையாவகைகற்பத்தருமலரா
லெண்ணென்பதுமின்றும்வகையிறைத்தார்களித்தார்த்தார்
புண்ணென்பதுபொலிவேலவர்பூத்தாரிழும்பூதா. (௫௩௨)

புண் - மாமிசம்.

கடன்மேலெழுந்தார்த்தாலெனக்கடனீருறப்பருகி
யுடன்மேகங்களார்த்தாலெனவுயர்வான்முகடதிர
மடன்மேலெழுதார்வானவர்வண்டுந்துபியைந்தும்
விடன்மேலுளதாகாவகைமேலும்பெரிதார்த்த. (௫௩௩)

### கலிநிலைத்துறை.

அளவிலாமகிழ்தலைசிறந்தோங்கிடவவிர்ந்து
பளகிலாதுயர்தருப்படர்கொடியசைந்தென்ன
வளவிலாவியமின்னுகணடித்தெனமணிவாய்த்
தளவமூரல்விண்மடந்தையர்நடித்தனர்தயங்க. (௫௩௪)

தரு - மரம், தளவம் - முல்லையரும்பு.

பிரகலாதனன்பராசரன்பெருஞ்சவுனகன்சீர்
வரவியாதனம்பரீடன்புண்டரீகன்முன்மற்றோர்

கரவிலாதவுள்ளத்தாய்க்கழிமகிழ்சிறப்ப
விரவிநின்றுதோத்திரமெடுத்தியம்பினர்மேன்மேல். (௫௫௫)

இன்னபல்வகையதிசயமெதிருறக்கண்டு
நன்னர்மாமறைக்குலத்தவனுயகன்பாதத்
துன்னுநெஞ்சகம்பெயர்த்திலனுறுவனவெல்லாம்
பன்னுமெம்பிரானருளெனநினைத்தனன்படர்வான். (௫௫௬)

அரசரேமுதலாயினோரனைவருமடுத்துப்
பரசியேவலர்போற்பிரியார்பின்புபடரப்
புரசைமால்கரிபரிமுதற்படைகளும்பொலியத்
தரைசெய்பேறெனவிளங்குதன்னூர்ப்புறஞ்சார்ந்தான். (௫௫௭)

பரசுதல் - புகழ்தல், படர்தல் - நடத்தல், புரசை - யானைகழுத்திற் கட்டுங் கயிறு, மால் - மதமயக்கம்.

பரியுநீள்பழங்கந்தைகொளுடையனிப்பரிசு
பெரியமாதவர்வேந்தர்கண்முதலியோர்பெரிதுந்
தெரியுமாபுகழ்ந்தேத்திடச்சிறந்தனனென்னி
லுரியதாகியதவத்தினிலுயர்ந்ததொன்றுண்டோ. (௫௫௮)

என்றுரைத்தமாமுனிவரனிணையடியிறைஞ்சி
நன்றுசொற்றனைமற்றதுநடத்துகென்றடையார்க்
கொன்றிரத்தம்வாய்மடுத்திடும்வாட்படைக்குரிசி
லன்றுமற்பொடுகேட்டலுஞ்சுகமுனிசொல்வான். (௫௫௯)

அடையார் - பகைவர், குரிசில் - அரசன், (பரீக்ஷித்து) அற்பு - அன்பு.

இரண்டாவது

குசேலர் துவாரகைகண்டு

தந்நகர்ப்புறமடைந்த வத்தியாயம் முற்றிற்று.

குசேலமுனிவர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

மூன்றாவது

# குசேலர்செல்வநுகர்ந்து

## வைகுந்தமடைந்தவத்தியாயம்.

இன்னிசை வெண்பா.

ஒருதிடந்தான்கதிக்கணுக்குமெனச்சொல்ல
கருதிடந்தானவன்காமர்குலத்தான்
பொருதிடந்தானவர்பொன்றவயர்த்தான்
மருதிடந்தானடியவா. க.

கதி - மோக்ஷம், தானவர் - ராக்ஷஸர், பொன்றுதல் - இறத்தல், அயர்த்தல் - போர்செய்தல், மருது - மருதமரம், இடத்தல்-பிளத்தல், அவா-அன்பு.

வேற்றொலி வெண்டுறை.

கருங்கடலினடுவணெழுகதிரெனக்கார்நிறத்துமணி
கதிர்ப்பக் காமர்
பெருங்கனகவரையெனச்செம்பொன்னுடைநான்றடியும்
பிறங்கப்பாயல்
வென்றிவாளரவமுந்தொடரமென்றாமரைத்
துன்றுமாமங்கையுந்தொடரவாய்விட்டெழீஇ
மன்றவேதங்களுந்தொடரவான்சுவையமிர்
தொன்றுசெந்தமிழ்தொடரொருவர்பின்றொடர்தரச்
சென்றவன்றிருவடிதேருவார்யாருமே. (உ)

நான்ற-தொங்கின, பிறங்க-விளங்க, தமிழ்தொடரொருவர்-செந்நாப்புலவர்.

கலித்தாழிசை.

காமர்நறுவிரைத்துளபக்கண்ணியனைப்புண்ணியனை
மாமகடன்கொழுநனைவழுத்துவீர்மானிடர்காண்
மாமகடன்கொழுநனைவழுத்துவீராமாகிற்
றாமரைப்பெருமுதலுஞ்சாரற்கரியகதிசார்வீரே. (௩) வி

கண்ணியன் - மாலையணிந்தவன், தாமரைப்பெருமுதல் - பிரமன்.

ஒருபொருண்மேல் மூன்றடுக்கிவந்த

வஞ்சித்தாழிசை.

மாதர்களின்வருந்தாமே, போதமுறப்புரிந்திடுவீர்
சீதமலர்த்திருமார்பன், கோதறுசீர்குறிப்பீரே.

மங்கையரின்வருந்தாமே, பொங்கமுறப்புரிந்திடுவீர்
செங்கமலத்திருமார்பன், கொங்கலர்சீர்குறிப்பீரே.
வனிதையரின்வருந்தாமே, புனிதமுறப்புரிந்திடுவீர்
கனிமொழிச்செந்திருமார்ப, னினியசீர்குறிப்பீரே. (௪)

போதம் - ஞானம், பொங்கம் - பொலிவு, புனிதம் - பரிசுத்தம்.

ஒப்புமைபற்றிவந்த அறடித்தரவு
கொச்சகக்கலிப்பா.

வண்டாடுபூந்துளபமாலையனைவானோர்கள்
கொண்டாடுஞ்சீர்த்தியனைக்கோவலர்பாடித்தபிர்நெ
யுண்டாடுசீதரனையொப்பிலாவற்புதனைக்
கண்டாடுமன்பருளங்காதலிக்கும்புண்ணியனைத்
தொண்டாடுவன்றியெனச்சொல்லித்துதிமுழக்கி
யொண்டாடுணைக்கொண்டுயர்வீருலகீரே. (௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மின்றிகழ்பிறழ்பற்கூற்றம்விலாப்புடைவீங்கவுண்ண
வென்றிகொள்செறுநர்ச்சாய்த்துவிருந்திடும்வெள்வேல்வேந்தே
யொன்றியபுகழ்க்குசேலனார்ப்புறஞ்சார்ந்தகாலை
நன்றிமிக்குறுமச்சீறார்நலப்பெருநகராயிற்றே. (௬)

செறுநர் - பகைவர்.

மற்படுகானமெல்லாமாடமாளிகையேயாகிச்
சொற்படுபுலவராலுஞ்சொலற்கருஞ்சிறப்புவாய்ந்து
விற்படுமமரர்நாடுவீழ்ந்துமண்ணிறைகொண்டாற்போ
லற்படுத்தொளிர்ந்ததையனருளினிற்சிறந்ததுண்டோ. (௭)

மல் - வளம், வில் - ஒளி, இறைகொள்ளல்-தங்குதல், படுத்தல் - அழித்தல்.

இமைக்குமந்நகரங்காணூஉவெறுழ்வலிக்காதிமைந்தன்
சமைத்தவேற்றுச்சிருட்டிதனிற்றயித்தியரைச்சாயக்
குமைத்தரும்போகந்துய்த்துக்குலவுநந்நகர்க்குமாறு
வமைத்தபொன்னகரோவென்னவமருண்மயங்கினாரே. (௮)

காதிமைந்தன் - விசுவாமித்திரன், தயித்தியர் - இராக்கதர்.

அறன்கடைநயக்கும்வெஞ்சூராருயிர்சவட்டிவாங்கித்
திறன்படுசுரர்கால்யாப்புச்செறிகழல்வித்துச்சீர்த்தி
நிறங்கிளர்வெள்வேலையனிறைகுடியேற்றுநாளிற்
பிறங்கியதுறக்கநாட்டின்பெற்றியந்நகரின்பெற்றி. (௯)

அறன்கடை - பாவம், யாப்பு-விலங்கு, வெள்வேலையன்-முருகன்.

அருநிதிதவமென்றுராய்ந்தமைதரவீட்டியீட்டித்
தருநிதியனையகண்ணன்றன்னருள்பெற்றமேலோன்
பெருநிதிநகரநோக்கிற்பிறங்கியசெல்வம்வாய்ந்த
விருநிதிக்கிழவன்வாழ்க்கையெழினகர்சிற்றூராமால். (௧௦)

நிதிக்கிழவன் - குபேரன்.

நயந்தருநடுவுள்ளானைநல்லறஞ்சூழ்ந்தாற்போலப்
பயங்கெழுநகரஞ்சூழ்ந்துபாசநீத்தறிவின்மேலா
யுயர்ந்தவர்க்கினிதுசெய்தவுதவிபோலுயர்ந்துமிக்க
வயங்கொளப்பொலிந்தன்றெஞ்சாமஞ்சுசூழிஞ்சிபாதோ. (௧௧)

மஞ்சு - மேகம், இஞ்சி - மதில்.

கொன்பெறுமமிர்தங்கொள்ளைகொண்டுளார்நகலாமேதென்
றின்புறுகீரவாழியினியநீர்க்கடலையேவ
வன்புறுமதுவிதேவானவர்நகரென்னச்சூழ்ந்து
மன்பெறப்பொருதல்போன்றதகழிநீர்மதிலைமோதல். (௧௨)

கீரவாழி - பாற்கடல்

பற்பலவடுக்குமாடம்பரந்தவிண்டாங்கவேணைக்கி
யற்புறுநந்தம்பொன்னுடைந்தரநிற்றலாலே
விற்படங்கிலத்தெவ்வேலைவீழுமோவென்றுட்கொண்ட
கற்பகமாலைத்தேவர்காதரமொழிந்ததன்றே. (௧௩)

பற்றையார்ந்துயர்ந்தவோங்கற்பரிசன்னபைம்பொன்மாடத்
தெற்றையான்புனைவல்வாணற்றிருபுறநெருங்கிநிற்கு
கற்றையார்ந்தெழுந்தபாடங்களிழ்தரவொட்டாவென்று
வொற்றையாருருளைத்தேரைநடத்துவோறுவகைபூத்தான். (௧௪)

பற்றை - சிறுதூறு, ஓங்கல் - மலை, ஒற்றையாருருளைத்தேரோன் - சூரியன்.

இந்திரநீலமேடையெழுங்கதிர்க்கற்றைமீப்போய்க்
கந்தடுவெண்களிற்றைக்கருங்களிறாக்கவேணைக்கி
முந்தைநாட்சாபமீட்டுமுளைத்ததுகொல்லென்றஞ்சிச்
சிந்தையுளாய்ந்துபின்னரிதுவெனத்தெளியுமாலோ. (௧௫)

கந்து - கட்டுத்தறி.

வஞ்சிநுண்ணிடையினார்மேன்மாடமேடையினிருந்து
வெஞ்சினப்புலவிமூளமணிவடம்வெறுத்ததோளி
லஞ்சுமூடலின்விண்மாதரெறிந்தமுத்தாரம்வீழ
விஞ்சைவல்லவனங்கேள்வனெனவுளம்வியந்துகொள்வார். (௧௬)

புலவி - பிணக்கம், விஞ்சை - மந்திரவித்தை.

சுதைபயின்மாடந்தோறுஞ்சுடர்மதிதவழுந்தோற்றங்
குதைவரிச்சிலையைவாட்டுங்கோடியபுருவநுண்கூர்ப்
புதையிகல்கண்ணினாரம்போருகமுகத்தைநேரத்
தகைதயுடற்களங்கந்தேய்த்துக்கழிப்பதுதகையுமன்றே. (கஎ)

சுதை - சுண்ணச்சாந்து.

மணிநிலாமுற்றமேவிமாதரார்வயங்குகண்கட்
கணிநிலாவுறுமைதீட்டவதிகமையுகிர்ற்கோத்துத்
துணிநிலாவிசும்பிற்றுள்ளத்தெறித்திடுதோறுமாங்குத்
தணிநிலாமெய்யிற்சார்ந்துதயங்கிடுங்களங்கமென்ன

உகிர் - நகம்.

வெள்ளியமாடந்தோறும்விளங்கெழின்மணிப்பூணல்லா
ரள்ளொளிக்கற்றைவீசவணிந்துநிற்கின்றதோற்றந்
தெள்ளுவெண்டிரைசுருட்டுஞ்சிறந்தபாற்கடலினுப்ப
ணெள்ளலில்பவளவல்லியெழுந்துநின்றிடுதலேய்க்கும். (ககூ)

நாப்பண் - நடு, வல்லி - கொடி.

இரசிதத்தமைத்தமாடமெறிசெறிதிரைப்பாலாழி
வரவதன்மீதுதுஞ்சுமஞ்சுமாறடித்துமாவாம்
விரவுசெம்மேகக்கற்றைவிளங்கிடுசெம்பொனுடை
புரவுவெண்பிறைவெண்சங்கமுடுக்களச்சங்கின்முத்தம். (உ0)

இரசிதம் - வெள்ளி.

விலங்கல்வின்னுயர்ந்தமாடம்வியன்கொடிமுடங்கலாங்க
ணிலங்குறுமதியமங்தேத்திருன்மடமாதர்மஞ்ஞை
நலங்கொளம்மதியங்கண்டுநகைநிலாமணிபெய்தெண்ணீர்
கலங்கலிலருவியீட்டங்கார்கடக்களிநல்யானை. (உக)

விலங்கல் - மலை.

அண்ணலங்களிநல்யானையார்ப்பும்வாம்பரிமுழக்கு
மொண்ணலங்கொடிஞ்சித்திண்டேரோதையும்வயவரார்ப்பும்
பண்ணலங்கனிந்ததீஞ்சொற்பாவையர்கலன்களார்ப்பு
மண்ணலம்புனைந்தவாடைவாரிவாயடைக்குமாதோ. (உஉ)

அண்ணல் - பெருமை, கலன்கள் - ஆபரணங்கள், வாரி - கடல்.

மறைபயில்கிருர்தங்கூட்டம்வயங்கியகிடையுமற்றைக்
கறையறுகல்விகற்குங்காமர்சாலையுங்கார்க்கூந்த
னறையொழுகலங்கன்மாதர்நடநவில்சாலையும்பொன்
னிறைபலவறமுமோங்குநெடியசாலைகளும்பல்ல. (உ௩)

பரிநிரைசெண்டுபோகும்பைம்பொன்வார்மறுகுநீள்கைக்
கரிநிரைகடம்பெய்தேகுங்காமருமறுகுஞ்செம்பொன்
விரிமணியுருளைத்திண்டேர்விரைந்துசென்மறுகும்வீர
ரரியினமஞ்சவாளாட்டாடிடுமறுகும்பல்ல. (உச)

செண்டுபோதல் - வையாளிபோதல்

கழிந்தகாமுகர்தநெஞ்சங்கனிந்தசீரணங்கனார்பா
லெழுந்துசெல்கதியுந்தோற்பத்துனைவினினேகும்பாய்பா
வழிந்திடுநீர்மைமுட்டவாவுவவிண்ணும்வாயு
வழுந்துறச்செல்வமென்னவறிதரத்தெருட்டல்போன்ற. (உரு)

துனைவு - விரைவு, தெருட்டல் - தெளிவித்தல்.

விற்றவழ்சூழியானைமிகப்பொழிதானம்பாய்ந்து
முற்றவும்வழுக்கலுற்றவீதியின்முனியுமூடற்
பொற்றொடியவரெறிந்தமணிக்கலன்பொலிதலாலே
யுற்றகால்வழுக்கிவீழ்தலொழிந்தனர்நடப்பார்யாரும். (உசு)

சூழி - முகபடாம், தானம் - மதம்.

கொன்னுனைமருப்பியானைக்குழாம்பொழிதானம்வாவுந்
துன்னுளைப்பரிவிலாழிதுலங்குமந்நகரநின்றும்
பன்னுமண்ணுலகமெங்கும்பரத்தலால்வழுக்குமென்று
நன்னிலங்காறோயாமனடக்கின்றார்துறக்கவாணர். (உஎ)

துறக்கவாணர் - தேவர்.

நயக்குமாதர்கடங்கூந்தற்கிடுநறும்புகைவிண்மாதர்
வயக்குமெய்சூழ்தனோக்கார்மணமவர்க்கியற்கையென்ப
ரியற்கையைச்செயற்கையாகச்செயற்கையையியற்கையாக
மயக்குமற்றவரைக்கேட்கினிலக்கணைவகையாமென்பார். (உஅ)

மங்கலப்பொலிவுமிக்கமாடமாளிகையும்வாசத்
தொங்கலங்கூந்தனல்லார்தொகுதியும்விருந்தையூட்டும்
பொங்கியகளிப்புமீகைப்புகழ்ச்சியுநல்லோர்வாழ்த்தும
பங்கமின்மக்கட்பேறும்பண்புமிக்கஃதம்மூதூர். (உகூ)

பணைபுகைமிகுதியாலேபடர்தழன்மிகுதிதானித்
துணையதென்றுணர்வார்போலச்சொற்றவிச்சிறப்பினாலே
மணமலிபுகழ்க்குசேலர்மனைச்சிறப்பினையுமோர்தி
யணவுறுமஃதெற்றென்றுவினவற்கவரசரேறே. (ஙo)

ஓர்தல் - ஆராய்தல்.

ஊர்ப்புறமரசர்முன்னோருடங்குறவிறுத்தவேதச்
சீர்ப்புகழ்க்குசேலனென்பான் சேய்மையேநகரநோக்கித்
தார்ப்பொலிமார்பக்கண்ணன்றன்னருள்வலியாலின்னும்
பார்ப்பனபலவுண்டென்னப்படர்ந்தனனாகிச்சென்று. (௩௧)

பெருமதில்வாயிலெய்தப்பிறங்குமந்நகரத்துள்ளா
ரருமைசால்களிப்புப்பொங்கவமைந்தகையுறைகளோடுந்
திருமலிமங்கலங்கள்சிறப்புறவேந்திக்காரும்
வெருவுபல்லியமியம்பவிணைந்தெதிர்கொள்ளவந்தார். (௩௨)

கையுறைகள் - காணிக்கைகள், பல்லியம் - வாத்தியம்.

வாழ்ந்தனம்வாழ்ந்தேமென்னுமலர்முகங்கொடுமண்டோயத்
தாழ்ந்தனர்தேர்மேல்வந்தசாந்தனையந்தகாரம்
போழ்ந்தொளிர்சிவிகையேற்றிப்பொலங்குடைநீழல்செய்ய
வாழ்ந்தவன்புடையராகியமைதரக்கொண்டுசெல்வார். (௩௩)

சிவிகை - பல்லக்கு.

பல்லியமியம்பச்சில்லோர்பைம்பொற்காற்கவரிவீசச்
சில்லியந்தடந்தேர்முற்பல்சேனையுமிடைந்துசூழ
நல்லியன்மங்கலங்கணான்மறையவர்கள்பாட
வல்லியங்கமலக்கண்ணற்கன்புளான்வீதிசார்ந்தான். (௩௪)

இருபுறத்துள்ளமாடத்திலங்குசாளரங்கடோறு
மருவுறவதனம்வைத்துமங்கைமார்மகிழ்ந்துநோக்கிப்
பொருவிலிம்மறையோன்செய்தபுண்ணியமெற்றோவிந்த
விருமைசால்சிறப்பையுற்றானென்றுபற்பலசொல்வாரால். (௩௫)

கிள்ளுபுபற்றுதற்குங்கெழுமுறுதசையிலாமெய்
யெள்ளுபுகழிக்குங்கீறலியைபழங்கந்தையென்றுங்
கொள்ளுபுதிரிவோனம்மாகுனிசிலைமாரனைப்புந்
தள்ளுபுபழிக்குமெய்யன்சார்ந்தனன்பாரீரென்பார். (௩௬)

கந்தமூலம்புசித்துங்கான்முதலிடம்வதிந்தும்
பந்தமதொழித்துஞ்சாலப்பண்ணுவர்தவம்பல்லோர்க
டந்துநேரோசிமருங்குற்றாமவார்கருங்குழாலே
யிந்தமாமறையோன்றன்பேறியாவரேபெற்றாரென்பார். (௩௭)

தந்து - நூலிழை, தாமம் - பூமாலை.

அருமைசாலறம்விருத்தியாகுகவென்றுமென்று
பெருமறைமுழங்குமன்றேபேரறம்பற்பனூ

மொருமையன்பினிலுஞற்றிவந்தனனுதன்விருத்தி
யிருமையிச்செல்வங்கண்டீரின்னுமென்பெறுமோவென்பார். (௩௮)

உஞற்றுதல் - செய்தல்.

ஏவரெவ்வுயிரிடத்துமிலங்கருள்செலுத்திநிற்போர்
தேவரினுயர்ந்தோரன்னோரெனமறைசெப்புமாற்றான்
மூவரும்புகழ்க்குசேலன்மூதறிவுடைமைக்கிந்தப்
பூவருமுயர்வோவின்னும்பொலிவுவேறுண்டாமென்பார். (௩௯)

மனமொழிகாயமென்னவகுத்திடுகரணமூன்றுங்
கனம்விளர்ப்பெனக்கறுத்தகண்ணன்றனடிக்கேயாக்கித்
தினமுநன்னெறியினிற்குஞ்செயிரிலாச்சீர்த்தியாளிப்
பனவனுக்கிதுவோசெல்வம்பகரிதினுமுண்டென்பார். (௪0)

கனம் - மேகம், செயிர் - குற்றம்.

புயனிகர்வண்ணத்தண்ணல்பொருவிலம்போருகக்க
ணயனுறச்செல்லுமாறேநற்றிருமகளுஞ்செல்வாள்
பயனுறிப்பனவன்மேலப்பார்வைமிக்காயிற்றந்தச்
செயலினுக்கேற்குமாறத்திருவும்வந்துற்றாளென்பார். (௪௧)

புயல் - மேகம், அம்போருகம் - தாமரை.

பைத்தகானகம்வதிந்தும்பருப்பதக்குகைவதிந்து
மெத்துணைநற்றவங்களியற்றிநன்குயர்ந்தாரேனுந்
தத்துநீருடையண்ணலுஞ்தன்மைவந்துற்றதாகின்
மெத்தியமனத்தராகிவிரும்பிடார்யாவரென்பார். (௪௨)

குமைத்தபற்றிகந்தாரேனுங்கடவுளாற்கொடுக்கப்பட்ட
தமைத்திடுநன்றேயாகவல்லதுதீங்கேயாக
விமைத்திடுமளவேயாகவெக்காலுமாகவின்றேன்
சமைத்தமென்மொழியீர்சற்றுந்தள்ளுவாருளரோவென்பார்.

கரிசறுமனைவிபல்கால்வேண்டிடக்கண்ணன்பாற்சென்
றுரியவன்போடுந்தன்னாலுதவியதளித்துக்கண்டு
வரிசைகண்மிதப்பப்பெற்றுவளர்பெருந்திருவும்பெற்றிப்
பரிசுவந்தனனம்போல்வார்பாக்கியமனையானென்பார். (௪௪)

சான்றவர்திருவுற்றாலுந்தகுதியின்மிடியுற்றாலு
மான்றதந்நீர்மைகுன்றாரடல்வலிச்சனகனென்பா
னேன்றசெந்தண்மைவெம்மையிடைச்சமங்கொண்டாற்போலத்
தோன்றுவர்மயக்கம்பூணார்துடியிடைமடவீரென்பார். (௪௫)

துடி - உடுக்கை.

பற்றறத்துறந்தோனுக்கிப்படர்பெருந்திருவுமற்றை
முற்றிழையவர்முயக்குநன்றுகொலென்பார்முன்னர்
நற்றவச்சிவனனென்பானயந்தருமிளமைவாய்த்துப்
பொற்றொடிப்போகம்பன்னாட்புரிந்திருந்திலனேயென்பார். (௪௬)

முயக்கு - புணர்ச்சி.

### கோச்சகக்கலிப்பா.

என்றுரைத்தசுகமுனிவனிணையடித்தாமரைவணங்கித்
துன்றலர்த்தார்துயல்வருதிண்டோள்வேந்தன்சிவனனெனு
மின்றவத்தன்யாரிளமையெங்ஙனமடைந்தான்மடவாண்
மன்றலுற்றதெவ்வாறுவகுத்துரைத்தியெனவுரைப்பான். (௪௭)

பேருலகுகொண்டாடும்பிருகுவெனும்பெருந்தவத்தோன்
சீருறுநற்றிருமைந்தன்சிவனனெனும்பெயருடையான்
ருருருவப்பூண்மார்பாதயங்கிமயகிரிப்பாலோர்
வாருலவைப்பூங்கானம்வதிந்துதவம்புரிந்தனனே. (௪௮)

உலவை - தழை.

பற்பலநாளிருக்கையெழாப்பரிசிருந்துதவம்புரியும்
பொற்புறுமாதவனுடம்பைப்புற்றுமூடியததன்மேற்
கற்புமுதற்கொடிபடர்ந்துகாமருபல்லரும்பீன்று
சொற்பெறுமாமலர்பரப்பித்துதைந்தனவாலந்நாளில். (௪௯)

கற்பு - முல்லை.

நையாதிவ்வுலகுயிர்க்கணுடோறுமருள்சுரப்போன்
பொய்யாதிகடிந்ததவப்புனிதரடிமுடிக்கொள்வோன்
மெய்யாதிநற்குணங்கள்விரும்பியடைதரப்பொலிவோன்
சையாதியெனுநாமந்தரித்தவொருதார்வேந்தன். (௫௦)

அன்னவன்றன்மகள்வானத்தணங்கினர்க்குமணங்கனையாள்
கொன்னவில்வேல்விழியினள்கோதறுதேமொழியினு
டன்னுநறுங்குழலினள்சுகன்னியெனும்பெயருடையாண்
மன்னுசிலதியரொடும்பூக்கொய்வானவ்வனம்வந்தாள். (௫௧)

பாங்கியர்கடற்சூழப்பாங்கெங்குந்தவமலர்ந்த
பூங்கொம்பர்போனடந்துபொலிவினைப்பன்மலர்கொய்வா
டேங்குறவெள்ளைப்பூத்துத்திகழ்முல்லைசூழப்பட்
டாங்குயர்வன்மீகங்கண்டார்வத்தின்வந்தடுத்தாள். (௫௨)

வன்மீகம் - புற்று.

மாதர்நறுங்கொடிபடர்வன்மீகத்துள்ளிருப்பதுதான்
யாததனையறிவாமென்றில்லிவழிநோக்குதலுந்
தீதகனற்றவப்பெரியோன்செய்யவிழிதோன்றவிறும்
பூதுடையளாகியிதுபொன்வண்டோவெனநினைந்து. (௫௩)

இல்லி - துவாரம்.

ஒருசிறியதிரணமெடுத்துறச்சுலவிச்சூன்றிடலு
மருவுபெறுந்தவயோகங்கழிதரவிம்மணிப்புற்றி
னருகுறவந்தியாரிதுசெய்தாரறிவலெனப்பார்த்தான்
கருநறுமென்குழலாளைக்கண்ணுற்றான்மாதவனே. (௫௪)

சூன்றிடல் - தோண்டல்.

தாமரையில்வாழுமொருமாதயலோவயிராணி
மாமகளோவிரதியோமற்றிவளென்றுளநினைந்தான்
காமனுமாங்கஃதறிந்துகழைக்குழைத்துநாண்பூட்டித்
தேமலர்வாளிகள்பலவுஞ்சிந்தினன்மேன்மேலும். (௫௫)

கழை - கரும்பு.

பொங்கியெழுபெருங்காமப்புலிங்கத்தீக்கொழுந்தோடி
மங்குதலிலாதழற்றவாற்றானுய்மாதவத்தோன்
றங்கியபுற்றுச்சிதர்ந்துதனைவீழக்கரநீட்டிக்
கொங்கலர்மென்குழன்மடவாள்கோற்றொடிக்கைபற்றினன். (௫௬)

புலிங்கம் - தீப்பொறி, சிதர்தல் - வெடித்தல்.

வெருக்கொண்டுபதைபதைத்துவிதிர்த்துதறிக்கரம்பறித்துக்
குருக்கொண்டசிலம்பலம்பக்கோலவளையும்புலம்பத்
தருக்கென்றுமவிந்தவிடைத்தயங்குமேகலையரற்றப்
பொருக்கென்றுபாங்கியர்பாற்போய்விழுந்தாள்பொற்கொடியே. (௫௭)

வெருக்கொண்டு - பயந்து, விதிர்த்தல் - நடுங்குதல்.

வாய்புலர்ந்துகண்சாம்பிமயங்கினள்செயனோக்கிப்
பாயவனத்தென்கண்டோபயந்தாண்மற்றிவளென்று
தேயுமிடைப்பாங்கியர்கள்சிவிறியால்வீசியுடற்
றோய்புழுதிதுடைத்துமிகவுபசரிப்பத்துயர்தீர்ந்தாள். (௫௮)

புலர்தல் - வறளல்.

அன்னபொழுதடற்பரியூர்ந்தரசன்சையாதியென்பான்
பொன்னனையமனைவியர்நாலாயிரவர்புடைசூழ
மின்னவிரப்பூஞ்சோலைவினோதநிமித்தமதாகத்
துன்னினன்பரியிழிந்துசூழும்வளப்பார்த்துவப்பான். (௫௯)

மன்புற்றினின் றுவெளிவந் துநின்றான் றனைக்காணூஉ
வன்புற்றுக்கொண்டாடியடிபணிந்தானுருநோக்கி
யின்புற்றவிழியிடைநீர்வாரவிதுசெய்தவரெவ்
வன்புற்றமனத்தரெனவனமுழுதுமாராய்வான். (சுo)

இலகுபெரும்பாங்கியரோடிருந்தமகடனைக்கண்டா
னலகிறவமுனிக்கிடுக்கணார்செய்தீரெனக்கேட்டான்
சிலதியர்யாஞ்செய்திலோமென்றெழிந்தார்செய்தமக
ணிலவுறவந்தடிவணங்கிநிகழ்ந்தனவெலாமுரைப்ப. (சுக)

என்செய்தாய்பேதாயென்றிரங்கிவிரைந்தாங்கெய்தி
மன்செய்தமுனிவனடிவணங்கியடியேன்புதல்வி
புன்செய்கைதனைப்பொறுக்கவேண்டுமெனப்புகன்றிரப்ப
நன்செய்கையுன்செய்கையென்றுநவில்வான்முனிவன். (சுஉ)

இப்பொழுதேயுன்மகளையெழின்மன்றன்முடித்தெனக்குத்
தப்பறநீதருவாயேற்பொறுத்திடுவன்றாராயேல்
வெப்புறுமென்சாபத்தால்வீடுநின்குலமென்று
ஞெப்பில்புகழ்மன்னவனுமுடன்பட்டான்மகட்கொடைக்கு. (சுங)
மன்றல்-விவாகம், வீடுதல்-அழிதல், மகட்கொடைக்கு-மகளைக்கொடுத்தற்கு.

அணிமுடங்கறிசைதிசையுய்த்தியாவரையும்வரவழைத்துத்
தணிவின்மகிழ்தலைசிறப்பத்தழன்முன்னர்விதிப்படியே
கணிதமில்வண்புகழ்மன்னன்கலியாணவினைமுடித்து
மணிநகைவாய்ப்பசுங்கொடியையமாதவன்கைக்கொடுத்தனனே. (சுச)
முடங்கல் - ஓலை.

சீலமிகுசிவனனெனுந்திருமுனிவன்சுகனியெனுங்
கோலமடவரற்கூடிக்கொடுந்துயர்நீத்துளங்களித்தா
னேலநறுங்குழன்மாதுமிருங்கற்பிற்சிறந்தனளாய்ச்
சாலவுமெய்ப்பணியெவையுந்தலைக்கொண்டுவாழ்ந்திடுநாள். (சுரு)

ஆன்றசிறப்பவ்வனத்திலசுவினிதேவர்களொருநாட்
டோன்றினர்களெதிர்நிற்குஞ்சுகனிதிருவுருக்கண்டு
மான்றவுளத்தினராகிமாரவேள்கணைக்கிலக்கா
யூன்றுபெருங்காமத்தினுள்ளுடைந்துமொழிவாரால். (சுசு)
மான்ற - மயங்கின, மாரவேள் - மன்மதன்.

கற்பகத்தின்பூங்கொம்பேகாமருபூம்பசுங்கொடியே
பொற்பவிருமதிக்கொழுந்தேபொலியிரதச்செங்கரும்பே

சொற்பெறுமிற்பெறுதந்தையாவன்மணித்தூமுறுவல்
விற்புருவப்பைங்கிளிநின்பெயர்யாதுவிளம்புவையால். (கூஎ)

மணி - முத்து.

அமரருடற்பிணிதவிர்க்குமசுவினிதேவர்கள்யாங்கள்
சமரமிகுவேளாற்றறவிர்த்தெதமையாளென்றிரப்பத்
தமரமிகுகருங்கழற்காற்றரியலர்கூற்றெனப்பொலிவேற்
பமரமிகுதார்ப்பெருமான்பாராள்சையாதிமகள். (கூஅ)

தமரம் - ஒலி, தரியலர் - பகைவர், பமரம் - வண்டு.

என்பெயர்யாதெனிற்சுகனியிருந்தவத்துமேலானுய்
மன்பெறுமாமுனிசிவனன்மனைக்கிழத்தியாதலினுற்
கொன்பெறுநும்முளத்தெண்ணங்கூடாதிவ்வாறுகினோந்
தென்பெறவல்லீர்போமென்றெடுத்தெறிந்துபேசினளால். (கூகூ)

புறவடிநோக்குபுமொழிந்தபொன்னனையாள்சொற்கேளா
விறவுளதன்மையராகியெழிற்பொலிவுமிகவாய்த்த
வறவடிவத்தெம்போகம்போலநரைதிரையமைந்த
துறவிதரும்போகமோசுகன்னிக்குத்தக்கதே. (எ0)

இறவு - இறத்தல்.

மலர்பொதுளித்தீர்த்தத்துன்மகிழ்நனும்யாமும்படியிற்
குலவுவனப்புறவாய்த்துக்குலையாதவிளமையொடு
நிலவுவமவ்வுருமூன்றினினக்கியைந்தசீருருவைத்
திலதநுதன்மடமாதேசேர்ந்துதழுவிக்கோடி. (எக)

பொதுளி - தழைத்து.

என்றுரைத்தவார்த்தைதனக்கிலவவாய்நெகிழாளாய்ச்
சென்றுமகிழ்நனுக்குரைப்பத்திரைநரைமூப்பிவையாலே
துன்றியெழுவருத்தமிறத்தொலையாதவிளமைபெற
னன்றியலுங்காரியமென்றுளத்தோர்ந்தானற்றவனும். (எஉ)

மங்கைதிருமுகநோக்கிமற்றவர்சொற்குடம்படெனப்
பங்கமறுதவன்மனையைமுன்போக்கிப்பின்படர்ந்தா
னங்கவருமகிழ்ந்துமுனிவரனொடுமத்தடம்படிந்து
பொங்குமிளமையும்வனப்பும்பொலிவுற்றூர்வெளிவந்தார். (எந)

செங்கதிரோனுதயமெனத்திகழ்மூவருருநோக்கி
மங்கையர்சூளாமணிதான்வடிவுறுதொழுதரவென்
பொங்கியல்கற்பினுக்கென்னுப்பொருக்கெனத்தன்மகிழ்நனுரங்
கொங்கைகளுமுறக்குறத்தழுவிக்கொண்டுமகிழ்கூர்ந்தனளே. (எச)

மாதவனுங்களிகூர்ந்துமனஞ்சமழ்ப்பமுகஞ்சாம்பிப்
போதவனர்க்கடலழுந்தும்புலவரிருவரைநோக்கி
மேதகையீர்மூப்பகன்றுவிரும்பிளமைபெறப்புரிந்த
வேதமினல்லுதவியைநானென்றுமறவேனென்றான். (௭௫)

புலவர் - அசுவினிதேவர்.

அருள்செய்மகமொன்றியற்றியவிப்பாகம்பகிர்ந்தளித்துப்
பொருள்செயவர்மனமகிழப்பொலிவித்துப்போக்கியபின்
றெருள்செயுளமுனிவேந்தன்சீர்வேந்தன்பயந்தவிருண்
மருள்செய்குழலொடுகூடிவாழ்ந்திருந்தானதுநிற்க. (௭௬)

மாதர்பலரிவ்வாறுவகுத்துரைப்பமணிச்சிவிகை
மீதுபுரந்தரனுலவும்விழவுமிகச்சமழ்ப்படைய
வாதரவிற்பல்லோருமகமகிழ்ச்சியுறச்சென்று
தாதவிழ்தாமரைமார்பன்றன்மனைவாயிலையடைந்தான். (௭௭)

புரந்தரன் - இந்திரன்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாயிலையடைந்தமறைக்குலத்தலைவன்மாமணியானநின்றிழிந்து
மேயதன்முன்னர்க்கந்தைபோற்றுவாரமிக்கசிற்றிலைக்குடிநிரிந்து
தூயசெம்பொன்னாலமைத்திடப்பட்டசுடர்ப்பெருமாளிகையாகிப்
பாயபல்வளனுநிறைதரப்பொலியும்பண்பினைநோக்கினனின்றான்.

யானம் - பல்லக்கு.

மனைக்குரிமரபிற்றனக்கிணையில்லாமடநடைக்கற்புடையாட்டி, க
னைக்குமொண்முகிலைக்கிழித்தெழுசெங்கேழ்க்கதிரெனக்கவின்குடி யி
ருந்த, நனைக்குழலணிசெம்மணித்தகட்டணியுநாடுமிந்திரவிலம்மங்கு,
றனைக்குழுமுற்றுச்சூழ்ந்தெனப் பலவீத் தண்ணறுந்தொடையலும்
பொலிய. (௭௯)

நனை - பூவரும்பு, வீ - மலர், தொடையல் - மாலை.

அம்முகினின்றுவழுக்கியோர்மின்னலவிர்பிறை மேற்கிடந்தாங்
குத், தெம்முனைமழுங்க வளையும்விற்புருவச்செம்பொன்செய் பட்ட
முங்கதிர்கள், விம்முமப்பிறையினுரோகணியுள்வாய்வீற்றிருந்தெனவி
யன் கற்றை, பம்முமொள்வயிரப்பொட்டுமெற்றணிந்தபல்கதிர்ப் பணிக
ளும்விளங்க. (௮௰)

இலவிதழுள்வாய்க்கற்பினதரும்பையிணைத்தெனவாயகத்திணைந்து
நிலவுபல்லழகைக்காணநிற்பதுபோனிற்குமூக்கணிப்பருமுத்து
மலரிதழ்ச்செந்தாமரைகொலிம்முகமென்றறிதரக்கதிரண்டிருபாற்
குலவவுற்றிருந்தாலெனச்செவியணிந்தகுருமணியோலையும்பொலிய.

**கற்பு - முல்லை.**

வலம்புரிக்கழுத்தைக்கண்டமென்றடுத்தமாதருஞ்சொலாவகை
மறைத்த, நலம்புரிபதக்கங்கோத்தபன்மணிச்சின்னல்லணிகளுமெ
ழில்வாய்த்த, பொலங்கெழுகுவட்டிற்பன்னிறவருவிபொலிந்தெனக்
கொங்கைமேற்றதும்பு, மிலங்குவெண்டரளம்பவளமாணிக்கமெரி
பொன்மாலையுநனியொளிர. (அ௨)

தோளடிநிலையிலரதநத்தொடியுஞ்சுடர்தருமுன்கைவெள்வளையும்
வாளவிர்வயிரகடகமுஞ்செம்பொனிடைக்கிடைவைத்தசெந்துப்பு
நீள்சுடர்த்தொடருமமைந்தசூடகமுநிரைவிரலுறுமெழுகதிரை
யாள்சுடர்மணிவைத்திழைத்தவாழிகளுமந்தகாரங்குடியோட்ட.

பெருவிலைச்செம்பட்டுடுத்தியவிடையிற்கவ்வியவொட்டியாண
மும்பே, ருருவவெண்கோவைக்காஞ்சியுஞ்செங்கேழுமிழெழுகோ
வைமேகலையும், பொருவறுமீரெட்டிரட்டியகோவைபுரிகலாபமும்
விரிசிகையு, மருவுசெம்பரிதிமின்மினியாகவழங்கொளிதிசையெலா
ம்போர்ப்ப. (அ௪)

காஞ்சி, மேகலை,கலாபம், விரிசிகை இவை அரைப்பட்டிகையின் பேதங்கள்.

காலணிசெம்பொற்சதங்கையநதொடருங்கதிர்பரிசித்தண்டை
யுஞ்சிலம்புஞ், சாலவுமொளிர்ந்துகலின்கலியென்னத்தழைந்தபூங்க
ற்பகக்கொம்ப, ராலெனநடந்துமங்கலமேந்தியளவறுபாங்கியராய,
கோலமாமடவார்சூழ்ந்தனர்நடப்பக்கொழுநனையெதிர்கொள்வான்
வந்தாள். (அ௫)

வந்தனைபுரிந்துபைப்பொனுதனத்தின்பமிழ்நனை நிறுத்தியுண்ம
கிழ்ந்து. சந்தமென்மடவார்செம்மணிச்சிரகத்தண்புனல்வாக்கிடத்
தன்பொற், செந்தளிர்க்கரத்தாற்றிருவடிவிளக்கிச்சிறந்தவெண்பட்
டினலொற்றிக், கந்தநல்வருக்கம்பூசிமென்பலராற்கட்டியமாலையுஞ்
சாத்தி. (அ௬)

சிரகம் - கெண்டிகை.

விரைகெழுதாமந்தவழ்தரக்கோட்டிமிளிர்தரு விளக்கமுங்காட்
டிக், கரையில்பன்மணிநீராஞ்சனம்வலைத்துக்கடிதிருபாலினுமெறிந்
து, புரையில்கற்புடையாள்வணங்கினளிற்பட்டியலெனப்பல்லியங்
குளிற, வரையெனப்பணைத்துக்கதிரொளிமழுக்குமாளிகைக்கெழுந்
தருளினனே. (அ௭)

நீராஞ்சனம் - கற்பூரவாலத்தி. குளிர - ஒலிக்க.

இரசிதக்குவையுங்காஞ்சனக்குவையுமிலகுறுசெம்மணிக்குவையுந்
தரளவெண்குவையும்வச்சிரக்குவையுஞ்சாற்றருமரகதக்குவையும்

பாவியகிரணச்செந்துகிர்க்குவையும்பாயமேதகப்பெருங்குவையு
மரதகவகையின்மற்றுளகுவையுமறைதொறுங்கிடப்பனகண்டான்.

காஞ்சனம்-பொன். மரகதம்-பச்சை. துகிர்-பவளம். மேதகம் - கோமேதகம்.

பொற்கலப்பேழைமணிக்கலப்பேழைபுனையில்வெண்பொற்க
லப்பேழை, விற்படுவிசேடக்கலனிறைபேழைமேவியவிருபத்தேழ்
மகாரு, மற்புறவணியத்தனித்தனிவகுத்தவணிகலப்பேழைபன்னி
றத்த,சொற்பெறுவிலைப்பட்டடுக்கியபேழைதொகையிலாதிருப்பன
கண்டான். (அகூ)

குருமலர்செம்பொற்கலமெதிர்வைத்துக்கோதறுவெள்ளியமூரல்
பருகுதற்கமைந்தவின்சுவைக்குழம்புப்பால்விராயுபசரித்தூட்டத்
திருகுபுவேண்டாவென்மருமதனைத்திருமிப்பாராதுசெல்குநரு
மருகியபசியுமில்லையென்மருமாயணிபகார்செருக்குதல்கண்டான்.

மூரல் - சோறு.

வயிரவொண்சுட்டிநுதன்மிசைப்பொலியமார்பிடையைம்ப
டைவிளங்கக்,கயில்செறிதொடருங்கடகமுங்கரத்திற்காதிலம்பொற்
குழைதயங்கச், செயிரறுபொன்ஞாணரைமிசைக்கதிர்ப்பச்சிறுசிலம்
படிகளிற்கவினப், பயிறருமைந்தர்கலகலகலெனப்பண்பினின்றாடுத
ல்கண்டான். (கூக)

ஐம்படை - சங்கு, சக்கரம், கதை, வில், வாள்.

தளவரும்பனையகரிசில்வாளரியுந்தயங்குசெம்பொன்னிறப்பருப்பும்
வளமிகுகுறையாக்கறிகளுங்குறைத்தமாண்கறிக்குப்பையுமற்றைக்
கிளர்தருமுபகரணங்களுமுலோகமேழினுங்கெழூஉறச்செய்த
பளகறுகலங்கள்பல்லவுபடுமிற்பரப்பெலாம்பொலிவனகண்டான்.

தளவரும்பு - முல்லையரும்பு. அரி - அரிசி.

கலிநிலைத்துறை.

களையில்பல்வளனுசென்றுளாய்நோக்குபக்காலைப்
புளையில்கற்புடைமனைவியார்விரையமுன்போந்து
விரைநறுஞ்செழுந்தயிலக்காப்பிடுபெனுள்விரும்ப
வுளைசிறந்திடுநானஞ்செய்தருளுமென்றுரைப்ப. (கூங)

தயிலக்காப்பு - அப்பியங்கனம்.

அங்கொராதனமிட்டனளொருத்திவந்ததன்மேற்
றுங்கமாமறைத்தலைமையோனிருந்தனன்றுனேந்தோர்
மங்கைபொன்செய்தவள்ளத்துத்தைலமுன்வைத்தாள்
செங்கைபற்றியோர்நங்கைபொன்சிவிறியைவீச. (கூச)

வள்ளம் - கிண்ணம்.

மாந்தளிர்க்கரத்தநறுந்தயிலத்தைவாக்கிப்
பூந்தடங்கணோர்மடக்கொடிசென்னியிற்பூசி
வாய்ந்தவங்கத்துமப்பினள்வயங்குபாசனங்க
ளாய்ந்தநீர்நிறையாடிடம்புகுந்தனனம்மா. (௯௫)

பாசனங்கள் - பாத்திரங்கள்.

ஆங்குமாதர்கள்குழுமிநெய்யகற்றிவெப்படுநீர்
பாங்கின்வாக்கிடமூழ்கிமெய்யீரமும்பாற்றி
யோங்குவேறுடையுடீஇநியதிக்கடனுவகை
தேங்குமாமுடித்தனன்புகுந்தனனுண்ணுந்தேத்து. (௯௬)

உண்ணுந்தேத்து - உண்ணுமிடத்தில்,

இந்திரன்றிசைநோக்கினனாயுவந்திருந்தா
னந்தரம்பையம்பேரிருபாசிலைநயக்க
முந்தரிந்தவாய்வலம்படமுன்புபோகட்டார்
சிந்தையன்பொடுகரகநீர்புரோக்கித்துத்திருத்தி. (௯௭)

அரம்பை -வாழை. பாசிலை - பசியஇலை.

நிலவுமெய்ப்பணிமாதரரெடுத்துக்கைநீட்டக்
கலவமாமயிற்சாயலங்கற்புடையனையாள்
குலவுதன்கையாற்குய்கமழ்கருனைநல்வறையல்
பலவுமின்புளிவிரவிடாப்பாயதீங்கறியும். (௯௮)

குய் - தாளிப்பு. கருனை - பொறிக்கறி. வறையல் - வற்றல்.

அறையைநேர்ததியையவியளாவியகறியு
முறையின்முற்றவேவாதடமுதிர்சுவைக்கறியுங்
குறைவில்புன்னிலப்பயறொடுகூட்டியகறியு
நிறையுநெய்ப்பசையறுநிகரறுபுளிங்கறியும். (௯௯)

அறை - பாறைக்கல், ததி - தயிர். ஐயவி - கடுகு.

கதிக்குமற்றையகறிகளுமூறியகாயு
முதிக்குநோலையுமடையுமற்றுள்ளசிற்றுணவும்
விதிக்குஞ்சித்திரவனங்களுமேவுபாளிதமும்
பதிக்குமன்பொடுபேரிலைபுதைபடப்படைத்து. (௧௦௦)

முல்லைவீயினைநிகர்தருமூரலும்படைத்து
வல்லபொன்னிறப்பருப்படுதிரளையும்வைத்து
நல்லவானநெய்க்குடங்கவிழ்த்திவ்வகைநயப்ப
வெல்லையின்மறையவர்க்குமைந்தருக்கும்பாங்கியற்றி. (௧௦௧)

உவந்துமுன்னர்நின்றுண்கமாவென்றுபசரிப்பத்
தவந்தழைத்தமாமறையவன்றகுவனவுண்ணா

விவர்ந்தவாசையின்விலாப்புடைவீங்கவுண்டெழுந்த
நிவந்தவேதியர்குழாத்தொடுமெழுந்தவணீந்தி. (௧௦௨)

வளங்கொணீரில்வாய்பூசினனியதியின்வகையுங்
களங்கமின்மறையவரொடுமியற்றினன்கந்தந்
தளங்கொள்பூந்தொடைவிளைகெழுபாகடைதாங்கி
விளங்குமன்னர்முன்யாவர்க்குமிவ்வகைவிருப்பி. (௧௦௩)

விருந்துசெய்தனன்சாந்தம்பூப்பாகுவெள்ளிலையுந்
திருந்தநல்கினனவரவரிடப்புகச்செலுத்திப்
பொருந்துமிவ்வகைப்போகத்திற்சிற்சிறுள்போகக்
கருந்துழாய்கமழ்சேவடிகபழ்தருமுளத்தான். (௧௦௪)

ஒருதினத்தினிலுவளகவரைப்பிணையுற்றுக்
கருதுமக்களுமனைவியுமுறுவசைகழிப்பி
யிருகவாடத்தைநூக்குபுதாழக்கோலிறுக்கி
மருவொருத்தனுயிருந்தனனின்னனவலிப்பான். (௧௦௫)

கழிப்பி - ஒழித்து. கவாடம் - கதவு. நூக்குபு - சாத்தி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இம்மைதனின்மற்றிருப்பொருளையீட்டல்காத்தலிழத்தலென
வெம்மைபுரிமூவகைத்துயரும்விளையாநிற்கும்பாவத்தா
லம்மைநிரயத்துயருமுறுமந்தோசீசீயிப்பொருளைச்
செம்மையுடையோர்வேண்டுமெனச்சிந்தித்திடுவரோமறந்தும்.

ஊழின்வலியாற்பெருஞ்செல்வமுறினுங்காலமுண்டாக
வாழுங்கருத்தராய்த்துணிவுற்றடங்கத்துறப்பரறிவுடையோர்
தாழுமனர்போயொழிதலன்றித்தகுமிம்மையிற்கரணமூன்றும்
வாழியிலக்கிற்சிதறுமைமருவப்பெறும்பேரின்பத்தால். (௧௦௭)

அனர் - துன்பம்.

உடன்முற்பொறிகடபக்குரியவூறுமுதலைப்புலங்களையு
மடனற்றெழிலப்புலனிமித்தபாகப்படைத்தவனைத்தினையும்
விடன்மிக்கதுவாலெவற்றினுக்கும்விருப்பிற்சிலவுள்ளனவேனும்
படருமனமற்றவ்வழியேபயக்குமளவில்பவத்தொடர்ச்சி. (௧௦௮)

ஊறு - பரிசம்.

பருவந்திடச்செய்பவத்தொடர்ச்சிபாற்றத்துணிந்தபண்பினர்க்கு
மருவிந்திரியவுணர்விறெடும்வழங்கும்பிராணவாயுவொடு
மொருவில்காமவினைவிளைவிரோடுங்கூடுமனவுடம்பு
முருவவுடம்புமிகையாறுற்றொடர்ப்பாடின்னுமுளவேகொல். (௧௦௯)

பருவந்திட - துன்பமடைய. பாற்ற - ஒழிக்க.

தானல்லுடலையானென்றுந்தன்னோடுரிமையல்லாமை
யீனமுறுபல்பொருளனைத்துமென்னதென்றுமுரனைத்து
மானவயர்பற்றினுக்கேதுமயக்கமதனைமாய்ப்பவனே
வானவருஞ்செல்லருமுலகம்புகுவானென்னுமறைநூல்கள். (கக0)

பற்றலாகாவிருவேறுபற்றையிறுகப்பற்றினரைப்
பற்றலாகாதெனவுணர்கள்பரிந்துகண்ணோட்டஞ்செயுமே
பற்றெல்லாமறத்துறந்தபண்பினோரேதலைப்பட்டார்
பற்றுடையாரெஞ்ஞான்றுங்காண்பார்நிலையில்பல்லவையும்.

பொருணிறைவுமிருபயனும்பொய்யாதனுகுமறுபிறப்பு
மருவுமுயலின்கோடாமையயிர்க்கப்பலம்விண்மலரெனுநா
லொருவுமதியற்றுறப்பற்றலுறுமஞ்ஞானம்விபரீத
மிருவும்பிறப்பிலெஞ்ஞான்றுமதனொழிதலின்பமே. (கக௨)

பகருந்தெய்வமம்மைவினைப்பயனுண்டோவின்றேவென்னும்
புகர்கொண்டிடுசங்கையினீங்கிப்பொலியுஞானவனுபவத்தா
னிகரிலுண்மையறிந்திடுதனீளுந்தொறுமவ்வனுபவமுற்
றிகவில்பழையவுலகவாசாரஞானமிரிந்திடுமே. (ககங)

சங்கை-ஐயம். புகர்-குற்றம்.

முதல்வெம்பவத்துக்கெனுமடமைமுற்றுமொழியச்செம்பொருளைச்
சுதமென்பதறினைத்தலேதூயசமாதியென்பாரவ்
விதநின்றிடிற்பன்னாளுடலைவிடுங்கால்வேறெண்கலவாது
மதமொன்றுறவேறெண்கலப்பின்வருமேயதற்குத்தகுபிறப்பு.

சுதம் - நழுவுதல்.

அன்றேயுள்ளவவித்தையெனலஞ்ஞானம்பல்விதமதித்தியா
னென்றேயெழுதலகங்காரமிதுவேண்டுவதென்றெழுதல்வா
சென்றேயதுபற்றுதலாசைமறுப்பிற்சேறல்சினமைந்து
நின்றேகிடநோயொழியுமெனநிகழ்த்தாநிற்குநிரம்பியநூல். (ககரு)

எல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுமெழுமைப்பவமுமீன்றிடும்வித்
தொல்லாவவாவேயப்பவத்தினுறுதுன்பறிந்தோனுதியாமை
யல்லான்மற்றும்வேண்டுமோவேண்டாநலவ்வுதியாமை [ம்.
சொல்லார்ந்திலங்கும்வேண்டாமைதன்னைவேண்டத்துனைவின்வரு

துனைவு - விரைவு.

அன்னோவன்னோவேண்டாமையன்னமேன்மைப்பெருஞ்செல்வ
மென்னோகாணப்படுமீண்டுமின்றுகேட்கப்படுஞ்சிறப்பின்
மின்னூராண்டுமஃதொப்பதின்றேலெனினவ்விழுச்செல்வந்
தன்னுதாவிற்பெறுவார்க்குச்சாற்றுமுவமையுளதேகொல். (ககஎ)

அற்றானென்றுசொலப்படுவானுனையற்றானொருவனே
மற்றாதரவினஃதொன்றும்வைத்தப்பிறவேதுக்களெலாஞ்
செற்றானெனினுமவையார்க்குஞ்செயிர்த்துன்பகன்றானேயன்றி
யுற்றார்வணங்குமவன்போலவொழிந்தான்கொல்லோவுறுபிறவி.

மெய்ம்மையுணர்தன்முடிவாகவேண்டுங்கருவியெலாம்பெற்றுச்
செய்யமுத்தியடைவதற்குச்சிறந்துளோனைமறவிவழிப்
பையநுழைந்துபவமீட்டும்பாய்த்திக்கெடுக்கவல்லதவா
வையவதனுக்குளநடுங்கியஞ்சிக்காத்தலறிஞர்தொழில். (கககூ)

ஆதலாலிம்மனைவாழ்க்கையகததேயிருந்துமுத்திதனைப்
போதவடையத்துணிவதுதான்புணையாமஞ்சுதுயில்பொருப்பைக்
காதன்மிகுநியாற்பெயர்த்துக்கத்துந்தரங்கக்கடலிடையிட்
டேதமகலவதுபற்றியொருவனகரையேறுதல்போலும். (கஉ0)

மஞ்சு - மேகம் பொருப்பு - மலை

மனையிற்பெருஞ்செல்வத்துறைவோன்பருவுதியானமுறச்சிறிது
நினையிற்காணவருவானைநேர்சென்றழைத்துத்தழுவிடவும்
வினையத்திறும்விருந்தைத்தினும்விரும்பிப்பேசிடவுமவர்க
ணிணையப்பட்டதளித்திடவும்பொழுதுகழியுநினைப்பழியும். (கஉக)

ஒன்றும்பெறுதலிலரெனினுமுற்றபெருஞ்செல்வத்தினர்பாற்
சென்றுகொளுநட்புடையரெனத்தேயஞ்சொலற்கேசிலர்சூழ்வார்
மன்றவென்றும்பினுமொர்பயன்வழங்களாகுமெனமூட
றுன்றுநறுநெய்க்குடத்தெறும்புசூழ்தல்போலுஞ்சிலர்சூழ்வார்.

பொறையின்றேனும்பொறையுடையாய்புகழின்றேனும்புகழுடையா
நிறையின்றேனுநிறையுடையாய்நீதியுடையாயின்றேனுநற் [ய்
றுறையின்றேனுநற்றுறையுடையாயென்றுசூழ்வர்கேட்டவர்க
ளறைகின்றனர்பல்லோருநமக்கமைந்தவெலாமென்றகங்களிப்பர்.

களிபிற்றெய்வசிந்தனையுங்கழிந்தேநிற்குமதுகழிய
வளியிற்சிறந்தநல்லறமுமகன்றேநிற்குமஃதகல
வொளியிற்றிடவந்திருளடைந்தாங்குடற்றுப்பாவம்வந்தடையும்
விளியிற்கொடியநிரயமெலாம்புகுந்துகிடக்கும்வேலைமிகும். (கஉச)

உடற்றும் - வருத்தும். நிரயம் - நரகம்

அந்தநிரயக்கொடுந்துன்பமாரோபடுவார்நினைத்திடினும்
வெந்துபுழுங்காநின்றதுளமேவுமிவைக்குக்காரணமிப்
பந்தமுறுக்குஞ்செல்வமெனப்பயந்தானுயின்னனநினைந்தா
னிந்தவருத்தமிறத்துதிப்பேனெம்பிரானையெனத்துதிப்பான்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எழுதருமறையைக்கவர்ந்தனனுக்குமையறுத்தொக்கடல்புகுந்தொ
ளித்த, முழுவலிச்சோமகாசுரனுயிரைமுனைகெழுமீனமாய்ச்சவட்டி

ப், பழுதிலம்மறையையுலகிடைவிரித்துப்பளகறுத்துயிரெலாம்புரந் தாய், கொழுதிவண்டுழக்குநறுந்துழாய்ப்படலைக்கொற்றவநின்னடி போற்றி. (கஉசு)

கொழுதி - கிண்டி. துழாய்ப்படலை - துளசிமாலை.

எறிசெறிதரங்கப்பாற்கடனடுவணையாழ்வரைமத்தெனக் கூட்டித்
தறியெனமதியைநாட்டிவெண்பிறைப்பற்றழல்விழியரவநாண்பூட்டி
மறிதொழின்மறியச்சுரர்களடைகாலம்பர்தரங்கடலுழந்தாது
முறிவின்மோட்டாமையுருக்கொடுபரித்தமுன்னவநின்னடிபோற்றி.

தரங்கம் - அலை. தறி - தூண்.

மலர்தலைப்புவியைப்பாயலாச்சுருட்டியயங்குபாதலத்திடைக் கரந்த, விலகுபொற்கண்ணனுயிர்குடிப்பதற்குநிலைப்பினைப்புவிவி ரிப்பதற்கு, நிலவுவெண்பிறைக்கோட்டடல்வலிக்கேழனியிருருக் கொண்டவெம்பெரும, வலர்மகள்குடிகொண்டுறைபயமார்பதுதச் சுதநின்னடிபோற்றி. (கஉஅ)

பொற்கண்ணன் - இரணியாட்சன். கேழல் - பன்றி.

மலைத்தடநிறத்துமுன்னவனுபிணைமாட்டியபழிகொளக்கருதி, யலைத்தடற்றலைத்துச்சுரர்முதல்யார்க்குமச்சுறூத்திட்டது மன்றிப், புலைத்தொழிலுணர்வாற்றன்பெயர்வழுத்திப்போற்றவும்புரிந்தபொ ல்லானைக், கொலைத்தொழில்புரியத்தூண்கிழித்தெழுந்தகோளரிநின் னடிபோற்றி. (கஉகூ)

நிறம் - மார்பு. கோளரி - நரசிங்கம்,

பெருகியதவத்துக்காசிபனதிதிபிறங்குறுதந்தைதாயாகத்
திருகறத்தோன்றிமபதையிற்படிந்ததிறல்கெழுமாவலிபாற்சென்
றுருகியமனத்தின்மூவடிமண்கொண்டோரடிக்கிடப்பெறுமையினுன்
மருவவன்சிரத்தில்வைத்துயிர்புரந்தவாமனநின்னடிபோற்றி.

மாணுடைச்சமதக்கினியிரேணுகைக்குமகனெனத் தோன்றி மாமறையோர்ப், பேணுடைத்தலைகநடைநெறியிகந்துபெயர்ப்பரு ஞ்செருக்கினின்மூழ்குங், கோணுடைக்குரிசிற்குலமறச்சவட்டிக்கு லவுமம்மறையவர்ப்புரந்த, வேணுடைப்பரசிராமவைம்படைக்கை யிறையவநின்னடிபோற்றி. (கநுக)

மாண் - பெருமை.

தடநெடுமாடமாளிகையயோத்தித்தசரதன்கோசலைபகவா
வடல்கெழுபாயல்சங்குசக்கரமுந்தம்பியராயடிபரவத்
திடனுறத்தோன்றிக்கடுந்தொழிலரக்கிசேயொடுமிறச்சிலைவாங்கி
மடனிகுமுனிவன்மகத்தினைக்காத்தோர்மாதுகல்லுருவினையகற்றி.

பெருவளமிதிலைநகரகம்புகுந்துபெயர்க்கருங்கார்முகமிறுத்துக், குருமலர்நிறையப்பூத்தகொம்பன்னகோதையைமணந்துமீட்டயோத்தித்,திருநகரடைந்துதாயுரைதாங்கித்தேவியுந்தம்பியுந்தொடர, மருவியகளிப்பினநகர்நீங்கிமாண்பிறேனோர்கிராதனைநட்டு,

கார்முகம் - வில். கிராதன் - வேடன் (குகன்). நட்டு - சிநேகித்து.

தவப்பெருமுனிவர்குடிகொளும்பன்னசாலைகள்கடந்துவிண்டடவ
நிவப்புறுகுடுமிச்சித்திரகூடமடைந்தவணையத்தினிறுத்த
கவற்சிமிக்குடையபரதனுக்கினியகழறிப்பாதுகைகொடுத்தனுப்பி
யுவப்புறவெவருந்தண்டகம்புகுந்தங்குடன்றெழுவிராதனைமாட்டி.

பன்னசாலை - இலையால்வேய்ந்தகுடில். நிவப்பு - உயர்ச்சி. கவற்சி - துன்பம். பாதுகை - திருவடிநிலை. தண்டகம் - ஓர்வனம்.

திகழ்சரபங்கன்கருத்தினைமுடித்துச்செந்தமிழ்மணங்கமழ்செவ்வாய்ப், புகழ்முனியிருக்கையடைந்தவனொருவிப்பொலிபஞ்சவடித்தலமடையா,விகழ்வறுமெருவையிறைக்குளமகிழ்வித்திராவணற்கிளையவள்கலாங்கண், டகழ்தரப்போந்தகரன்முதலோரையடுதொழிற்கூற்றுணநல்கி. (௧௫௫)

'பஞ்சவடி - ஐந்து ஆலமரங்களையுடைய ஒருசோலை, இது கோதாவிரிநதிக்கரையிலுள்ளது. எருவை - கழுகு. எருவையிறை - கழுகரசு, (சடாயு)

மாயையினடைந்தவுழையுயிர்போக்கிமாதினைக்கவர்ந்தெழுமரக்கன், பாயவொள்வாளாற்சிறையறுப்புண்டபடர்புகழ்த் தாதையைக்கண்டு, மேயபல்கடனும்விதியுளிமுடித்துவிலக் கருங்கொடுந்தொழிற்கவந்த, ஞயவற்றொலைத்துச்சவரிபூசனை கொண்டகன்றுபோய் மதங்கவெற்படைந்து. (௧௫௬)

உழை - மான் (மாரீசன்)

கதிரவன்பயந்தமதலையைநட்டுக்கனந்தவழ்மராமரந்துளைத்து, முதிரொளிக்குலிசப்படையினன்மகனைமுனிந்தடல்புரிந்துலகடங்க, வதிர்தரத்திரியுஞ்சேனைதற்சூழவனுமனாலறிவதையறிந்திட், டெதிரறுகடற்கணொருசரம்புகுத்தியியங்குறநடவையுண்டாக்கி. (௧௫௭)

கதிரவன்பயந்தமதலை - சுக்கிரீவன், கனம் - மேகம். குலிசப்படை - வச்சிராயுதம்.

இலங்கையுட்புகுந்துதசமுகனவனுக்கிளவல்விண்ணிறையவன்பகைமுற், பொலங்கழன்மைந்தர்மற்றையோரையும்வெம்போர்க்களத்தவித்துவீடணற்கு, நலங்கெழுமுரிமையரசளித்துலகினுட்டுகற்பரசியைமீட்டு,நிலம்புகழயோத்தியடைந்தரசளித்தவிராகவநின்னடிபோற்றி. (௧௫௮)

விண்இறையவன்பகை - இந்திரசித்து.

மல்லலம்புவனம்புகழ்வசுதேவன்மயிலியற்றேவகிபிறருக், கொல்லரும்வனப்பினுரோகணியிவர்கட்கொருமகவாவவதரித்துக், கொல்லுமாகுறித்தபிரலம்பன்முதலோர்க்கூற்றுணக்கொடுத்துயிர் புரக்குஞ், சொல்லருஞ்சீர்த்திப்பளிக்குருவமைந்தூயவகின்னடிபோற்றி

பாவடிக்களிற்றுப்படையுடைக்கஞ்சன்பரித்துறைமதுராமாநகரி
லாவணித்திங்களள்ளிருட்பக்கத்தட்டமிதனிலருங்கற்பின்
மாவகிர்க்கருங்கட்டேவகிவயிறுவாய்த்திடக்காற்செறிகழன்று
மேவுறப்பணிந்தபுகழ்வசுதேவன்மென்மலர்த்தடங்கரமடைந்து.

இருட்பக்கம் - கிருஷ்ணபக்ஷம்.

காவல்செய்புதவும்யமுனையுநடைவைகடிதினிதிருவிடையுதவக்
கோவலர்பாடிநந்தகோன்மனையிற்கோதிலகற்பசோதையீன்றெடுத்
மாவலர்கதுப்பின்மாயைதானபிறந்தபனையுறப்போக்குபுகுந்து[த
தாவருங்கிழ்ச்சியாவருமடையத்தடையுறவளர்தருநாளில் (கசக)

மாயையினறிந்தமாதுலன்விடுக்கவந்தபூதனையுயிர்சவட்டிப், பாயமென்சுவையபண்ணிகாரப்பெய்பண்டிநாண்டுகள்படவுதைத்து, வாயுவிற்சுழன்றுகொண்டுசெலரக்கன்மாய்தரநிலத்திடைவீழ்த்தி, யாய்தொடிப்புகழ்த்தாய்காணியதன்னுளடங்கலுங்காட்டுபுமறைத்து.

நந்தகோன்றடக்கைபற்றுபுகுறுததாள்பெயர்த்துமென்மெலநடந்துலவிச், சநதமார் தாதைசொற்படிவந்தவேதியன்றருபெயர்பெற்றுச், செந்துவர்க்கனிவாயன்னைபாலருந்தர்சேர்த்துபுவெண்டயிருடைக்கு, மநதவேலையிற்பால்பொங்குபுவழிதலாற்றுவானகன்றமைநோக்கி. (கசங)

அவ்விடத்திருந்தவெண்டயிர்க்குழிசியனைத்தையுமத்திறனுடைத்துச், செவ்வியவலையைத்திரட்டியுண்டடுத்தசெழுமனைப்புகுந்துறிவெண்ணெய், வவ்வுதற்குரன்மேனின்றுகன்மோதிவாய்ப்பெய்து பூசைக்குங்கொடுத்துக், கொவ்வையங்கனிவாயன்னைமென்றும்பாற்குழிசெறிகறையொடுபிணிப்ப. (கசச)

குழிசி - பானை, கறை - உரல், பூசை - பூனை.

மருதிரண்டொடியவீர்த்திடைத்தவழ்ந்துமற்றவைபாற்றியபின்னர்க்
கருதுறுபிருந்தாவனமடைந்துகளுங்கற்றினமேய்த்திடுநாளி
லொருகருங்கன்றுகொடுவிளவெறிந்தங்குற்றபுள்வாய்கிழித்தரவப்
பெருகியசாபந்தொலைத்திடைச்சிறுர்கள்பெட்புறவாற்றுணவுண்டு.

ஆற்றுணு - கட்டமுது.

மலர்மகன்கவர்ந்தகற்றினஞ்சிறுவர்மாயையிற்பண்டுபோலாக்கிக்
கலவியவிடநீருண்டுடறுறந்தவுயிர்களுய்ந்திடக்கடைக்கண்பார்த்
தலகிறீக்கொடுமைக்கட்செவிப்பணத்திலடித்தலநிறுத்துப்புநடித்துக்
குலவுறுதந்தையாய்ச்சிறார்தம்மைவளைவனக்கொழுந்தழலயின்று.

பனிநிலாமுறுவலாய்ச்சியர்மயங்கப்பவளவாய்வேய்ங்குழல்வைத்துக்
கனிநலத்தவர்நீராட்டயர்காலைக்கலையெலாங்கவர்ந்திணர்க்குருந்தி
னினிதுறவேறிக்கரைமிசையிவர்ந்தோர்க்கெடுத்தெடுத்தந்துகிலீந்து
நனிமலர்ச்சோலையகம்புறமுருவம்பலகொடன்னவர்நலமுண்டு.

தவம்பயின்முனிவர்பன்னியரளித்தசமைந்தவின்சுவையுணவினை
யுண், டுவந்துவாசவன்கொள்பூசையைத்தான்கொண்டுறுமழைவரை
கொடுதடுத்துச், சிவந்தகண்ணசுரன்கொடுசெலுந்தந்தைதிருமுறமீட்
டுமற்றவனும், நிவந்தவண்டர்களுங்காணவைகுந்தங்காட்டுபொளுரேலெ
னமறைத்து. (௧௪௮)

இரும்பசுக்காவல்செய்யுமாவயினல்லிராதைதன்னெழினலங் கவர்ந்து
விரும்புபன்மாதர்குழாத்தொடும்பாடிமேவுபுதந்தையைக்கவரு
மரும்புபல்லரவைக்கான்மிதித்தகற்றியமைதருகானமீட்டடைந்து
வரும்பெருஞ்சங்கசூடனைமாய்த்துமணியினைமுன்னவற்களித்து.

நாரதமுனிவன்சொற்கொடுகஞ்சன்செலுத்திடநண்ணியகேசி
யார்தருபற்றோருயிர்குடித்தன்னனமர்தருமதுரையையடைந்து
சார்தருமீரங்கொல்லியைத்தடியாவெழில்கலன்றந்தவற்குதவி
யீர்மதுக்கண்ணியன்புடனளித்தாற்கினியதனின்பவீடளித்து. (௧௫௦)

ஈரங்கொல்லி - வண்ணான்.

சாந்தநன்களித்தகூனியையணங்காச்சமைத்துடன்வேத்தவை
புகுந்து, காந்தெரிகவிழ்க்குங்கட்கடைக்களிறுகல்லடுதிணிபுயமல்
லர், நாந்தகவாண்மைக்கஞ்சனைமுன்னோர்நடுங்கியுள்ளுயிர்விடக்கடி
ந்து, வாய்ந்தநன்பெருஞ்சீருக்கிரசேனற்கரசுரிமைத்திறம்வகுத்து.

தந்தையுண்மகிழ்ந்துநூற்கடிமுதலாஞ்சடங்குகளியற்றுவித் தி
டனு, மைந்துடையுணர்ச்சிச்சாந்திபற்சார்ந்துமறைமுதற்கலையெ
லாமுணர்ந்து, வெந்திறலவுணன்வளைநிறங்கிழித்துவிரிகதிர்ச்சங்க
மொன்றெடுத்து, முந்தைநாளிறந்தமதலையைமீட்டாசாரியன்றேவி
முன்வைத்து. (௧௫௨)

கோவியர்த்தேற்றவுத்தவற்போக்கிக் கூனிதன்னிளநலநுகர்ந்
திட், டேவியல்சாபத்திரிதராட்டிரன்பாலிற்குமக்குரூரனைப்போக்கி

மாவியற்றானைச்சராசந்தனோடமண்டமர்பதினெழுமுறைசெய், தோ
லியப்புரிசைமதுரையைமுனிவினுந்துகாலயவனன்வளைப்ப.

ஆர்திரைப்புணரிநடுவண்வண்டுவரையணிநகரொன்றுளதாக்
கிப், போரினுக்காற்றான்போல்விரைந்தோடிப்பொங்குசீர்முசுகுந்த
னுறங்கு, மோர்வரைக்குகையுட் புகுந்தவனாற்றெவ்வுடல்பொடிப்
பித்துமுன்னவனோ, டேர்கெழுமதுரைநின்றுவண்டுவரைக்கேகுழிச்
சராசந்தன்வளைப்ப. (௧௫௪)

அவற்குமஞ்சினன்போன்முன்னொடுமாங்கோரணிவரையிவர்ந்
தழல்சூழக், கவற்சியின்றாகிவிரைந்துகுப்புற்றுக்கடிமதிற்றுவரையை
யடைந்து, நவத்தளிர்ப்பொழில்சூழ்விதர்ப்பநாட்டரசனங்கைமுன்
னோனுரைக்கஞ்சி, நிவப்புறவிடுத்ததூதுகண்டாங்குஞெரேலெனத்
தேர்மிசைச்சென்று. (௧௫௫)

வரந்தருகவுரிதிருவடிவணங்கிமாமலர்ச்சோலையினின்ற [ட்டி
பரந்தபேருண்கட்கன்னியைக்கவர்ந்துபகைத்தமன்னவர்களை யோ
யரந்தடிநெடுவேலுருக்குமன்குடுமியரிந்துவண்டுவரையையடைந்து
சுரந்தருளுருக்குமணிபெறுமைந்தன்றெடுகடன்மீன்வயிறடைந்து.

இரதியைச்சார்ந்துவளர்ந்தவணலனுண்டேற்றிகற்சம்பரற்றொ
லைத்துக், குரவலர்குழலியொடுதுவாரகையிற்புகுந்திடப்பெருமகிழ்
கூர்ந்து, பரவுசத்திராசித்திரவிபாற்பெறுபொன்பயந்திடுமணிபிர
சேனன், கரமலரளிப்பக்கோளரிகவரப்பின்னரோர்கரடிகைக் கவ
ர்ந்து. (௧௫௭)

பிலத்திடையடைந்துமகடுயிலிடத்துவைத்திடப்பெரும்பழித
னக்கு, நிலத்திடைவருதனோக்கியப்பிலத்தைநேர்ந்துசாம்பவனொடு
பொருது, வெலத்தகுவாகையொடுமவன்மகளைமணியினைக்கைக்கொ
டுமீண்டு, வலத்தவனுயசத்திராசித்துக்கம்மணிநல்கிடமகிழ்ந்து.

எழினலங்கனிந்தசத்தியபாமைதனைமணியொடுமுவந்தீயக், கழி
மகிழ்சிறந்துமணியையம்மாமன்கையளித்தறன்மகன்முதலோ, ரொ
ழிவுறத்துபரமன்னவர்பாற்சென்றுறையு நாண்மாமனைக் கடிந்தாங்,
கழிவிலம்மணிகைக்கொள்சததநுவாவாருயிரிறத்தொலைத்தகற்றி.

மழைவளஞ்சுரப்பவக்ரூரன்செம்மணியொடுவந்துகண்டிடலுந்
தழைமகிழ்சிறந்தம்மணியினையவர்க்கேதருசெழுப்பொற்றிரளெல்லா
முழைமருணயர்ச்சத்தியபாமைக்குதவுகவென்றினிதளித்து
விழைகள்வார்கூந்தற்சுபத்திரைதன்னைமேகவாகனன்மகற்கீந்து.

மேகவாகனன்மகன் - அருச்சுனன்.

எரிமணிமாடவிந்திரப்பிரத்தமெய்துபுதனஞ்சயனோடு
மரில்படுகானில்வேட்டமாடிடுங்காலமிழ்தெனவின்னிசைபாடும்
வரிநெடுந்தடங்கட்காளிந்தியின்பமருவிவண்டுவரையையடைந்து
விரிபெருமபுகழ்சாலவந்தியனளித்தமித்திரவிந்தையைக்கவர்ந்து.

அரவுயர்கொடியோனுதியோருள்ளமச்சுறவில்வளைத்தமர்த்துப்
புரவுபூண்டுயருங்கோசலத்தரசன்போர்விடையேழையுந்தழுவிக்
குரவுவார்கூந்தற்சத்தியைமணந்துகுலவுறுகேகயத்தரச
னுரவுளத்தவனும்மன்றல்செய்தளிப்பவுற்றபத்திரைநலநுகர்ந்து.

இலங்குமத்திரத்திற்கயற்குறிதப்பாதெய்திலக்கணைமணம்புணர்ந்து, வலங்கொளுநரகற்கொன்றுவச்சிரத்தோன்மனக்குறைமுடித்தினிதருளிப். பிலங்கொளாங்கிருந்தவொருபதினாயிரமடவார்பெரும்போகந், துலங்குறவிரும்பிச்சத்தியபாமைதொழுதிடவைந்தருநல்கி. (கசுரு)

ஆம்பலங்குதலைவாய்மொழிமைந்தரளவிலர்தோன்றிடக் களித்துத், தேம்பலின்மைந்தன்மகற்சிறைபுரிந்ததிறலினன்கைத்தலஞ்சிதைத்துக், கோம்பியாய்க்கிடந்தோன்பாதகந்தவிர்த்துக்குலவியகாசிமன்னனையும்,பாம்பணைப்பரன்யானேயெனத்தோன்றும்பவுண்டரவாசுதேவனையும். (கசுச)

கோம்பி - பச்சோந்தி.

உயிர்குடித்தந்தவாரணவாசியொன்னலன்மகன்விடுபூதஞ்
செயிருறத்துரந்துசுயோதனன்கன்னிசெழுநலநுகர்ந்திருட்கவர்ந்த
வயிரவாட்சாம்பன்சிறையைமுன்னோன்போய்மீட்டுவந்திடமகிழ்சிற
பயிலும்யாழ்முனிவன்கண்டிடப்பதினாறாயிரந்திருவுருக்காட்டி. [ந்து
மல்லுயர்திணிதோட்சராசந்தனுடலம்வகிர்ந்திடுகான்மகனறியப்
புல்லினைக்கிழித்துப்பற்பனுள்வருந்துபுரவலர்சிறைவிடுவித்து
நல்லறமைந்தனிராசசூயத்தினடைபிறழ்சேதிபற்றடிந்து
வல்லசானுவனைத்தந்தவக்கிரனைவலங்கெழுபடையொடுஞ்செகுத்து

கான்மகன் - வாயுபுத்திரன் (பீமன்) அறமைந்தன் - தருமபுத்திரன், சேதிபன் - சிசுபாலன.

விறன்மிகுவிசயன்வாவுமான்றடந்தேர்ப்பாகனாய்நடத்திவீடுமன்முற்
றிறன்மிகுவேந்தரைவரான்மடியச்செய்துபூபாரமுங்கழிப்பி
யறன்மகற்கரசுநல்கியென்கந்தையகம்பொதியவலுந்தின்றளித்த
நிறன்மிகுகமலக்கண்ணுடைக்கண்ணநின்மலநின்னடிபோற்றி.

இமையவர்துதிக்கப்படியிடைப்பரியாயினிவருமெய்ப்பிரான்போற்றி, யமைதருமறையுங்காணொணைப்பொருளாயகிலமுபாயவ போற்றி, யிமையளவினிற்கைவரைமுறையிடச்சென்றினிதருள்சுரந்தவ போற்றி,கமைதருமன்பரெண்ணியாங்களிக்குங்கமலநாயகவடிபோற்றி. (௧௬௮)

கைவரை - யானை (கஜேந்திராழ்வான்.)

எனத்துதிமுழக்கிக்கண்களிரரும்பவிருகரஞ்சென்னிமேற்குவியக், கனத்திருமறைநாலுணர்ச்சிமிக்குடையகாமருகுசேலமாமுனிவ, னுனற்கரியவனென்றனக்கினிதருளவுறுங்கொலோவென்றுநெக்குருகி, மனக்கசிவுறுங்கான்மனத்திலுங்கடுகியாமறைப்பிரான்வெளிவருமால். (௧௬௯)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னுருமணிமகுடம்பசியவனமுகட்டெழுசெப்பொன்னையேய்ப்ப,மின்னுருமிருசெவியினமணிமகரகுண்டலம்வில்வீசியாட,வொன்னார்தமுயிர்குடிக்குமெறுழ்வலித்தோளங்கதச்செவ்வொளிமேலோங்கத்,தென்னாக்கதிர்கிழும்பாய்ந்தெனவுத்தரியந்திகழாநிற்க.

காமருநன்னெறிநடப்பவறந்தழைப்பவெவ்வுயிருங் களிப்பின்மேவ, மாமறையையவடித்துவிரித்தினிதுரைத்ததிருமலர்ச் செவ்வாய்க்குண்டாய, தோமறுவண்பெரும்புகழிற்சிறிதுவெளிப்பட்டலவுதோற்றமேய்ப்ப, வேமமுறுகுறுமூரல்வெள்ளொன்றுசிறிதரும்பியிலகாநிற்க. (௧௭௧)

கொங்கவிழுநறுமலர்கொண்டருச்சித்துமுளநினைந்துங்குடதம்பட்டுப், பங்கமறுபஃறுதிகண்முழக்கியுமிவ்வாறுவழிபடலோவாது, கங்குல்பகனிற்போர்கணனிமூழ்கியின்படையக்கமலக் கண்கள், பொங்குமருட்பெருவெள்ளந்திரையெறிந்துகரைபுரளப்பொழியாநிற்க. (௧௭௨)

தங்கள்குலம்விளக்கியபேரிருங்கருணைதெரிந்துவகை தழைப்பநாளு, மங்குதலிலிவன்பாலேயுறைவமெனப்பகலிரவுமருவத்தோன்றுஞ், செங்கதிரும்வெண்கதிரும்வலத்துமிடத்தினுமமர்ந்தசெவ்வியேய்ப்பப், பொங்குகதிர்த்திகிரியுஞ்சங்கமுமிருகைத்தலத்துநனிபொலியாநிற்க. (௧௭௩)

மன்பதைகண்முறையிடாதஞ்சலெனவெடுத்தபயம்வழங்குங்கையுங், கொன்பரவுமுலகமெலாமுள்ளடியோர்புறத்துறநீள்குளிர்

பூந்தாளி, லன்புறுகவெனவரதங்காட்டுமொருதிருக்கையுமப்போது
பூத்த, தென்பரவுநன்பவளவம்புயமுஞ்சமழ்ப்பவெழில்சிறவாநிற்க.

மன்பதை - மக்கட்கூட்டம்.

அரியதவங்குயின்றுநெடுங்காலம்வயிறுளைந்தீன்றவணங்கை யீ
ந்து, விரியதிர்வெண்டிரைத்திருப்பாற்கடலளித்த வரிசையைப்பால்
விலகினூந், தெரியவருஞ்சிற்றிடையத்திருவுறையுளமைத்தல்பெரு
ஞ்சீர்த்தியென்று, கரியநிறத்திடையமைத்தகவுத்துவ மாமணிக்கற்
றைகளுலாநிற்க. (கஎரு)

குயின்று - செய்து, நிறத்திடை - மார்பில்.

ஆடமைத்தோட்செங்கனிவாய்க்கருங் கூந்தலயிலனுக்கியம்ப
லைக்கு, மோடரிக்கட்டிருமடந்தைமணிகாலும்வெயில்வருத்த முறு
தொதுங்க, நீடமைத்த விளஞ்சோலையெனத்தழைந்துமணங்கான்
றுநிலவுமென்பூந், தோடமைத்த பசுந்துளபத்தொடையலளிக்குல்
மூணத்தேன்றுளியாநிற்க. (கஎசு)

அனுக்கி - வருத்தி, காலும் - உமிழ்கின்ற.

நிலங்காவலொருவன்விடுகளியானைக்கோட்டினுக்குநிகருமெண்ணி
லலங்காரமடமாதருழூதுழக்கிங்கலக்கியமராடவுய்க்கு [டிற்குங்
மிலங்காரமணிந்துபணைத்திறுகியண்ணுந்தெழுந்தமுலையிருங்கோட்
கலங்காதநிறப்பிரதாபம்போலச்செஞ்சாந்துகளுலாநிற்க.

களுலாநிற்க - விளங்காநிற்க.

திருவரையிற்கொய்துவிரித்தலங்காரம்பெறவுடுத்தசெம்பொனு
டை, யுருகெழுசெங்கதிருதரபந்தனம்பொன்னிரட்டைநாணொளிரா
நிற்க. விருபுடையுங்கருங்குழல்வெண்ணகைச்செவ்வாய்த்தேவிய
ரெண்மர்களுஞ்சூழக், கருமுகிலொன்றொளிர்மின்னற்காடுவளாயெ
திர்காட்சிகதியாநிற்க. (கஎஅ)

உதரபந்தனம் - அரைப்பட்டிகை.

வயங்கெழுதுந்துபியைந்துங்காருநெடுங்கடலுமெனவாய்விட்
டார்ப்ப, நயங்கெழுபூமழையமரர்பொழிதரவிண்ணரமகளிர்நடியா
நிற்க, மயங்கெழுநல்லறந்தழைப்பவுலகுகுதுகலிப்பவெளிவந்துநின்
றுன், பயங்கெழுமாமறைப்பொருளாயம்மறைக்குமெட்டாதபடிவத்
தண்ணல். (கஎகூ)

குதுகலிப்ப - சந்தோஷிக்க, படிவம் - உருவம்.

### மேற்படி - வேறு.

காண்டலும்விரைந்தெழுந்துகரையுடைத்தெழுநீத்தம்போன்
மாண்டதாய்வரவுகண்டமழவிளங்கோதனம்போற்
றாண்டுதன்மனமும்பிந்தத்துணைவியினோடியன்பு
பூண்டவர்க்குரியதாண்மேற்பொள்ளெனவீழ்ந்தெழுந்து. (க௭௦)

கோதனம் - கன்று.

முடிமிசைக்கரங்கூப்பாமும்முறைபிரதக்கணஞ்செய்
தடிமிசையன்புபொங்கவானந்தக்கண்ணீர்வாரப்
படிமிசைக்கிடத்துந்தண்டின்பரிசெனமீட்டுப்வீழ்ந்து
நொடிமிசையெழுந்துதுள்ளிநோற்றுளோம்யாமேயென்று. (க௭௧)

பூசனைசிறப்பிற்செய்துபொருந்துபாத்தியமுனீந்து
நேசமிக்கூறிப்பொங்கநேர்நின்றுகுடந்தப்பட்டு
வாசநன்கங்கைபங்கன்வதியிடம்வந்ததொத்த
தாசறுநினதுகாட்சியையவென்றினையசொல்வான். (க௭௨)

பாத்தியம் - கால்கழுவுநீர், பங்கன் - முடவன்.

அறமிகுதலங்கள்சார்ந்துமாரணியங்கள்சார்ந்து
நிறமிகுவரைகள்சார்ந்துநெடியநாளிருந்தூணின்றி
மறமிகுபொறியைவாட்டிவளர்தவம்புரிவார்க்கன்றிப்
புறமிகும்பாவியேற்குங்கிடைத்ததேபுகழ்சால்காட்சி.

இலகுநான்மறைகளோலமோலமென்றெண்ணினுள்க
ளலறிவாயிளைத்துங்காண்டற்கரியநின்னணிகூர்காட்சி
கலகமார்வினைகள்கோட்பட்டுக்கலங்குபுமருளின்மூழ்கும்
புலனிலாயானுங்காணக்கிடைத்ததுபுதுமையைய. (க௭௪)

என்றினிதருளிச்செய்யவெழுந்தருள்வான்கொலென்று
பொன்றலிறவத்தின்மேலாய்ப்புண்ணியம்பழுத்தமேலோர்
துன்றிநிற்கின்றொல்லாநிற்கவுள்ளகத்தாய்தன்மை
கொன்றிலேற்பொருளாக்கொண்டகருணையைக்குறிக்கொணாதே.

பழையநான்மறையுமோர்ந்தபங்கயத்தவனுங்காணாத்
தழையுமிக்காட்சிகாணப்பெற்றுளத்தண்மைபூண்டோர்
விழையுமோரின்பம்பெற்றேன்விருப்பினீபெறமேன்பாலென்
மழைபெறும்பொருளுமுண்டோவையத்துவாழ்வார்மாட்டு. (க௭௫)

தழலராத்தலையில்வைத்துநடித்தும்வெஞ்சகடுதைத்து
நிழலில்கானடந்துமுன்னமபழக்கினைநின்பொற்றாளை

யழல்செயுமடியேனெஞ்சத்தமைத்திடுகிமித்தங்கொல்லோ
கழறராவினையினேனின்றறிந்தனன்கடவுளேறே. (௧௮௭)

புன்றொழிலடியேனுள்ளம்போருகப்பாதம்வைப்பிற்
கன்றுதலின்றிமுன்னைப்பழக்கத்தாற்கலங்காதாற்று
மென்றளிர்மேனிப்பூமேல்விளங்கிழைத்தாயர்கைகட்
கொன்றுமப்பாதவெப்பமுறுமெனவஞ்சுகின்றேன். (௧௮௮)

என்றுபற்பலவும்பேசிப்பிருந்தழலிட்டவெண்ணெ
யொன்றியகருங்கலென்னவுள்ளநெக்குருகநேரோ
நின்றவர்தணைநோக்கிநெடியமால்கருணைபூத்து
வென்றிபாதவத்தரோறேவேட்டதென்னுவறியென்றான். (௧௮௯)

அடியனேனுய்ந்தேனென்னவங்கைகளிரண்டுங்கூப்பி
முடிமிசையேற்றிநின்றுமுதறிவுடையோர்கொள்ளாக்
கொடியவிச்செல்வமொன்றேகுணிப்பறும்பவத்திற்கேது
படியறவாயிலின்பம்பயப்பதெட்டுணையுமின்றால். (௧௯௦)

எட்டுணையும் - எள்ளளவும், (எள் - துணை) படியற - ஒப்பற.

மனமொழியுடலமென்னவகுத்திடுகரணமூன்றுந்
தினமுநின்றிருவடிக்கேசெலுத்துநாயடியேனிந்தக்
கனவெனுஞ்செல்வத்தாழ்ந்தோகளித்துநாள்கழியாநிற்ப
னுனதடியவர்பூந்தாளிலுறப்பணிந்துய்தனீங்கி. (௧௯௧)

முன்னரேவெறுத்துவேண்டாவிதுவெனமுனிந்துசெல்வம்
பின்னர்கைக்கொள்வேனாகிற்பேரறிவுடையனன்றே
யன்னதுமன்றிக்கொண்டவிரதமுமழித்தானேனே
னன்னர்நெஞ்சுடையநீரார்நகைக்குநாணுதுநின்றேன். (௧௯௨)

நன்னர் - நன்மை.

உடலழுக்ககற்றத்தூநீருற்றவனள்ளல்வாரி
யிடனுறப்பூசிக்கொள்வான்கொல்லிருகாலும்யாத்த
தொடர்செய்பொன்னிகளஞ்சீக்கத்துணிந்தவனிரும்பாற்செய்யப்
படுபெருநிகளம்பூண்டுகொள்வனோபாரிடத்து. (௧௯௩)

அள்ளல் - சேறு, யாத்த - கட்டின, நிகளம் - விலங்கு.

ஆதலாலையவிந்தவநித்தியச்செல்வம்வேண்டேன்
மேதகமுன்னிருந்தமிடியதேயினனும்வேண்டுங்
காதலினடியார்வேண்டுங்காரியமளித்துக்காக்கு
நீதயைபுரிந்தென்னுள்ளக்கருத்தினைநிரப்புகென்றான். (௧௯௪)

அல்கலிலன்பன்வார்த்தையனைத்தையுஞ்செவிமடுத்து
மல்குமாமறைகட்கெட்டாமாயவன்முறுவல்பூத்துப்
பல்குநன்பொருள்வேண்டாதுபயனின்றிக்கழிந்ததீய
நல்குரவளித்தியென்றகாரணநவிற்றுகென்றான். (௧௯௫)

தெள்ளுகாரணந்தான்முன்னர்ச்செய்தவிண்ணப்பத்தாலே
வெள்ளிடைவிலங்கல்போலவிளங்குபுகிடந்ததைய
வுள்ளுதன்முதலயாவுமியல்பினினுணராநிற்கும்
வள்ளனீயறியான்போலவினவுதன்மாட்சித்தேயோ. (௧௯௬)

விலங்கல் - மலை.

செய்யநின்னடித்தியானஞ்செய்துநாள்கழியாநிற்பேற்
கையவீதிடையூறாகியடைந்ததிங்கிதனைப்போற்றிப்
பொய்படுபவஞ்சவாழ்க்கைப்புலைத்தொழிற்பாரம்பூண்டு
நைபடுமுள்ளத்தேனாய்நாடொறுங்கழிதனன்றே. (௧௯௭)

பவஞ்சம் - பிரபஞ்சம்.

எம்பிரான்கருணைசெய்கவென்றிரந்தடியில்வீழ்ந்தான்
வெம்புறேல்கவலையெல்லாம்விடுதியென்றுடலந்தைவந்
தும்பரார்க்கரியவின்பமுறுவையென்றுரைக்கலுற்றான்
றும்பிகாலுழக்கமட்டுத்துளித்திடுந்துளபத்தாரான். (௧௯௮)

தைவந்து - தடவி, தும்பி - வண்டு.

திருவநன்களித்ததுன்னைச்சேர்ந்தவர்நிமித்தங்கண்டா
யொருவினின்னுளம்போலன்னாருள்ளமுந்துறவிற்றேயோ
மருவிநிற்சார்ந்தார்துன்பின்வயங்குதல்பூகிதாபோ
பொருவிலாமுனிவரேறேயஃதெண்ணிப்புந்திமாழ்கேல். (௧௯௯)

மெய்ப்பொருளுணர்ந்ததூயோர்பேவியெங்குறைவரேனும்
பொய்ப்பொருள்பற்றுவாரோபொய்ப்பொருளேனும்வந்து
கைப்படப்பற்றுங்கொல்லோவவரையஃதகத்துக்கண்டாய்
வைப்பெனநமதுபூசைவாஞ்சித்துவயங்குபேலோய். (௨௦௦)

நின்னையச்செல்வமென்றேசெய்யுநேரதகத்தோடு
பன்னுமந்திரமுள்ளாரைப்பாம்பின்வாய்விடமென்செய்யு
மன்னுசெங்கதிரோன்றன்னைமயங்கிருட்குழாமென்செய்யு
முன்னிலைதவறுதென்றுமொருபடித்தாய்நிற்பாயால். (௨௦௧)

அதகம் - சஞ்சீவி, மருந்து.

சாற்றுமெய்யறிவினோர்கடகுதொழிலியற்றுங்காலை
மாற்றுதலின்றாய்த்தாந்தாமரையிலைநீர்போனிற்பர்
போற்றுநின்றனக்கிப்பந்தப்பொருந்தாதுபன்னாள்வாழ்வுற்
றீற்றுநம்முலகஞ்சார்ந்தின்பெய்திடவரந்தந்தேமால். (௨௦௨)

திகழ்தரவிருத்திமீட்டுஞ்செல்வம்வேண்டுவதின்றென்னிற்
புகழ்தருநந்தங்காதற்பொன்னைநீயிகழ்ந்தோனை
யிகழ்வினுக்கஞ்சியன்னாளிரிதரவிரிவப்யாமு
மகழ்வினைத்தவத்தின்பேலோயமுத்திடிவ்வுளையையுள்ளம். (௨௦௩)

என்றவன்மறுதவண்ணமினையபல்வார்த்தைகூறி
யொன்றரும்பேறுநல்கிமறைந்தனனுவணப்பாகன்

வென்றியங்கழற்கால்வேந்தேமேதினியிடத்தியார்க்கேனு
மன்றவுண்டாகுந்தெய்வவலிக்கெதிர்வலியுமுண்டோ. (௨0௪)

பாம்பணைப்பள்ளிமேவும்பண்ணவன்மறைதனோடுந்
தேம்பலிற்றவிர்ந்தசிந்தைத்தெய்வமாமுனிவர்கோமா
னோம்படைப்பெருமானுள்ளமுற்றதிவ்வாறேயென்று
கூம்பலிற்பெயராக்கையனாய்க்களிகூர்ந்திருந்தான். (௨0௫)

நீருறப்பயின்றுமுள்ளநீருறுக்கிடையேபோலப்
பாருறவுற்றுஞ்சற்றும்பற்றிலானாகியன்பர்க்
கேருறவாயகண்ணனிணையடிக்குறவுபூண்டு
தாருறவுற்றதோளாய்சாலநாள்கழியவாழ்ந்தான், (௨0௬)

ஒப்பிலாமுனிவன்பின்னரொருதினம்வானநாடர்
வெப்பிலாக்கற்பகப்பூவினாலெழுமாரிபெய்ய
வைப்பின்மெய்யடியார்க்காயவைகுந்தவுலகஞ்சார்ந்து
திப்பியவுருவமாயன்சேவைசெய்தின்புற்றானே. (௨0௭)

எதிர்பொருமரசரேறேயிக்கதையெழுதிவைப்போர்
பொதிதருமன்பிற்கேட்போர்பூசிப்போர்படிப்போர்யாருங்
கதிர்தருசெல்வம்பெற்றுக்கான்முளைபல்கவாழ்ந்து
மதிநலம்படைத்துப்பின்னர்வான்கதியடைந்துவாழ்வார். (௨0௮)

கலிவிருத்தம்.

என்றுரைத்தமுனிவனிணையடி
யொன்றுமன்பின்வணங்கியுவந்தெழீஇத்
துன்றுமிக்கதைகேட்டின்பந்தோய்ந்தனன்
மன்றவென்றுரைத்தான்புவிமன்னவன். (௨0௯)

மன்னுமாமறைவாழிமறையவர்
பன்னுமான்முகில்வாழிநற்பார்த்திபர்
மின்னுநீதியும்வாழிமிகுநல
மென்னுமிக்கதையின்றமிழ்வாழியே. (௨௧0)

மூன்றாவது

## குசேலர் செல்வநுகர்ந்து

## வைகுந்தமடைந்தவத்தியாயம் முற்றிற்று

ஆகச் செய்யுள் - ௭௱௯,

**குசேலமுனிவர் திருவடிகளேசரணம்,**